Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28

விலை 30 ரூபா

சுடர் :35 கதிர் :16 கார்த்திகை 26ஆம் நாள் வியாழக்கிழமை 12 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

## காவு வாங்கும் காய்ச்சல்!

யாழ்ப்பாணம், டிசெ. 12
காய்ச்சால் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட குடும்பத் தலைவர் ஒருவர் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார்.
பொன்னாலை, சுழிபுரத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சண்முகநாதன் ராசகிருஸ்ணன் (வயது 41) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
கடந்த 8ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ராசகிருஷ்ணன் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு தொடர்ந்தும் சிகிச்சை வழங்கப்பட்டுள் 25 ➤

## பாரதிக்கு வயது 137!

யாழ்ப்பாணம், டிசெ. 12
மகாகவி பாரதியாரின் 137ஆவது பிறந்த தினம் யாழ்ப்பாணத்தில் நேற்றுக் கொண்டாடப்பட்டது.
யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் நல்லூரிலுள்ள பாரதியார் சிலையடிக்கு முன்னால் நிகழ்வு இடம்பெற்றது. பாரதியாரின் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டது. மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. பாரதியார் பாடலும் இசைக்கப்பட்டது.
நிகழ்வில் யாழ். இந்தியத் துணை தூதுவர். கே.பாலச் சந் 25 ➤

### முச்சந்தி முரளி



"இந்த ஜெரேமி ஹோர்மின் நிக்கிறது பிரிட்டன் தேர்தலியா? இல்லாட்டி வட மாகாண சபைத் தேர்தலியா?"

# ஆட்சிக்கு வந்தவுடன் தமிழருக்கு சுயாட்சி

## ஹோர்பின் வாக்குறுதி



லண்டன், டிசெம்பர், 12
நான் ஆட்சிக்கு வந்தால், இலங்கைத் தமிழ் மக்களுக் குச் சுயாட்சியைப் பெற்றுக்கொடுப்பேன் என்று தெரிவித்துள்ளார் பிரிட்டனின் லேபர் கட்சியின் தலைவர் ஜெரேமி ஹோர்பின். 25 ➤



கருத்தோவியம்: காண்டி

## ரயில் மோதி ஒருவர் பலி!

யாழ், டிசெ. 12
ரயில் மோதி நபரொருவர் உயிரிழந்தார்.
நேற்று நண்பகல் வேளையில் காங்கேசன்துறையில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த ரயிலுடனே மேற்படி நபர் மோதுண்டார். பலமான காயங்களுடன் அவர் மீட்கப்பட்டு யாழ்ப்பாணம் 25 ➤

## பாதுகாப்புச் செயலர் இன்று யாழ் வருகை!

யாழ்ப்பாணம், டிசெ. 12
இலங்கை பாதுகாப்பு அமைச்சின் புதிய செயலராக நியமிக்கப்பட்ட கமால் குணரத்ன இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளார். 25 ➤

## கோண்டாவில் கொலை

# எடுக்கப்பட்டது! குருதி மாதிரி!

யாழ்ப்பாணம், டிசெ. 12
கோண்டாவிலில் தனிமையில் வசித்த வயோதிபப் பெண், சித்திரவதையின் பின் கொடூரமாக கழுத்தறுக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்கள் இருவரது குருதி 25 ➤

## கிணற்றுக்குள் இருந்து சிறுவன் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 12
காணவில்லை என்று தேடிய ஆறு வயதுச் சிறுவன் வீட்டுக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றது. வசந்தகுமார் றியாஸ் என்ற சிறுவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டான். யாழ்ப்பாணம், இருபாலை மடத்தடிப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: வீட்டில் இருந்து விளையாடிய றியாஸ் சித்தி வீட்டுக்குச் சென்று விளையாடப் போகின்றேன் என்று தனது தாயிடம் கேட்டுள்ளான். தாயார் மறுத்துவிட்டதால் அவன் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். மாலை 5 மணிக்கு வந்த றியாஸின் பேத்தியார் அவனைத் தேடியபோது கிணற்றுக்குள் சிறுவன் விழுந்திருந்தமை தெரியவந்தது. இதையடுத்து சிறுவனை மருத்துவமனைக்குக் கொண்டுசென்ற போதிலும் அவன் ஏற்கனவே உயிரிழந்து விட்டான் என்று தெரிவிக்கப்பட்டது.
இறப்பு தொடர்பான விசாரணைகளை யாழ்ப்பாணம் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி பிரேமகுமார் மேற்கொண்டார். கோப்பாய் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டனர். (ம-21.26)

## சிறுப்பிட்டியில் விபத்து முகாமையாளர் சாவு!

யாழ்ப்பாணம், டிசெ. 12
சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தொன்றில் பங்குச் சந்தை முகாமையாளர் உயிரிழந்தார். முத்துக்குமாரசாமி - திலீபன் (வயது -40) என்பவரே அவ்வாறு உயிரிழந்தவராவார்.
யாழ்ப்பாணத்தில் இருந்து அச்சுவேலி நோக்கிப் பயணித்தபோதே மேற்படி விபத்துச் சம்பவித்துள்ளது. படுகாயம் அடைந்த திலீபன் உடனடியாக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்ப்பிக்கப்பட்ட போதிலும் அவர் ஏற் 25 ➤

### தீபத் திருநாள் கோலாகலம்

கார்த்திகை தீபத் திருநாள் தமிழர்களால் நேற்றையதினம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.



## அரசின் எந்தப் பிரிவினரும் சுவிஸ் தூதரகப் பெண்ணை கடத்தவில்லை

### அது ஒரு நாடகமாம்

கொழும்பு, டிசெ. 12
இலங்கையின் குற்றப்புலனாய்வுப் பிரிவோ அல்லது சட்டத்தை நடைமுறைப்படுத்தும் எந்தவொரு பிரிவோ சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரியைக் கடத்தவில்லை என்று பாதுகாப்பு 25 ➤





## டெங்குக் கட்டுப்பாடு

சங்கானை, டிசெ. 12
டெங்கு நோயைக் கட்டுப்படுதும் வேலைத் திட்டத்தை சங்கானைப் பிரதேச செயலகம் நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது.
சங்கானைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மக்களுடன் இணைந்து உத்தியோகத்தர்கள் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.
டெங்குநோயாளர்கள் அதிகம் உள்ள மாவட்டங்களில் யாழ்ப்பாண மாவட்டமும் முன்னிலையில் உள்ளது. கடந்த காலங்களில் பலர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். உயிரிழப்புக்களும் நிகழ்ந்திருந்தன. டெங்கைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத் தரப்பினர் பல செய்ற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அதே வேளை அரச பணியாளர்களும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். அந்த வகையில் சங்கானைப் பிரதேச செயலகமும் நேற்றுமுன்தினம் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கையை ஆரம்பித்தது.
இதில் சங்கானை பொதுசுகாதார உத்தியோகத்தர்கள் சங்கானை கிராமஅலுவலர்கள், மற்றும் சமூர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார உத்தியோகத்தர்கள், சங்கான்னைப் பிரதேச டெங்குக் கள உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்திருந்தனர். டெங்கு நுளம்பு பரவும் இடங்கள் தொடர்பான விழிப்புணர்வுகள் ஏற்கனவே சங்கானைப் பிரதேச மக்களுக்கு வழங்கப்பட்டிருந்த போதும், அவ்வாறன இடங்கள் நேற்றைய தினம் இனங்காணப்பட்டு அழிக்கப்பட்டிருந்தன. அத்தோடு குப்பைகளும் தரம் பிரிக்கப்பட்டு பொதியிடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# பாதுகாப்பு அமைச்சர் யார்?

## கோத்தாவிடம் மங்கள கேள்வி



கொழும்பு, டிசெ. 12
பாதுகாப்பு அமைச்சுப் பதவி யாரிடம் உள்ளது? என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் கேள்வி எழுப்பியுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர.
அமைச்சர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்ட நிலையில் குறித்த வர்த்தமானி தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.
அதில் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் வழங்கப்பட்ட துறைகள் மற்றும் அமைச்சுக்களின் அளவு குறித்து அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.
அந்தப்பதிவில், “வர்த்தமானியை அவதானியுங்கள். பாதுகாப்பு என்பது ஒரு பலம் பொருந்திய ஆட்சியாளரால் வழிநடத்தப்படும் ஓர் அதி விசேட அமைச்சுப்போல் உள்ளது.
இந்தநிலையில் எனது மில்லியன் ரூபா பெறுமதியான கேள்வி என்ன என்றால், யார் பாதுகாப்பு அமைச்சர் என்பதே ஆகும்” என்று குறிப்பிட்டுள்ளார். (ம-22)

## இலங்கை சுகாதார துறைக்குப்பாராட்டு

கொழும்பு, டிசெ.12
இலங்கைசுகாதாரத்துறையினருக்கு உலக சுகாதார அமைப்புபாராட்டுத்தெரிவித்துள்ளது.
உலக சுகாதார அமைப்பு தென்கிழக்காசியாவுக்கான பிராந்தியபணிப்பாளர்மருத்துவர் பூனம் கீத்ரபால் சிங் இது தொடர்பாகத் தெரிவித்துள்ளதாவது:
எச்.ஐ.வி. தாயிடம் இருந்து குழந்தைக்குப் பரவுவது இலங்கைளில் தடுக்கப்பட்டுள்ளது. எயிட்ஸ்மட்டுமன்றி பிறப்பில் ஏற்படும் பால். வினை நோயான சிஃபிலிஸ்க்கானவாய்ப்பும்இலங்கையில் தடுக்கப்பட்டுள்ளது என்றார்.
2017ஆம்ஆண்டுக்குப்பின்னர் இலங்கையில் தாயிடமிருந்து குழந்தைக்கு எச்.ஐ.வி. வைரஸ் பரவுவது தொடர்பாக எந்தச் சம்பவமும்பதிவாகவில்லை. (எ)

யாழ்ப்பாண விமான நிலையத்தில்

## நிலஉரிமையாளர்களுக்கு அங்காடிகள் வராதா?

யாழ்ப்பாணம், டிசெ. 12
பலாலியிலுள்ள யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்தின் அருகே அமைக்க எதிர்பார்க்கப்படும் விமான நிலைய விற்பனை அங்காடிகளை, அந்த நிலத்தின் உரிமையாளர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கவேண்டும்என்று அந்தநிலங்களின்உரிமையாளர்கள் விடுத்த கோரிக்கை புறக்கணிக்கப் பட்டுள்ளது.
அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் அவற்றை வழங்க முயற்சிக்கப்படுகின்றது என்று அவற்றின் உரிமையாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.
விமானநிலையத்தில்வரிவிலக்குவிற்பனைநிலையங்கள், சர்வதேச பொருள் விற்பனைக் கூடங்களுடன் நாணய மாற்று நிலையம், உணவகம் எனப் பல விற்பனைக் கூடங்கள் அமைக்கப்படக்கூடும்.
இதன்போது, வர்த்தகர்களை மேலும் வளர்த்து விடும் செயற்பாடுகள் அல்லது அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் அன்றி, தென்பகுதியினருக்கோ அல்லது செல்வாக்கு மிக்கவர்களுக்கோ வழங்குவதை நிறுத்தி, விமானநிலையத்துடன் கூடிய நிலங்களின்உரிமையாளர்களை இனம்கண்டு தமக்கே இந்தச் சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்று விமான நிலையத்தைச் சூழவுள்ள நில உரிமையாளர்கள் கடந்த ஒக்ரோபரில் கோரிக்கை முன்வைத்திருந்தனர். (து-105)



## ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி மஹிந்தவை சந்தித்துப் பேச்சு

கொழும்பு, டிசெ.12
ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதிக்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே நேற்றுமுன்தினம் சந்திப்பு நடந்துள்ளது.
ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்தால் வெளியிடப்பட்டதும் 2019ஆம் ஆண்டுக்கு உரியதுமான மனித அபிவிருத்தி அறிக்கையின் முதலாவது பிரதி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளது. சந்திப்பில் கருத்துத் தெரிவித்துள்ள பிரதமர் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச் செயற்றிட்டத்துடன் தமது பணியை தொடர்ந்தும் முன்கொண்டு செல்லவுள்ளதாக கூறினார் என்று தெரிவிக்கப்பட்டது. (எ)





குமராலய தீபத்தை முன்னிட்டு, நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தில் சொக்கப்பனை எரிக்கும் சிறப்பு நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. (க-17)

## வன் கருத்துடையோரை அரசு கௌரவிக்கிறதா?

### சிவமோகன் எம்.பி. கேட்கிறார்

மன்னார், டிசெ. 12
சிறுபான்மை இனத்துக்கு எதிராக வன் கருத்துக்களை கொண்டவர்கள் இந்த அரசில் கௌரவிக்கப்படுகிறார்களா என்று வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் கேள்வி எழுப்புகிறார்.
போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் என ஐ.நா. சபையால் அடையாளம் காணப்பட்டவர்கள், சிறுபான்மை இன மக்களுக்கு எதிராக அடாவடித்தனங்களை செய்தவர்கள், நாடாளுமன்றை அவமதித்து மிளகாய்த்தூள் தூவி கதிரையை தூக்கி எறிந்தவர்கள் ஆகியோருக்கு அரசு பதவிகளை வழங்குகின்றது.
பல்வேறு சமூகவியல் குற்றங்களில் ஈடுபட்டவர்களும் இந்த அரசில் கௌரவிக்கப்படுகிறார்கள். எனவே சிறுபான்மை இன மக்களின் பாதுகாப்பு தற்போதைய அரசில் கேள்விக்குறியாகியுள்ளது.
பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதும், இது பௌத்த நாடு என்று கூக்குரலிடுபவர்களுக்கு முக்கியத்துவம் வழங்குவதையும் ஏற்றுக் கொள்ள முடியாது.
தமிழ் பேசும் மக்கள் தமக்கான பாதையை வகுத்துக்கொள்ள வழிவிட வேண்டும் என்றும் தெரிவித்தார். (து-213)

# சிறப்பை எய்துவதற்கு ஒரு படி மேலே செல்வது

**CA Sri Lanka 55th Annual Report Awards வழங்கும் நிகழ்வில் யூனியன் அஷ்யூரன்ஸுக்கு இரு தங்க விருது**

அண்மையில் இடம்பெற்ற 55th Annual Report Awards வழங்கும் நிகழ்வில் யூனியன் அஷ்யூரன்ஸ் இரு சிறப்பு விருதுகளை தனதாக்கியிருந்தது:

Best Annual Report (Insurance Companies) - Gold Award
Corporate Social Responsibility Reporting Award - Gold Award




இதை சாத்தியமாக்கிய உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

யூனியன் அஷ்யூரன்ஸ்
உங்கள் நாளைய நம்பிக்கை, இன்றே.

www.unionassurance.com

Union Assurance PLC (Company No. PQ 12)

# உழவியந்திரம் தீக்கிரை; இருவர் நேற்றுக் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 12

தீவகம் சாட்டிப் பகுதியில் மணல் கடத்தலில் ஈடுபடுத்தப்பட்டதாகச் சொல்லப்படும் உழவியந்திரங்களைத் தீவைத்து எரித்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் நீண்ட நாள்களாக மணல் திருட்டும், அகழ்வும் இடம்பெறுகின்றன என்று பொலிஸாருக்குத் தெரியப்படுத்திய போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாததை அடுத்து மேற்படி உழவியந்திரங்கள் நேற்றுமுன்தினம் தீக்கிரையாக்கப்பட்டன.

உழவியந்திரத்தின் உரிமையாளர் ஒருவர் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து இருவர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். அவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்றில் இன்று முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

(ம-105M05)




## தவறவிடப்பட்டது

ஸ்ரீஸ்கந்தராசா லதுசியன் என்பவரின் தேசிய அடையாள அட்டையும். வாகன உரிமைப் பத்திரமும் (Auto) உரும்பிராயிலிருந்து சுன்னாகத்துக்கும் இடையில் தவறவிடப்பட்டது. இதனை கண்டெடுத்தவர்கள் சாந்தினி மல்டி சென்டர் (ஆஸ்பத்திரி முன்னால்) இணுவிலில் ஒப்படைக்கு மாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அதனை கண்டறிந்து தருபவருக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**077 922 3193, 077 290 0602**

## கனடா - உயர்கல்வி

கனடாவில் வேலையுடன் பல்கலைக்கழக / உயர்கல்வி கற்க ஓர் அரிய வாய்ப்பு. O/L உடன் ஆங்கிலம் அவசியம். IELTS இல்லை. உங்கள் CV/BIO - DATA உடன் தொடர்புகொள்ளுங்கள்.

E-mail : sicsolutions@hotmail.com

**M : 078 817 1413**

## வீடு வாடகைக்கு

K.K.S வீதி யாழ்ப்பாணத்தில் யாழ் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் வீடு வாடகைக்கு உண்டு.

**தொடர்பு - 077 404 7911**

## காணி விற்பனைக்கு

**பன்னாலை - கீரிமலை வீதியில்** (யாழ்ப்பாணம் - கீரிமலை 795 ஆம் இலக்க பஸ் தடவழி) அமைந்துள்ள **52 பரப்புக்காணி விவசாயத்துக்கு** மிகவும் உகந்தது.

**2 கிணறுகள், பயன்தரு மரங்கள்.**

முழுக்காணியும் நியாயமான விலைக்கு விற்கப்படும். பிரித்து விற்கப்படமாட்டாது.

**077 668 7574, 021 225 2371**

## மணிவிழா வாழ்த்து (12.12.2019)

**திருமதி லோகாம்பாள் ஈஸ்வரதேவன்**

(Science Trained - SLTS -I

எங்கள் பாடசாலையின் பழைய மாணவி




எல்லோர் மனதிலும் இடம்பிடித்த நல்லாசான்
தேசியம் வரை எம்பள்ளியின் பெயர் பதித்த பேராசான்
வாழ்க நலமுடன் பல்லாண்டு

**சேவை விபரம்**

- 21.10.1988 - 06.06.1991
  யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி
- 07.06.1991 - 31.12.1992
  பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
- 01.01.1993 - 11.10.1993
  யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த கல்லூரி
- 12.10.1993 - 12.12.2019
  யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்

பாடசாலைச் சமூகம்
**யா/ கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




இலங்கையில் சிறந்த நேர்மையான ஊழலற்ற அரச அதிகாரி என்ற விருதினைப் பெற்றுள்ள

**Dr. த.சத்தியமூர்த்தி**

*(யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர்)*

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ். நீரிழிவு கழகம்
**Jaffna Diabetes Association**

# மாபெரும் பண்டிகைக்கால சலுகை!!!

நீர் சுத்திகரிப்பு துறையில் முன்னோடியும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமான **Everpure Hi-Tec (Pvt) Ltd.** இடமிருந்து **10% - 40 %** வரையிலான விலைக்கழிவும் மற்றும் பரிசுப் பொருட்களும்

**வீட்டிற்குரிய RO Water System - 24,999/= லிருந்து**




## காரியாலயம், தொழிற்சாலைகளுக்கான RO Water Filters



மணிக்கு 25 - 30 Lits - 54,400/=
மணிக்கு 50 - 60 Lits - 115,400/=
மணிக்கு 125 - 150 Lits - 275,000/=
மணிக்கு 250 - 300 Lits - 375,000/=

## உங்கள் வீட்டில் கல்சியம், காவிபடிதல் பிரச்சனையா?!!!




உங்கள் வீடுகளில் பொருத்தப்பட்டிருக்கும் விலையுயர்ந்த Tiles, Bathroom Fittings, Washing Machine களை கல்சியம், மக்னீசியம், மற்றும் காவிப் படிவு களிலிருந்து பாதுகாக்க **EVRO WATER SOFTENER**ஐ பொருத்தி பயன்பெறுங்கள்

## HYBRID கழிவுநீர் சுத்திகரிப்பு இயந்திரம்




அனுகூலங்கள்:
- குறைந்த செலவு
- சிறிய இட பரப்பு போதுமானது (6' X 4')
- நிலத்துக்கு அடியில் வைக்கக்கூடியது
- நிரம்பி வழியாதது
- துர்நாற்றம், கிருமிகள் அற்றது

உங்களின் வீடு மற்றும் தொழிற்சாலை (Toilet, Kitchen, Bathroom, Washing Machine) கழிவுகளை மீள்சுழற்சி முறையில் சுத்திகரித்து மீண்டும் பாவனைக்கு உகந்த நீராக மாற்றித்தரும்

**Everpure Hi-Tec (Pvt) Ltd.**

No.581, K.K.S Road, Jaffna. (மனோகரா சந்திக்கு அருகாமையில்)

**HOTLINE: 075 331 3310 ☎ 021 222 6888**

## மரண அறிவித்தல்



### முத்துக்குமாரசாமி திலீபன்

**(முகாமையாளர் , கொழும்பு பங்குச்சந்தை- யாழ்ப்பாணம்)**

மருத்துவமனைச்சாலை அச்சுவேலியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துக்குமாரசாமி திலீபன் நேற்று **(11.12.2019)** புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் அச்சுவேலி முத்துக்குமாரசாமி (இளைப்பாறிய அதிபர்)- சரஸ்வதி (இளைப்பாறிய ஆசிரியர்) தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் சுரேகாவின் அன்புக் கணவரும், சபினயா, யதுசிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ராகுலன் (ஆசிரியர், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கவிதா (பிரதி அதிபர், இடைக்காடு ம.வி.) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தவரத்தினம்-ஈஸ்வரிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் சுகிதா, சர்வநாதன், சுதன், லலீசன் (பிரதி அதிபர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை), ரேவதி (ஆசிரியர், இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(12.12.2019)** வியாழக்கிழமை பிற்பகல் **3.00** மணிக்கு ஆஸ்பத்திரி வீதி, அச்சுவேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்சுவேலி முழக்கன் இந்துமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மருத்துவமனைச்சாலை,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சீனித்தம்பி சபாரத்தினம்



யாழ்ப்பாணம் ஏழாலையை பிறப்பிடமாகவும், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சீனித்தம்பி சபாரத்தினம் நேற்று **(11.12.2019)** புதன் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சீனித்தம்பி - சிவபுரம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், கனகம்மா அவர்களின் அன்பு கணவரும், உதயகுமார் (பிரசாத் நகையகம், யாழ்ப்பாணம்), ராஜ்குமார் (ஜேர்மனி), அதிரூபா, புஸ்பரூபா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோணேஸ்வரி, சிவராசா (டோகா), சோபிதா (ஜேர்மனி), கஜேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான முத்துகுமார், கனகசபை, இராசதுரை மற்றும் சுப்பிரமணியம், மகேஸ்வரி, லோகேஸ்வரி காலஞ்சென்ற பொன்னம்பலம் மற்றும் சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரரும் பிரியங்கவி, திவாகன், சங்கீர்ணா, கஸ்னிகா, கபிசனா, கவிஸ் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று **(11.12.2019)** புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

CS24207(16/17)

செல்லப்பா வீதி,
உரும்பிராய் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சுந்தரலிங்கம்

**(முன்னாள் இரசாயனவியலாளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 25.02.1936 | 09.12.2019 |



மீசாலை வடக்கு, புத்தூர் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சுந்தரலிங்கம் கடந்த **(09.12.2019)** திங்கட்கிழமை மீசாலையில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி (இளைப்பாறிய அதிபர்)-பதஞ்சலி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு இரத்தினம் (இளைப்பாறிய அதிபர்) தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சௌபாக்கியநாயகியின் (இளைப்பாறிய ஆசிரியர்) அன்புக் கணவரும், நளாயினி (அமெரிக்கா), பதஞ்சலி (அமெரிக்கா), ஸ்ரீகணேஷன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சண்முகலிங்கம், யோகேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி, இராமலிங்கம், குமாரலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரரும் கோகுலன், ரல்வு, விஜித்தா ஆகியோரின் அன்பு மாமனாரும், உமையாள், மீனாள், மதுரா, மயூரி, தாரா, நீலன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(12.12.2019)** வியாழக்கிழமை முற்பகல் **11.00** மணியளவில் மீசாலை வடக்கு, புத்தூர் வீதியிலுள்ள அவரது பிறப்பிடத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்லையா
**கந்தசாமி**
(ஓய்வுநிலை அதிபர் S.L.P.S.I)

அன்னை மடியில்
23.11.1941

ஆண்டவன் அடியில்
27.11.2015

திதி: அபரபக்கப் பிரதமை

பண்பின் உறைவிடமே! பாசத்தின் பிறப்பிடமே!
அன்பாய் அரவணைத்து அறிவுரைகள் கூறி
வாழ்வாங்கு எம்மை வாழவைத்த அப்பாவே!
எம் நெஞ்சிருக்கும் வரை உங்கள் நினைவிருக்கும்.

1ஆம் கட்டை,
துலாவட்டை ஒழுங்கை,
புலோலி மத்தி.
(m.1139 (13.17)

குடும்பத்தினர்.



# FRENCH LANGUAGE
## INDIVIDUAL & GROUP CLASSES
By an Experienced Lady Teacher
52, Sabapathy Road,
Thalaiyali, Jaffna.
075 836 9253
(cs 29861) (13.17)


# நம்பிக்கையுடைய காகம்



காகம் ஒன்று காட்டிலே
தாகத்தால் தவித்ததாம்

அங்குமிங்கும் தேடியே
வீடு நோக்கிச் சென்றதாம்

அங்கு
சிறிய சாடியில்
கொஞ்சம்
தண்ணீர்
இருந்ததாம்

எட்டி எட்டி
பார்த்ததாம்
எட்டாமல்
போனதாம்
சிறிய சிறிய
கற்களை
பொறுக்கி
கொண்டு
போட்டதாம்

தண்ணீர்
மேலே
வந்ததாம்
தாகம் தீர
குடித்ததாம்

நம்பிக்கையு
டைய காகம்
சந்தோஷமாய்
பறந்ததாம்


## மரண அறிவித்தல்



தோற்றம்
19 - 07 - 1934

மறைவு
11 - 12 - 2019

### சிவக்கொழுந்து தம்புநாதபிள்ளை

உடையார் வீதி, மந்துவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவக்கொழுந்து தம்புநாதபிள்ளை நேற்று (11.12.2019) புதன்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் சிவக்கொழுந்து சின்னம்மா தம்பதிகளின் இளைய மகனும் மங்கையற்கரசியின் பாசமிகு கணவரும் காலஞ் சென்றவர்களான நமசிவாயம், சிதம்பரநாயகி மற்றும் வல்லிபுரம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கலைவாணி, செல்வராணி, புஸ்பராணி (ஆசிரியை) காலஞ்சென்ற சிவராசா, மற்றும் அற்புதராணி (மாவட்ட விலை மதிப்பீட்டாளர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மகாந்தன், குலராசா, கந்தசாமி, சந்திர கலா, இரத்தினராசா ஆகியோரின் மாமனாரும் இராசகுலசிங்கம் (தேவர் - மீசாலை) அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2019) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் மந்துவில் மேற்கு இலுவன் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 309 8828, 077 355 7093
தகவல்: குடும்பத்தினர்



## அளவெட்டி மல்லாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## பதவி வெற்றிடங்கள்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளிற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்ப படிவங்களை சங்க காரியாலயத்தில் 10/= செலுத்தி பெற்றுக்கொள்ளவும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வி, பிறப்புச் சான்றிதழ், அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகளை இணைத்து தலைவர், அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், கூட்டுறவாளர் வீதி அளவெட்டி என்னும் முகவரிக்கு 27.12.2019ம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

**பதவிகள்**

**1. பொது முகாமையாளர் (101/08)**
சம்பள அளவுத்திட்டம் - 18425 - 23225
(04/2018 இன் படி) 230 X 10 - 250 X 10

**கல்வித்தகைமைகள்**
அ) கூட்டுறவு ஊழியர் 9வது சம்பளத்திட்ட முகாமை / மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 03 ஆண்டுகால அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 10வது சம்பளத்திட்ட முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 6 ஆண்டு கால அனுபவம்.
அல்லது
ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகபட்டம் ஒன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியொன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.
அல்லது
இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதர பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனமொன்றில் 04 வருட கால அனுபவம் / க.பொ.த.உயர்தரப்பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக்குறைந்தது 06 வருட சேவையாற்றிய அனுபவம்.

**2. கிராமிய வங்கி முகாமையாளர் (205/13)**
சம்பள அளவுத்திட்டம் - 16365 - 19265
(04/2018 இன் படி) 140 X 10 - 150 X 10

**பதவிக்குரிய தகைமைகள்**
அ) கூட்டுறவுப்பணியாளர் 14வது சம்பளத்திட்ட கிராமிய வங்கி பகுதி பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 15வது சம்பளத்திட்ட அப்படிப்பட்ட பதவியொன்றில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஆ) கூட்டுறவுப்பணியாளர்( உயர்தரம்) சான்றிதழுடன் கிராமிய வங்கிப்பகுதி எழுதுவினைஞர் பதவியொன்றில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**3. காசாளர் (306/15)**
சம்பள அளவுத்திட்டம் - 15545 - 18245
(04/2018 இன் படி) 130 X 10 - 140 X 10

**பதவிக்குரிய தகைமைகள்**
அ) கூட்டுறவுப்பணியாளர் 16வது சம்பளத்திட்ட பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஆ) கூட்டுறவுப்பணியாளர் ( சாதாரணதரம் ) சான்றிதழ் அல்லது க.பொ.த. சாதாரணதரத்தில் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச்சங்கமொன்றின் காசாளர் அல்லது வியாபார நடவடிக்கைகள் பற்றி ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**4. இலிகிதர் (302/15)**
சம்பள அளவுத்திட்டம் - 15545 - 18245
(04/2018 இன் படி) - 130 X 10 - 140 X 10

**பத்விக்குரிய தகைமைகள்**
அ) கூட்டுறவுப்பணியாளர்களினது 16வது சம்பளத் .திட்டத்தில் இலிகிதர் பதவியில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஆ) க.பொ.த. (சாதாரணதரம் ) இல் கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் உடன் சிங்களம் அல்லது தமிழ் பாசை உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் கூட்டுறவுச்சங்க இலிகிதர் பதவியொன்றில் ஒரு வருடத்திற்கு குறையாத அனுபவமும் இருத்தல் வேண்டும். அத்துடன் கணினி தகைமை அறிவும் அவசியம் தேவை.

**5. கிளைமுகாமையாளர் (208/15)**
சம்பள அளவுத்திட்டம் - 15545 - 18245
(04/2018 இன் படி) 130 X 10 - 140 X 10

**பதவிக்குரிய தகைமைகள்**
அ) கூட்டுறவுப்பணியாளர் 16வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பதவியொன்றில் இரண்டு வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 17வது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பகுதியொன்றில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஆ) கூட்டுறவுப்பணியாளர் ( சாதாரணதரம் ) சான்றிதழ் அல்லது க.பொ.த ( சாதாரணதரம் )கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு:- 1. மேற்படி பதவிகளுக்கான வயதெல்லை 18 - 45
2. சங்கத்தால் கோரப்படும் பிணைப்பணம் செலுத்த வேண்டும்
3. சங்க பணியாளர்களுக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

12.12.2019

தலைவர்
அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம்



## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தேற்றம்
30.11.1939

மறைவு
13.11.2019

கப்பூது, கரணவாயை பிறப்பிடமாகவும் இல 48/3, அம்பாள் நகர், திருவையாறு, கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்
**அப்பாக்குட்டி கந்தையா செல்வவிநாயகம்**

13.11.2019 (புதன்கிழமை) சிவபதமடைந்த அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை 12.12.2019 வியாழக்கிழமை கீரிமலையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 13.12.2019 வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. ஆத்மாசாந்திப்பிரார்த்தனையிலும் மதிய போசனநிகழ்விலும் அனைவரும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இல - 48/3, அம்பாள்நகர்
திருவையாறு, கிளிநொச்சி

குடும்பத்தினர்
077 809 0188, 077 487 3755

## மரண அறிவித்தல்



### சுந்தரஐயர் இராமச்சந்திர சர்மா

(ஓய்வுபெற்ற ஆசிரியர், மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்)

இந்தியா கேரளாவை பிறப்பிடமாகவும், மீசாலை மேற்கில் வசித்து வந்தவரும் தற்போது சரசாலையில் வசித்து வந்தவருமாகிய சுந்தரஐயர் இராமச்சந்திர சர்மா நேற்று (11.12.2019) புதன்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரஐயர் அம்மாளு அம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான ஈஸ்வரஐயர் மீனாட்சி அம்மா தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற கோமதிஅம்மாவின் அன்புக்கணவரும் உமா, சுந்தரேஸ்வர சர்மா (ரமணன் ஐயா), ஸ்ரீவத்சன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சுஜாதா, சாந்தினி ஆகியோரின் மாமனாரும் ஐஸ்வர்யா, ராகவன், சௌமியன், சைந்தவி ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.12.2019 வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் சரசாலை ரமணன் ஐயா இல்லத்தில் நடைபெற்று அண்ணமார் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நுணுவில் பிள்ளையார் கோவிலடி,
சரசாலை வடக்கு, சரசாலை

தகவல்: இ.சுந்தரேஸ்வரசர்மா
(ரமணன் ஐயா) மகன் 077 620 6681

## பொன்மொழிகள்

1. நாம் ஒருவருக்கொருவர் ஒரு ரூபாய் கொடுத்துக் கொண்டு நம் இருவரிடமும் ஒரு ரூபாய் தான் இருக்கும். நாம் ஒருவருக்கொருவர் ஒரு நல்ல எண்ணத்தை பகிர்ந்தால், நம் இருவரிடமும் இரு நல்ல எண்ணங்கள் இருக்கும்.

2. தவறு நேர்ந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சி எந்த செயலையும் செய்யாமல் பின் வாங்குவது இழிவானது.

3. எந்தப் பிழையை நீ எங்கே கண்டாலும் அதை உன்னிடம் இருந்தால் திருத்திக் கொள்.

4. வாழ்வில் உன் தோல்வியைக் கண்டு மகிழும் ஒருவரையேனும் நீ பெற்றிருப் பின், உன் வாழ்வின் மிகப் பெரிய தோல்வி அதுவாகவே இருக்கும்.

5. அவசரம், ஆளை மட்டுமல்ல, அலுவலையும் கெடுக்கிறது.

6.தோல்வியின் அடையாளம் தயக்கம்! வெற்றியின் அடையாளம் துணிச்சல்!
7. அரிய சாதனைகள் அனைத்தும் வலிமையினால்செய்யப்பட்டவை அல்ல; விடாமுயற்சியினால் தான்.

## ஜன்னல் பாறை



அமெரிக்க சுற்றுலாவில், முக்கிய இடம் பிடிப்பது, 'வின்டோ ராக்' என்ற, ஜன்னல் பாறை.
இது, அரிசோனா மாநிலத்தில் உள்ளது. இங்குள்ள ஹாம்ப் ரிட்ஜ் மலையில், 12 ஆயிரத்து 670 அடி உயரத்தில், பெரிய துவாரமாக காணப்படுகிறது. தூரத்தில் இருந்து பார்த்தால், பிரமாண்டமான நுழைவாயில் போன்று தெரியும். ஏராளமான சுற்றுலாப் பயணியர், இதைப் பார்த்து வருகின்றனர்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன உரிமையாளரின் மைத்துனரும் முன்னை நாள் முகாமையாளருமாகிய **பொன்னம்பலம் கணேசமணியின்** அன்பு மனைவியாரான

**திருமதி கணேசமணி செல்வராணி**

அவர்கள் 07.12.2019 இறைவனடி சேர்ந்தார் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரத்தையும் அனுதாபத்தையும் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளரும் ஊழியர்களும்
**நந்தலாலா இரும்பகம்**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



13.11.2019 அன்று இறை பதமடைந்த எமது குடும்பத்தின் ஒளிவிளக்கு

**அமரர்**
**தம்பிமுத்து திருச்செல்வம்**
**(Selvan Studio உரிமையாளர்)**

அவர்களின் மரணச்செய்தியை அறிந்து மரணச்சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் வழங்கியவர்களுக்கும் தொலைபேசி வாயிலாகவும் சமூக வலைத் தளங்கள் வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் கண்ணீர்அஞ்சலி பிரசுரங்கள், மலர் வளையங்கள், பதாகைகள் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அன்னாரின் திருவுடலை கொழும்பிலிருந்து எடுத்து வருவதற்கும் சகல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் வீட்டுக் கிருத்திய கிரியைகள் 13.12.2019 வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



### வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், வட்டுகிழக்கு சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் (மணியம்) நேற்று **(11.12.2019)** புதன்கிழமை மாலை **5.43** மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற லக்ஷ்மிதேவியின் அன்பு கணவரும், லவகுசன் (லவன் - சாரதி, வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புத் தந்தையும், சிவதர்சினியின் அன்பு மாமனாரும் கோகுலனின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான பாப்பா (மலேசியா), பரமேஸ்வரி (கைதடி), ராஜேஸ்வரி (நீர்வேலி), அம்பிகாவதி மற்றும் சரஸ்வதி (இணுவில்), மகேஸ்வரி (மாவிட்டபுரம்) ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று **(12.12.2019)** வியாழக்கிழமை முற்பகல் **10** மணியளவில் வட்டுகிழக்கு சித்தன் கேணியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுகிழக்கு,
சித்தன்கேணி.

தகவல்:
மகன் லவகுசன் [லவன்]

தொடர்பு:- 077 601 0245

CS28431(16/17)



# கோலகலமாக நடைபெற்ற நடிகர் சதீஷின் திருமணம்

எதிர்நீச்சல், மான் கராத்தே படங்களில் நகைச்சுவை நடிகராக நடித்த நடிகர் சதீஷுக்கும், உதவி இயக்குநராகிய சாச்சியின் சகோதரி சிந்துவை திருமணம் செய்து கொண்டுள்ளார்.

இவர்களது திருமண நிச்சயதார்த்தம் அண்மையில் நடந்ததையடுத்து, ரசிகர்கள் காதல் திருமணமா? என்ற கேள்வியினை எழுப்பினர். ஆனால் இந்த திருமணம் பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் என்பது தெரிய வந்தது.

இந்த நிலையில் இவர்களது திருமண வரவேற்று நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றுள்ளது. இதில் சதீஷின் நெருங்கிய நண்பரான சிவகார்த்திகேயன் மற்றும் முன்னணி நடிகர்களான விஜய்சேதுபதி, ஜீவா, உதயநிதி ஸ்டாலின் என பலரும் கலந்து கொண்டு சதீஷ் மற்றும் சிந்துவை வாழ்த்தியுள்ளனர்.



# twitter

காளையன்..@Giri47436512

எந்த ஒரு மனிதனின்
உழைப்பும் "பணமாகும்"
உழவனுடைய உழைப்பு
மட்டுமே மனிதனுக்கு
"உணவாகும்!"

அன்புடன் கதிர்™ @kathir_twits

தன் பெயரில் அர்ச்சனை **சுயநலம்**
சாமி பெயரில் அர்ச்சனை
ஆகச்சிறந்த **ஐஸ் சுயநலம்** !!

செந்திலின்_கிறுக்கல்கள்

ஹெட்செட் இன்றி அமையாது
பயணம்...!

ட்விட்டர் தாதா...
@MahadevanTwits

இது "என்னடா வாழ்க்கை"
என்றவன் தோற்கிறான்.
இது "என்னோட வாழ்க்கை"
என்றவன் ஜெயிக்கிறான்.

நம்ம யாழ்ப்பாணம்


சிங்களவரோட முட்டிமோதி முட்டி
தேயிறதை விட
பேசாமல் நித்தியானந்தா போல
நாங்களும் ஒரு தீவை வாங்கி தனி
நாட்டை உருவாக்கினால் என்ன?

கோடி கொடுத்து வாங்கிய
மெத்தையில் தூங்கினாலும்



தாய் மடி தந்த தூக்கம் மட்டும்
தராது.......

## தற்கால ஆசிரியர்களின் பாடல்



சத்தம் இல்லாத school கேட்டேன்
யுத்தம் இல்லாத classroom கேட்டேன்
மொத்தத்தில் என்றென்றும் கல்வி கேட்டேன்
ரகசியமில்லா நட்பு கேட்டேன்

Clean பண்ணிய toilet கேட்டேன்
பஸ்ஸின் ticketஐ குறைக்கக் கேட்டேன்.
தானே படிக்கும் மாணவரை கேட்டேன்..
பயிற்சிகள் செய்யும் பிள்ளைகள் கேட்டேன்..

Daily எழுதும் marker கேட்டேன்
நீலம் கறுப்பில் ஒவ்வொன்று கேட்டேன்
க்ளாஸ் ரூம் போக liftஐ கேட்டேன்
கிடந்து உருள staff room கேட்டேன்

O/L க்கெல்லாம் ஒரு எக்ஸ்ஸாம் கேட்டேன்
AL க்கெல்லாம் சுயபடிப்பு கேட்டேன்
Parentsகெல்லாம் ஒரு மனம் கேட்டேன்
Studentsக்கெல்லாம் ஒழுக்கம் கேட்டேன்

இலங்கை முழுதும் சம கல்வி கேட்டேன்
கல்வி கெடாத sports கேட்டேன்
வகுப்பு முழுக்க அமைதி கேட்டேன்
ஆசிரியர் வரும்போதே எழும்ப கேட்டேன்.

விஞ்ஞானம் எல்லாம் உயரக் கேட்டேன்
கணக்கை தீயாய் படிக்கக் கேட்டேன்
வணிகம் கடந்த ஞானம் கேட்டேன்
தமிழை ஒழுங்காய் எழுத கேட்டேன்

Poya கடந்தும் விடுமுறை கேட்டேன்
Casual medical இன்னும் கேட்டேன்
Steps ஏறாத வகுப்புகள் கேட்டேன்
கால் வலிக்கு மருந்து கேட்டேன்

பண்கொண்ட கலைகள் பயிலக் கேட்டேன்
அதற்கு இருக்கும் வசதியைப் கேட்டேன்
பயன் கெடாத வளங்களைக் கேட்டேன்
சுருங்க விடாத பெறுபேறு கேட்டேன்

எப்போதும் சிரிக்கின்ற Principal கேட்டேன்
ஸ்கூல்க்கருகில் வீட்டைக் கேட்டேன்..
சொந்த ஊரில் தொழிலைக் கேட்டேன்
காலம் எல்லாம் பிடித்த ஸ்கூல் கேட்டேன்.
வருடத்திற்கு ஒரு புரியாணி கேட்டேன்.
தகைமை இருக்குற பதவியை கேட்டேன்
பட்டம் வேண்டாம் நிம்மதி கேட்டேன்

குறைந்த பட்சம் 'இங்கிரிமென்ட்' கேட்டேன்.
இத்தனை கேட்டும் கிடைக்கவில்லை
இதிலே எதுவும் நடக்கவில்லை
Teaching teaching வேண்டாம் என்று
வீசா வீசா வீசாக் கேட்டேன்......

அமைதியாய் இருப்பவன்
முட்டாள் என்று
எண்ணிவிடாதே...



பேசுபவனை விட
கேட்பவனே புத்திசாலி..

நீ இந்த வருடத்தில் என்னத்த
பெருசா சாதிச்ச..




நான் எல்லாம் இவ்வளவு
பிரச்சினைகளை சமாளிச்சு உசுரோட
இருக்கிறதே பெரிய விசயம்னு
சொல்லு.

2019 இப்படித்தான்
போய்கிட்டு இருக்கு..!




**சிரிப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது இதயத்தின் இசை!**


**சிந்திப்பதற்கு நேரம் ஒதுக்குங்கள்
அது சக்தியின் பிறப்பிடம்!**

**விளையாட நேரம் ஒதுக்குங்கள்
அது இளமையின் இரகசியம்!**

**படிக்க நேரம் ஒதுக்குங்கள்
அது அறிவின் ஊற்று!**

**உழைக்க நேரம் ஒதுக்குங்கள்
அது வெற்றியின் விலை!**

# வரி குறைப்பும் பொருளாதார எழுச்சியும்




வண்ணை கேந்திரன்

ஆட்சிப் பீடம் ஏறிய ஒரு சில நாள்களிலேயே, தேர்தல் முன்மொழிவுகளில் கூறப்பட்டதற்கும் மேலதிகமாக, எவரும் எதிர்பாராத அளவுக்கு வரிக் குறைப்பை எற்படுத்தி வளமானதொரு பொருளாதார எழுச்சிக்கு வித்திட்டு இருக்கிறார் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ.

- VAT 15 % இல் இருந்து 8% ஆக குறைப்பு
- NBT முற்றாக நீக்கம்
- வங்கி பிடித்து வைக்கும் வரி (WHT) முற்றாக நீக்கம்
- தனிநபர் வருமான வரி எல்லை 3 மில்லியன் ரூபா
- VAT பதிவு மாதாந்த எல்லை 25 மில்லியன் ரூபா
- PAYE மாத வருமான எல்லை 250.000
- சுற்றுலாத் துறைக்கு பூச்சிய வீத VAT வரி

## வரி குறைப்பு

பெறுமதி சேர் வரியை 15 வீதத்திலிருந்து 8 வீதமாகக் குறைத்தமையால் பொருள்கள் சேவைகளின் விலைகளில் குறிப்பிட்ட அளவு விலைக் குறைப்பு ஏற்படும். இதனால் நுகர்வோரின் கொள்வனவு சக்தி அதிக ரிக்கும். அதாவது குறிப்பிட்டளவு பணத்தின் மூலம் வரிக் குறைப்பின் முன்னர் வாங்கிய பொருள்களை விட்ட இப்போது கூடிய பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியும். நுகர்வோரின் கொள்வனவு அதிகரிக்க பொருள்களின் உற்பத்தி பெருகும். இதனால் நாட்டின் உற்பத்தியும், சேவையும் அதிகரித்து நாட்டில் பொருளாதார வளர்ச்சியேற்படும் என்ற நம்பிக்கையில் தான் ஜனாதிபதி வரி குறைப்பு நடவடிக்கையை மேற்கொண்டார்.

## வரி எல்லை

பெறுமதி சேர் வரியை 8 வீதமாகக் குறைத்தது மட்டும் அன்றி பெறுமதி சேர் வரி மாதாந்தம் 25 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக விற்பனையைக் கொண்டிருக்கும் வர்த்தகர்களிடம் இருந்தே அறவிடப்படும் என்ற எல்லையையும் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. இது சிறிய நடுத்தர வர்த்தகர்களுக்கு ஒரு மிகப் பெரிய நிம்மதிப் பெருமூச்சை வழங்கியுள்ளது. தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்தின் படி மாதாந்தம் 3 மில்லியன் ரூபா விற்பனையை ஈட்டும் யாவரும் வரியைச் செலுத்த வேண்டியுள்ளது. இது சிறிய நடுத்தர வர்த்தகர்களுக்குப் பெரும் வரிச் சுமையாக மட்டுமன்றி ஒரு நிர்வாகச் சுமையையும் ஏற்படுத்தியிருந்தது. பெறுமதி சேர் வரி தொடர்பான கணக்கு வைப்பதற்கும், மாதாந்தம் அல்லது காலாண்டுக்கு ஒருமுறை வரி தொடரர்பான படிவங்களை நிரப்புவதற்கும் வரிக் கணக்கியல் ஆலோசனைகளை வழங்குபவர்களுக்கு ஒரு தொகை பணத்தைச் செலவு செய்ய வேண்டியிருந்தது. இனி இவ்வாறான செலவுகள் சிறிய நடுத்தர வர்த்தகர்களுக்கு ஏற்படாது. அத்துடன் சிறிய நடுத்தர வர்த்தகர்கள் வரிக் கணக்குவைப்புச் சிக்கல்களில் இருந்து விடுபட்டு தங்களது வர்த்தகத்தில் முழுக் கவனத்தையும் செலுத்தி அதிக வருமானம் ஈட்டலாம். இது வர்த்தகர்களால் பெரிதும் வரவேற்கப்படுகிறது.

## வரி முற்றாக நீக்கம்

தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி முற்றாக நீக்கப்பட்டமையும் பொருள்கள் சேவைகளின் பெறுமதியில் குறிப்பிட்டளவு விலைக் குறைப்பை ஏற்படுத்தும். நடைமுறையில் இருந்த 2 வீதம் NBT டிசம்பர் முதலாம் திகதியிலிருந்து முற்றாக நீக்கப்பட்டுள்ளது . VAT வரியில் ஏற்படுத்தப்பட்ட 8 வீதக் குறைப்பும் NBT 2 வீதமாக முற்றாக நீக்கப்பட்டமையால் மொத்தத்தில் 10 வீதக் குறைப்பை பொருள்கள் சேவைகளின் மீது நுகர்வோர் அனுபவிக்க முடியும். மேலும் VAT மற்றும் NBT வரியில் இருந்து சிறிய நடுத்தர வர்த்தகர்கள் விடுபடுகின்றமை மட்டுமன்றி பெரிய வர்த்தகர்களும் NBT யிலிருந்து முற்றாக விடுபடுகின்றனர்.

## தந்திரமான வர்த்தகர்கள்

பொதுவாக இலங்கையில் விலைகள் உயர்வடைந்தால் வர்த்தகர்கள் தங்களிடமிருக்கும் பொருள்களைப் பதுக்குவதும் பின்னர் அதிக விலையில் விற்பதும் விலைகள் குறைவடையும்போது உடனடியாக விலைகளைக் குறைப்பதும், தாங்கள் ஏற்கனவே வாங்கிய பொருள்கள் இருப்பில் இருக்கின்றமையால் விலைகளை உடனடியாகக் குறைக்காமல் காலம்தாழ்த்தி விலைகளைக் குறைப்பதும் நுகர்வோருக்கு நன்றாகவே தெரியும் . எனவே வரிகளைக் குறைத்த அரசு, வர்த்தகர்கள் பொருள்கள் சேவைகளின் விலையையும் குறைக்க ஆவன செய்ய வேண்டும் அப்போது தான் அரசின் வரிக்குறைப்பின் நன்மைகளைப் பொதுமக்களும் அரசும் அடையமுடியும். நுகர்வோர் அதிகார சபையின் மூலம் அரசு விலைகளை அவதானித்துக் கட்டுப்பாடின்றி செயற்படும் வர்த்தகர்கள் மீது நடவடிக்கை எடுப்பதன் மூலம் அரச வரி குறைப்பின் அனுகூலங்களை உண்மையாக அடையமுடியும்

## தனிநபர் வருமான எல்லை

தனிநபர் வருமான எல்லையை வருடாந்த வருமானம் 3 மில்லியன் ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மாதாந்தம் 250,000 வருமானம் ஈட்டும் தனிநபர் எவரும் வருமானவரி செலுத்தத் தேவையில்லை. இந்தத் தீர்மானம் மாதாந்தச் சம்பளமீட்டும் அரச தனியார் ஊழியர்களுக்கு ஒரு மிகப்பெரிய வரப்பிரசாதமாகும். அத்துடன் தனிநபர் வர்த்தகத்தில் ஈடுபடும் வர்த்தகர்களும் வங்கி வட்டியை நம்பி வாழும் அனைவரும் மாதாந்த வருமானத்தில் 25000 ரூபா வரை வரி செலுத்த வேண்டியதில்லை என்பது இவர்களுக்கு ஒரு நிம்மதிப் பெருமூச்சைத் தரும். அத்துடன் வங்கியால் பிடித்து வைக்கப்படும் வரியும் 250000 வட்டி வருமானம் வரை அறவிடப்படமாட்டாது. இது தனிநபர்களின் கொள்வனவுச் சக்தியைப் பெருமளவு அதிகரிக்கும்

## வரி வருமான இழப்பு

புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட வரிக் குறைப்பின் மூலம் ஏறத்தாழ 700 பில்லியன் ரூபாவை எதிர்வரும் வரியாண்டில் அரசு இழக்கும் என பொருளாதார வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்த வரி இழப்பை அரசு எவ்வாறு ஈடுசெய்யப் போகிறது என்பது தான் இன்று பலர் மத்தியிலும் உள்ள கேள்விக்குறியாகும். எதிர்வரும் ஆண்டில் நடைபெறவுள்ள நாடாளுமன்றப் பொது தேர்தலை மையமாக வைத்தே வரிக் குறைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதனை ஒரு பொதுவான கருத்தாகப் பலரும் கொண்டுள்ள போதும், அதற்கு அரச தரப்பில் வரி வருமான இழப்பானது வரி குறைப்பால் ஏற்படும் நுகர்வோரின் கொள்வனவுச் சக்தி அதிகரிப்பு உற்பத்தியை அதிகரித்து நாட்டில் பொருளாதார எழுச்சியை ஏற்படுத்தும். இதனால் வெளிநாடு நேரடி முதலீடுகள் அதிகரித்து மேலும் பொருளாதார வளர்ச்சி தோன்றும். அதனால் முழு நாடுமே நன்மையடையும் என்று விளக்கம் கூறப்படுகின்றது. அத்துடன் தேவையற்ற அரச செலவினங்களைக் குறைப்பதன் மூலமும் அரசு பெருமளவு வருமானத்தைச் சேகரிக்க முடியும் என்பதனையும் அரச தரப்பில் கூறப்படுகிறது. புதிய ஜனாதிபதி ஏற்கனவே அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தும் பல நடவடிக்கைகளை ஏற்படுத்தியுள்ளார். அத்துடன் நின்றுவிடாது ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்துவதன் மூலம் பெருமளவு அரச வரி வருமானம் இழக்கப்படுவதைத் தவிர்ப்பதன் மூலம் அரசு இந்த வரி இழப்பை ஈடுசெய்யலாம். இன்றைய உலகில் எந்தவிதமான வரி அறவீடுகளும் இன்றி பல நாடுகள் தங்கள் பொருளாதாரத்தை மிக வலுவாகக் கட்டியமைத்துள்ளன. அதே போல் மறைமுக வரியைக் குறைத்து நேரடி வரியை அதிகரித்தும் பல நாடுகளில் வரிக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே இலங்கையில் வரிக்குறைப்பும் சரியான பொருளாதாரக் கொள்கை வகுப்பின் மூலமும் திட்டமிட்ட பொருளாதார அமைப்பைக் கட்டியெழுப்புவதன் மூலமும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாகவே தென்படுகின்றன.

## 2018 வரி வருமானமும் 2020 வரி இழப்பும்

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் 2108 ஆம் ஆண்டுக்குரிய அறிக்கையின் பிரகாரம் அரசு பெற்றுக்கொண்ட வரி வருமானம் 900 பில்லியன் ரூபா ஆகும். இந்த வரி வருமான சேகரிப்பு மூலங்கள் பின் வருமாறு:

*வரி வகை ரூபா (பில்லியன்)*
*வருமான வரி 257*
*பெறுமதி சேர் வரி 462*
*தேசத்தை கட்டியெழுப்பும் வரி 106*
*பொருளாதார சேவைக் கட்டணம் 53*
*முத்திரை வரி 12*
*ஏனைய வரிகள் 10*
*மொர்த்தம் 900*

2019 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின்படி எதிர்பார்க்கப்படும் வரி வரவுகள் 2077 பில்லியன் ரூபாவாகும். எனினும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை பொருளாதாரத்தின் மந்தம் ஆகிய காரணிகளால் அரசு இந்த வரி வருமானத்தை எட்டப்போவதில்லை. 2019 ஆம் ஆண்டு எதிர்பார்ப்புகளின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்ட வரிக்குற்றைப்பின் அடிப்படையிலும் 2020 இல் அரசு 700 பில்லியன் ரூபாவை இழக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வளமான பொருளாதார எதிர்காலம்

ஆண்டாண்டு காலமாய் மக்கள் மீது வரிச்சுமைகளை சுமத்தி அரச செலவினங்களைக் கூட்டி பொருளாதாரத்தை ஒரு மந்தகதியில் வைத்திருந்த அரசுகளுக்கு மத்தியில் மக்களின் பொருளாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்புவதே தனது நோக்காகக் கொண்டு பதவியேற்றிருக்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கி, இந்த நாட்டை பொருளாதார வலுவுள்ள நாடாகக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற சிந்தனை எல்லோர் மத்தியிலும் ஏற்பட்டால் இந்த நாடு முன்னோக்கி நகர்வதை யாராலும் தடுக்கமுடியாது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அறிக்கைகள் மட்டும் போதுமானவையல்ல

இலங்கையின் பாதுகாப்புச் செயலர் கமால் குணரத்னவுக்கு எதிராகப் போர்க்குற்றச்சாட்டுக்களும், மனித உரிமைகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்பட்டுள்ளன. தென்னாபிரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் 'உண்மை மற்றும் நீதிக்கான திட்டம்' என்னும் அமைப்பு இந்தக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளது.

இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிப்பதற்குப் போதியளவு ஆதாரங்கள் உள்ளமையைப் போன்று பாதுகாப்புச் செயலர் கமால் குணரத்னவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மெய்ப்பிப்பதற்கும் போதியளவு ஆதாரங்கள் உள்ளன என்று தெரிவித்துள்ளார் உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா.

இறுதிப்போரின் போதும் அதற்கு முன்னதாகவும் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் ஜஸ்மின் சூக்கா கருத்துத் தெரிவிப்பது இதுவொன்றும் முதல் முறையல்ல. இதற்கு முன்னரும்கூட அவர் இந்த விடயப் பரப்பில் காத்திரமான கருத்துக்களையும், அறிக்கைகளையும் முன்வைத்துள்ளார் என்பது கண்கூடு. ஆனால் இவ்வாறான கருத்துக்கள் அனைத்தும் வெறும் அறிக்கைகளுடன் முடங்கி விடுகின்றன அல்லது காத்திரமான நகர்வை நோக்கிப் பயணிக்கவில்லை என்பதுதான் மெய்ப்பாடு. அதுவே தமிழர்களின் சாபக்கேடும்.

இறுதிப் போரின்போது காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் தொடர்பான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும் என்று காணாமல் போனவர்களின் உறவுகளால் தொடர்ச்சியாகப் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மனித உரிமைகள் தினமான நேற்றுமுன்தினம்கூட கொட்டும் மழைக்கு மத்தியிலும் பல்வேறு போராட்டங்கள் வடக்கு - கிழக்கில் நடத்தப்பட்டுள்ளன. இத்தகைய தொரு பின்னணியில் சூக்கா போன்ற மனித உரிமைகள் ஆர்வலர்கள் இந்தப் பிரச்சினையை அடுத்த கட்டத்தை நோக்கிச் செலுத்த வேண்டும் என்பது தவிர்க்கப்பட முடியாததாக அமைகின்றது.

2017ஆம் ஆண்டு மியன்மாரின் ரக்கினே மாகாணத்தில் வாழ்ந்த சிறுபான்மை மக்களான ரொஹிங்கிய முஸ்லிம்கள் மியன்மார் அரச படைகளால் இனச் சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்பட்டனர். மியன்மாரில் இனவழிப்பும், இனச் சுத்திகரிப்பும் இடம்பெற்றன என்று ஐ.நா மற்றும் அமெரிக்கா என்பன அறிவித்த போதிலும் மியன்மார் அரசு அதை மறுத்துவந்தது. 'ஐக்கிய நாடுகள் சபையால் நியமிக்கப்பட்ட உண்மையைக் கண்டறியும் குழு, மியன்மாரில் அனுமதிக்கப்படாத பட்சத்தில், அதன் அறிக்கையை ஏற்றுக்கொள்வதற்கு மியன்மார் தயாரில்லை. ஐக்கிய நாடுகள் சபை குறிப்பிடுவதைப் போன்று எவ்வித இனச்சுத்திகரிப்பும் இங்கு இடம்பெறவில்லை. ரக்கினேயில் என்ன நடந்தது என்பதை அறிவதற்கு உள்நாட்டில் சுதந்திரமான விசாரணைக்குழுவை நாம் அமைத்துள்ளோம்' என்று சர்வதேச சமூகத்துக்கு இறுக்கமான பதிலை வழங்கியது மியன்மார்.

எனினும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டுவந்த பல்வேறுபட்ட நடவடிக்கைகள் காரணமாக இன்று சர்வதேச நீதிமன்றத்தில் மியன்மார் ஏற்றப்பட்டுள்ளது. தி ஹேக் நகரில் உள்ள சர்வதேச நீதிமன்றத்தில் நேற்றுமுன்தினம் முன்னிலையான மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் சூச்சி தனது தரப்பு நியாயங்களை எடுத்தியம்பியுள்ளார். ரொஹிங்கியர்கள் விடயத்தில் சர்வதேச சமூகத்தின் வேகம் பாராட்டப்பட வேண்டியது.

ஆனால், ரொஹிங்கியர்களுக்கு ஒரு வருடத்தில் கிட்டிய நீதி அல்லது நீதிக்கான நகர்வு ஈழத் தமிழர்களுக்கு ஒரு தசாப்தத்தில் ஏன் கிட்டவில்லை என்பதுதான் தற்போது இமாலயக் கேள்வி. போர்க் குற்றங்களையும், மனித உரிமைகளுக்கு எதிரான அடக்குமுறைகளையும் எதிர்கொண்டவர்கள் எதிர்பார்ப்பது அறிக்கைகளை அல்ல. மாறாக நீதியை!



## பற்றைக்குள் பாரதியார்!

யாழ்ப்பாணம்,டிசெ.12
கைதடிச் சந்தியில் தனியார் காணி ஒன்றில் அமைக்கப்பட்ட பாரதியாரின் சிலை கவனிப்பாரற்ற நிலையில் பற்றைகளால் சூழப்பட்டுள்ளது.

இந்தச் சிலை கண்டி வீதியில் கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிலையத்துக்குத் தெற்குப்பக்கமாக உள்ள தனியார் காணியில் அமைக்கப்பட்டுள்ளது.

சிலை அமைக்கப்பட்டு ஒரு வருடத்துக்கு மேலாகியும், பாரதியாரின் முகம் உட்பட அனைத்தும் துணி ஒன்றால் சுற்றப்பட்ட நிலையில் காணப்படுகிறது. நேற்று பாரதியாரின் பிறந்த தினத்தில் கூட இந்தச் சிலை சீண்டுவாரற்ற நிலையிலேயே பரிதாபமாகக் காட்சியளித்தது.

எனவே இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டோர் உடனடியாகக் கவனமெடுத்து பாரதியார் சிலையை விரைவில் மக்கள் பார்வைக்கேற்றவகையில் திறந்து வைப்பதோடு அந்தச் சூழலையும் சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-288)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,டிசெ.12
"கந்தபுராணத்து வள்ளியம்மை திருமணப்படல மூலமும் சிவசம்புப்புலவர்கள் இயற்றிய உரையும்" என்ற மீள்பதிப்பு நூல் வெளியிடப்படவுள்ளது.
இந்த நிகழ்வு தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நாளை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
இந்த நூல் வெளியீடானது சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் அனுசரணையில் இடம்பெறவுள்ளது.




## உணவு திருவிழா

கொழும்பு,டிசெ.12
பீஸ் எக்ஸ்போ 2019 என்ற கொழும்பு உணவு திருவிழா எதிர்வரும் 14ஆம் 15ஆம் திகதிகளில் கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.
'த றோட் ரூ ரையிட்ஸ்' என்ற அமைப்பு இதனை ஏற்பாடு செய்துள்ளது.
ஐக்கிய நாடுகள் அமைப்பு பிரகடனப்படுத்தியுள்ள பேண்தகு அபிவிருத்தி இலக்கை எட்டுவதனை நோக்காகக் கொண்டு கொழும்பு உணவு திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

# வெள்ளம் தேங்கியதால் போக்குவரத்துப் பாதிப்பு

### கொடிகாமம் மத்தி மக்கள் பெரும் சிரமம்

கொடிகாமம், டிசெ. 12
கொடிகாமம் மத்தியில், ஜே/327 கிராம அலுவலர் பிரிவில், ரயில் கடவையோரமாக உள்ள மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.


கோப்புப்படம்

கடந்த வாரம் பெய்த கடும் மழைகாரணமாகவே அந்த மக்கள் போக்குவரத்துச் செய்யமுடியாதுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ரயில் கடவைக்கு அருகில் உள்ள வாய்க்கால் வெள்ளம்வழிந்தோடுவதற்குஏற்ற முறையில் துப்புரவு செய்யப்படாததன் காரணமாக வெள்ளம் தேங்கியுள்ளது என்றும், இதனால் அந்தப் பகுதியில் உள்ள க.பொ.த. சாதாரணதரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் முதல், வியாபாரிகள், பணியாளர்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார்கள் உட்பட பலர் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்குப் பெரும் சிரமங்களைச் சந்தித்து வருகின்றனர் தெரிவிக்கப்பட்டது.

இதுதொடர்பாகசாவகச்சேரி பிரதேசசபையின்தவிசாளர் க.வாமதேவன் உடனடியாக உபதவிசாளர் செ.மயூரனை வெள்ளம் தேங்கிநிற்கும் இடத்தைப் பார்வையிட்டு வெள்ளம் வழிந்தோடக்கூடிய வழிகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார். (ஐ-159)

# திட்டமிடல் இல்லாததால் விவசாயிகளுக்கே அழிவு

மன்னார், டிசெ.12

உரிய திணைக்களங்கள் வாய்க்கால்களை ஆழப்படுத்தி சீரமைக்கும் பணிகள் முன்னரே மேற்கொள்ளப்பட்டிருந்தால் பயிர்களை அழிவிலிருந்து பாதுகாத்திருக்க முடியும் என்று மன்னார் மாவட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.



கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக மன்னார் மாவட்டத்தில் பெய்த கடும் மழை காரணமாக 15 ஆயிரத்து 853 ஏக்கர் பயிர்கள் நீரில் மூழ்கிப் பாதிக்கப்பட்டுள்ளன. அது மட்டுமல்லாது இரண்டு குளங்கள் உடைப்பபெடுத்தும் பல குளங்கள் இன்னும் வான்பாய்ந்த வண்ணமும் உள்ளன.

நானாட்டான், மாந்தை, முசலி, மடு போன்ற பிரதேசங்களில் நெல்வயல்களை மூடியிருந்த வெள்ளம், சில இடங்களில் வற்றியுள்ளது. அதனால் சில ஏக்கர் வயல் நிலங்கள் அழிவிலிருந்து தப்பியுள்ளன. பல ஏக்கர் பயிர்கள் முற்றாக அழிவடைந்துள்ளன. அதனால் வயல்களில் மீண்டும் விதைக்கும் நடவடிக்கைகளில் விவசாயிகள் இறங்கியுள்ளனர்.

"சில இடங்களில் வாய்க்கால்கள் சீரமைக்கப்படாமை யால், நீர் விரைவாக வெளியேறியது. இந்தச் செயற்பாடுகளை திணைக்களங்கள் மழை வருவதற்கு முன்னரே மேற்கொண்டிருந்தால், 15 ஆயிரத்து 853 ஏக்கர் மட்டுமல்ல மக்களின் குடியிருப்புகளும் வெள்ளம் புகாமல் இருந்திருக்கும். மழையால் பாதிப்புற்ற வயல்களில் மீண்டும் விதைப்புச் செய்வதற்கு மேலும் கடன்பெற வேண்டிய நிர்ப்பந்தம் எமக்கு ஏற்பட்டுள்ளது. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் உரிய இழப்பீடுகளை வழங்கவேண்டும்" என்று விவசாயிகள் தெரிவித்தனர். (க-213)

## கலைவிழாவும் பரிசளிப்பும்

கொடிகாமம், டிசெ.12

கைதடி நவபுரம் நவசக்தி முன்பள்ளியின் வருடாந்த கலைவிழாவும், பரிசளிப்பு நிகழ்வும் நாளைமறுதினம் நவபுரம் ஸ்ரீ துர்க்கை அம்மன் மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

முன்பள்ளி முகாமைத் துவக்குழு தலைவி திருமதி ல.சித்திரா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கைதடி மக்கள் வங்கி முகாமையாளரும் மக்கள் நலன் பேணும் நட்புறவுக்கழகத்தின் தலைவருமான க.சிறிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக எருதிடல் அ.த.க பாடசாலை அதிபர் யே.தர்மதுரை, ஜே/289 கிராம அலுவலர் க.முல்லைமாறன், கைதடி தெற்கு கிராம அலுவலர் செல்வி விஜயஸ்ரீ நியூறிசா உட்படபலர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-159)

## மரக்கறிகளின் விலை அதிகரிப்பு

யாழ்.குடாநாட்டில் மரக்கறிகளின் விலைகள் திடீரென அதிகரித்துள்ளன. திருக்காத்திகை உற்சவம், விநாயகர் விரதம் ஆரம்பம் போன்ற காரணத்தால் விலை அதிகரித்துள்ளது. கடந்த வாரம் பெய்த மழையால், வடக்கில் மரக்கறிச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. அதனால் திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார் மடம், சங்கானை, கொடிகாமம், சாவகச்சேரி போன்ற சந்தைகளுக்கு மரக்கறிகளின் வருகை குறைவடைந்துள்ளது.

திருநெல்வேலி சந்தையில் நேற்றைய நிலவரப்படி கத்தரிக்காய் கிலோ 180 ரூபா, பாவற்காய் கிலோ 360 ரூபா, பயிற்றங்காய் கிலோ 280 ரூபா, கரட் கிலோ 340 ரூபா, லீக்ஸ் கிலோ 280 ரூபா, தக்காளிப்பழம் கிலோ 300 ரூபா, வெண்டிக்காய் கிலோ 90 ரூபா, மரவள்ளிக் கிழங்கு கிலோ 120 ரூபா, கோவா கிலோ 180 ரூபா, பீற்றூட் கிலோ 320 ரூபா, பூசணிக்காய் கிலோ 120 ரூபா, போஞ்சி கிலோ 240 ரூபா, பச்சை மிளகாய் கிலோ 350 ரூபா, கீரை ஒரு பிடி 70 ரூபா என விற்பனை செய்யப்பட்டன. (க-17)

## குடாநாட்டில் இந்த வருடம் மீன்பிடி முறைகளை மீறிய 91 மீனவர்களிடம் ரூ.660,000 தண்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இந்த வருடம் கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் 99 வழக்குகள் தாக்கல் செய்திருக்கின்றது. வழக்குடன் தொடர்புபட்ட 91 மீனவர்களிடமிருந்து மொத்தமாக 6 லட்சத்து 60 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது என்று திணைக்களம் தெரிவித்தது.

2018ஆம் ஆண்டில் இந்தத் திணைக்களம் 71 வழக்குகளைத் தாக்கல் செய்திருந்தது. அதில் 52 படகுகள் கைப்பற்றப்பட்டிருந்தன. இந்த வழக்குகளுடன் தொடர்புடைய 174 மீனவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அவர்களிடம் 10 லட்சத்து 51 ஆயிரம் ரூபா தண்டம் அறவிடப்பட்டது.

தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலை பயன்படுத்தியமை, கடலாமை பிடித்தமை உள்ளிட்ட வழக்குகளில் தண்டம் அறவிடப்பட்டது என்று திணைக்களத்தினர் தெரிவித்தனர். (த-105)

## இலட்சார்ச்சனை

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இலட்சார்ச்சனை இன்று காலை 8 மணிக்கும், பிள்ளையார் கதைப்படிப்பு முற்பகல் 10 மணிக்கும் ஆரம்பமாகும்.

தொடர்ந்து 20 நாள்கள் பூசைகள் இடம்பெறவுள்ளன. எதிர்வரும் 31ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கஜமுகாசுரன் போர், மறுநாள் புதன்கிழமை காலை 8 மணிக்கு கணபதி ஹோமம் இடம்பெறும். (க-115)

## நினைவுப்பேருரை

பேராசிரியர் சு.சுசீந்திரராஜா நினைவுப்பேருரை இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு, யாழ்.பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

"பேராசிரியர் சுசீந்திரராஜா ஆய்வுகளின் அகராதியில் பங்களிப்பு" எனும் தலைப்பில் சென்னைப் பல்கலைக்கழக பேராசிரியர் பெ.மாதையன் உரையாற்றுவார் என்று மொழியியல் ஆங்கிலத்துறை அறிவித்துள்ளது. (க)

# கிருமித் தொற்றால் பெண் இறந்தார்

### ஆணி குத்தியதற்காக சிகிச்சைக்குச் சென்றிருந்தார்

யாழ்ப்பாணம், டிசெ. 12

காலில் ஆணி குத்தியதற்குச் சிகிச்சை பெறச் சென்றிருந்த பெண், நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். மூளையில் கிருமித் தொற்று ஏற்பட்டதாலேயே இறந்தார் என்று காரணம் கூறப்பட்டுள்ளது.

பேலியகொடையைச் சேர்ந்த திசாரா மதுசானி (வயது - 29) கடந்த 8ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூருக்குக் கணவனுடன் வந்திருந்தார். அவருடைய காலில் ஆணி குத்தியதால் நோ ஏற்பட்டு பின்னர் புண்ணாகியது. அதற்குச் சிகிச்சை பெற கடந்த திங்கட்கிழமை இரவு யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனை மருத்துவ விடுதியில் தங்கி சிகிச்சை பெற்றார். இந்த நிலையில், நேற்று அவர் உயிரிழந்துவிட்டார்.

மூளையில் கிருமித்தொற்று ஏற்பட்டதால் அவர் உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை நடத்தினார். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-26)

## "ஐயப்பன் சரிதம்" நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ.12

சண்டிலிப்பாய் வேவிற்பதி ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் ஆலய 'ஐயப்பன் சரிதம்' நூல் வெளியீட்டு நிகழ்வு ஆலய மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. ஆலய பரிபாலன சபைத் தலைவர் செ.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், ஆசியுரைகளை கதிரமலைசிவன் ஆலய முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்களும், சீரணி நாகபூசணி அம்பாள் ஆலய கு.சோமாஸ்கந்தக்குருக்களும் ஆற்றவுள்ளனர்.

வெளியீட்டுரையை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்க சைவ மாணவர் சபை தலைவர் ஜீவ.சஜீவன் வழங்கவுள்ளார்.

நூலை வெளியிட்டு மணிகண்ட சபை குருமுதல்வர் குருசாமி சிவஸ்ரீ பா.பாலஸ்கந்தரூபக்குருக்கள் சிறப்புரையாற்றவுள்ளார் என்றும் ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (ஐ)

## சிறார் மகிழ்களம் திறப்பு

கொடிகாமம், டிசெ.12

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலய சூழலில் அமைக்கப்பட்ட சிறார் மகிழ்களம் நாளைமறுதினம் பிற்பகல் 3.30 மணிக்கு திறந்துவைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி நகரசபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி தேவந்தினி பாபு, மதிப்புறு விருந்தினராக சாவகச்சேரி தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.ஆர் ராஜபக்ஷ ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நுணாவில் கனடா அபிவிருத்தி சங்கத்தின் அனுசரணையில் இந்தச் சிறார் மகிழ்களம் அமைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

## வாய்க்கால் சீரமைப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 12

கிளிநொச்சி இந்துக் கல்லூரி அருகே வெள்ளம் வழிந்தோடும் வாய்க்கால் மறுசீரமைக்கப்படுகின்றது.

அந்த வாய்க்காலின் முடிவிலுள்ள மதகு சிறியதாகவுள்ளது. அதில் வெள்ளம் அதிகளவில் வரும்போது மதகு ஊடாகச் செல்லமுடியாத நிலையில், பாடசாலை வளாகத்துக்குள் சென்றுவிடுகின்றது. அது மாணவர்களுக்கு இடையூறாக இருந்துவருகின்றது.

இந்த நிலையிலேயே மறுசீரமைப்புப் பணி ஆரம்பமாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (த-105)

# திட்டமிடாத அபிவிருத்தியாலேயே தென்மராட்சியில் வெள்ள இடர்

## அரச அலுவலர்கள் சுட்டிக்காட்டு

கொடிகாமம், டிசெ. 12

தென்மராட்சியில் திட்டமிடப்படாத சில அபிவிருத்திகள் இடம்பெற்றுள்ளன என்று தெரிவிக்கும் அரச அலுவலர்கள், இயற்கை நில அமைப்புக்கேற்ப திட்டமிட்டு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் வெள்ளத்தால் ஏற்பட்ட இடர்களைத் தடுத்திருக்கலாம் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இடர் முகாமைத்துவம் தொடர்பாடல் மற்றும் டெங்கு ஒழிப்பு தொடர்பான கலந்துரையாடல் சாவகச்சேரிப் பிரதேச சபையின் மாநாட்டு மண்டபத்தில், சபைத் தவிசாளர் க.வாமதேவன் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இதில் கிராம அலுவலர்கள், பிரதேச சபைச் செயலர், உபதவிசாளர், உறுப்பினர்கள், பொலிஸார், சுகாதாரப் பரிசோதகர்கள், தொழினுட்ப அலுவலர்கள், வருமான வரிப் பரிசோதகர்கள் உட்பட பல அலுவலர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

தற்போது வெள்ளத்தால் ஏற்பட்டுள்ள இடர்கள் பற்றிக் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு எவ்வாறு அதை எதிர்கொள்வது என்பது பற்றி இதன்போது ஆராயப்பட்டிருந்தது. அதில் திட்டமிடப்படாத அபிவிருத்தி தொடர்பில் கருத்துக்களை அலுவலர்கள் முன்வைத்தனர்.

"இடர்கள் எங்களால்தான் வருகின்றன. அபிவிருத்தி செய்யும்போது புவியின் நீரோட்டம், இயற்கையான வடிகாலமைப்புக்களை ஒருவரும் கவனத்தில் கொள்வதில்லை. மக்களோ, அலுவலர்களோ திட்டத்தை மதிப்பீடு செய்யும்போது காலஅவகாசம் கொடுக்க வேண்டும். மக்களுடன் இணைந்து எத்தகைய இடங்களில் செய்யப் போகிறோம்? எங்கே வடிகால் அமைக்கப் போகிறோம்? என்று தீர்மானிக்க வேண்டும். திணைக்களங்கள் இரண்டு மணித்தியாலத்தில் திட்ட முன்மொழிவுகளைக் கேட்பார்கள், நிதி திரும்பிப் போய்விடும் என்று கூறுவார்கள். அவ்வாறு கூறினால் அலுவலர்கள் ஒன்றும் செய்ய முடியாது. மேலதிகாரிகளிடமிருந்து ஒரு மாதத்துக்கு முன்னர் திட்டங்கள் வர வேண்டும்.

இவற்றைப் பின்பற்றி அபிவிருத்தி மேற்கொண்டால் எதிர்காலத்தில் வரும் இடர்களைத் தவிர்க்கக் கூடியதாக இருக்கும்.

வெள்ளம் வந்தால் முகாம்களுக்குச் செல்லுங்கள் என்றோ, அப்படிச் சென்றால்தான் நிவாரணம் வழங்கப்படும் என்றோ கட்டாயப்படுத்தக் கூடாது. உறவினர்கள் வீடுகளில் இருந்தாலும்கூட நிவாரணங்கள் வழங்கப்படும்" என்று இதன்போது அதிகாரிகள் தெரிவித்தனர்.

(து-159)



# மணல் திருட்டை தடுப்பதுஎப்படி?

## வழி கூறுகின்றனர் மக்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 12

கனியவளத் திணைக்களம், புவிச்சரிதவியல் திணைக்களம் என்பனவற்றின் அலுவலகங்களை வடக்கில் அமைக்கவேண்டும். அவற்றினூடாக வடக்கில் மணல் திருட்டைத் தடுக்கவேண்டும் என்று கரையோர மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மணல் மற்றும் கிரவல் விநியோகத்திலுள்ள தடங்கல்கள் தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் இருவருடங்களுக்கு முன்னர் - 2017ஆம் ஆண்டு ஜூலை 31ஆம் திகதி -யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜெயசுந்தர, யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றிருந்தது. அதில் யாழ்ப்பாண மாவட்ட மணல் திருட்டைத் தடுக்கவும், கனியவளங்கள் தொடர்பான விநியோகத்தை நெறிப்படுத்தி அனுமதியை வழங்கவும் புவிச்சரிதவியல், கனியவளம் ஆகிய திணைக்களங்களின் அலுவலகங்களை நிறுவ முடிவெடுக்கப்பட்டிருந்தது. அலுவலகங்களை அமைக்க முடியாதநிலை ஏற்பட்டால், குறித்த திணைக்களங்களின் அதிகாரிகளையாவது வடக்கில் இயங்கச் செய்வது என்ற தீர்மானமும் எடுக்கப்பட்டிருந்தது. இந்த முடிவெடுக்கப்பட்டு 2 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும் எந்தவிதமான முன்னேற்றமும் காணப்படவில்லை.

மணல் அகழ்வில் இன்றும் பிரச்சினை நீடிப்பதால், குறித்த திணைக்களங்கள் இது தொடர்பில் உரிய கவனம் செலுத்த வேண்டும், அந்தத் திணைக்களங்கள். வடக்கே வரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(து-105)

# மாட்டிறைச்சி கடத்தியோர் மாட்டினர் பொலிஸில்!

யாழ்ப்பாணம், டிசெ. 12

புங்குடுதீவு மூன்றாம் வட்டாரத்தில் 7 மாடுகளை வெட்டி இறைச்சியை விற்று வந்தனர் என்ற குற்றச்சாட்டில் சிலர்கடந்தஞாயிற்றுக்கிழமைகைதுசெய்யப்பட்டுள்ளனர். சுழிபுரத்திலுள்ள மாட்டிறைச்சி வியாபாரிக்கு வழங்குவதற்காகச் சட்டவிரோதமாக இறைச்சியைக் கொண்டு சென்ற நபரொருவர் மண்டைதீவு சோதனைச் சாவடியில் வைத்து வாகனத்துடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.



அவரிடம் விசாரணை நடத்திய உப பொலிஸ் பரிசோதகர் விவேகானந்தராஜ் தலைமையிலான குழுவினர், புங்குடுதீவில் சுற்றிவளைப்பு நடத்தி ஒரு கும்பலைக் கைது செய்தனர்.

அவர்களின் பிடியிலிருந்த பல மாடுகளையும் மீட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் இதே குற்றத்துக்காக இரண்டு வருடங்களுக்கு முன்னர் சிறைத்தண்டனை அனுபவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(து-154)

# மானிய விதை உருளைக்கிழங்கில் – முறைகேடு செய்த விவசாயிகள் சிவப்புப் பட்டியலில்!

அச்சுவேலி, டிசெ.12

மானிய விலையில் விதை உருளைக் கிழங்கைப் பெற்று கைமாற்றியவர்கள் மற்றும் விற்பனை செய்த விவசாயிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் செயற்படும் மத்திய விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சசிபிரபா கைலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



பல செயற்பாடுகள் மற்றும் விவசாயிகள் பற்றிய விவரங்கள் கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன. கடந்த காலங்களில் மானிய விலை உருளைக்கிழங்குப் பயனாளிகள் தெரிவில் சில தவறுகள், முறைகேடுகள் நிகழ்ந்தன என்று முறைப்பாடுகள் செய்யப்பட்டன. அவற்றைக் கருத்திற்கொண்டு இந்த வருட விநியோகத்துக்கான பயனாளிகள் தெரிவு மிகக் கண்டிப்பான முறையில் நடைபெற்றது.

அந்த நடைமுறைகளிலும் சில விவசாயிகள் முறைகேடான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர் எனத் தெரியவருகிறது. இவ்வாறு மானியவிலையில் விதை உருளைக் கிழங்கைப் பெற்றுக் கைமாற்றியவர்கள் மற்றும் விற்பனை செய்தவர்கள் தொடர்பான விவரங்களைக் கண்டறிவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பாக அறிந்தவர்கள் குறித்த விவசாயிகள் பற்றிய விவரங்களை யாழ்ப்பாண மாவட்டச் செயலக விவசாயத் திணைக்களத்துக்கு அறியத் தரலாம்.

இந்த வருடம்வரை உருளைக் கிழங்கை மானிய விலைக்குப் பெற்று கைமாற்றியவர்கள், விற்பனை செய்தவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் எதிர்காலத்தில் எந்தவிதமான விவசாய மானிய உதவியையும் பெற்றுக்கொள்ள முடியாதளவுக்கு சிவப்புப் பட்டியலில் பதிவு செய்யப்படவுள்ளனர் எனத் தெரிவித்தார்.

(து-11)




# கொடிமுந்திரிகை நடுகை

யாழ்ப்பாணம், டிசெ. 12

கொடிமுந்திரிகைச் செடிகள் நடுகை செய்யும் நிகழ்வு வலிகாமம் வடக்கு பன்னாலையில் அண்மையில் நடைபெற்றது.

திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் ஏற்பாட்டில் மத்திய அரசின் நிதியுதவியில் 5 பயனாளிகளுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான கொடி முந்திரிகைகள் வழங்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு நோய்த்தாக்கங்களால், அழிந்துவரும் நிலையிலுள்ள கொடிமுந்திரிகைச் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக இவை நடுகைசெய்யப்பட்டன.

நிகழ்வில் பிராந்திய விவசாய ஆராய்ச்சி நிலைய மேலதிக ப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஜே. அரசகேசரி, வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சி. சிவகுமார், மாவட்ட விவசாயப் பணிப்பாளர், திருநெல்வேலி ஆராய்ச்சி நிலையப் பொறுப்பதிகாரி, திணைக்கள அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டிருந்தனர். (து-111)


கோப்புப்படம்

# வடமராட்சி வானில் வட்டமிடும் பட்டங்கள்

வடமராட்சி,டிசெ.12
வடமராட்சிப் பிரதேசத்தில் பட்டம் விடும் சீசன் தற்போது ஆரம்பமாகியுள்ளது.

இந்த மாதத்திலிருந்து ஆரம்பமான பட்டம் விடும் சீசன் எதிர்வரும் தைப்பொங்கல் தினத்தன்று உச்சக்கட்டத்தை அடையும். பெப்ரவரி மாதம் வரை பட்டங்கள் வானத்தில் பறக்கவிடப்படும்.

பட்டம் விடும் சீசனில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை பட்டம் விடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அத்துடன் விதம் விதமான பட்டங்கள் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளில் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மின் விளக்கு ஒளியுடன் பட்டங்கள் வானில் பறப்பதை பகல் இரவு என்ற வேறுபாடின்றி அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (க -173)

# சமாதான நடைபயணம்

யாழ்ப்பாணம்,டிசெ.12
"சமாதானத்தின் வேர்கள் ஆழ ஊடுருவட்டும்" எனும் தலைப்பில் மாதகலில் இருந்து கொழும்பு ஜனாதிபதி அலுவலகம் நோக்கி நேற்று நடைபயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாதகல் சங்கமித்தா விகாரையில் இருந்து தனது தாயின் ஆசிர்வாதத்தோடு நடைபயணத்தை வி.சகாதேவன் என்பவர் ஆரம்பித்துள்ளார். சமாதானச் செய்தியைச் சிங்களமக்களுக்கும், நாட்டை நேசிக்கும் அனை வருக்கும் வலியுறுத்தும் வகையில் நடைபயணத்தை ஆரம்பித்துள்ளேன் என்று அவர் தெரிவித்துள்ளார். (சுரி1,111,21,26)



# சிட்டிக்கு 'மவுசு'

யாழ்ப்பாணம்,டிசெ.12
திருக்கார்த்திகை விளக்கீட்டை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் சிட்டி விற்பனை நேற்றுக் களை கட்டியது.

குடாநாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் வியாபாரிகள் வாகனங்களில் வைத்து சுட்டிகளை விற்பனை செய்தனர்.

அதனைவிட வர்த்தக நிலையங்களிலும் சிட்டிகள் விற்பனை செய்யப்பட்டன.

திருநெல்வேலிச் சந்தையிலேயே சிறிய, பெரிய சிட்டிகள் அமோகமாக விற்பனையாகின. (க-17)



# காவ்வாய்க்குள் பெருகும் நுளம்புகள்

கைதடி,டிசெ.12
கைதடிச் சந்தியிலுள்ள தபாலகத்துக்கு அருகே இருக்கும் கால்வாயில் பெருமளவு நுளம்புகள் பெருகியுள்ளமையால் டெங்கு பரவும் அபாய நிலைமை ஏற்பட்டுள்ளது.

அருகிலுள்ள தேநீர்ச் சாலைகளில் இருந்து வெளியேறும் கழிவு நீரும் வாய்க்காலில் கலப்பதுடன், கால்வாயைச் சுற்றிப் பெருமளவு பற்றைகள் வளர்ந்துள்ளன.

கழிவு நீர் வெளியேறாது. ஓரிடத்தில் தேங்கி நிற்பதாலும் நுளம்பின் பரம்பல் அதிகரித்துள்ளது.


கால்வாயிலிருந்து துர்நாற்றம் வீசுகிறது. இதனால் மூக்கைப் பொத்தியபடி செல்ல வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து கால்வாயைச் சீர் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-288)

# வல்லமையுண்டு; வாய்ப்பில்லை!

## பனையோலை உற்பத்தி முயற்சியாளர்கள் ஆதங்கம்

மன்னார்,டிசெ.12
மன்னார், கயவன் குடியிருப்புப் பகுதியில் பனை ஓலைப் பொருள்களுக்கு உரிய சந்தை வாய்ப்பைப் பெற்றுத் தருமாறு இளம் தொழில் முயற்சியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



மன்னாரிலுள்ள கயவன் குடியிருப்பு, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, துள்ளுக்குடியிருப்பு போன்ற பகுதிகள் மிகவும் பின்தங்கிய கிராமங்கள். இங்கு பனம் பொருள் உற்பத்தி வருமானங்களை வாழ்வாதாரமாகக் கொண்டு 20 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் உள்ளன. இவற்றில் பெண் தலைமைத்துவக் குடும்பங்களும் உள்ளன.

பனம் பொருள் உற்பத்திகளைச் செய்வதற்கு, ஐந்து வருடங்களுக்கு முன் பயிற்சி பெற்றவர்களும், உரிய சந்தைவாய்ப்பு இல்லாத காரணத்தால் வருமானம் ஈட்ட முடியாதுள்ளனர்.

"பிளாஸ்ரிக்கில் நாம் பயன்படுத்தும் அத்தனை பொருள்களையும் பனை ஓலை மூலம் செய்து தரும் வல்லமை எம்மிடம் உண்டு. ஆயினும் பனம் பொருள்களை உற்பத்தி செய்வதற்காகப் பெறப்படும் ஒரு குருத்து 50 ரூபா, அதற்கான சாயம் 100 ரூபா, பிரயாணச் செலவு 150 ரூபா, ஒரு கூடையின் விலை 350 ரூபா எனின் தற்போதைய விலைவாசி உயர்வால் மேற்கொண்டு எதுவும் செய்யமுடியாதுள்ளது. எமக்கு ஒழுங்கான சந்தைப்படுத்தல் வசதி செய்து தரப்பட்டால் இந்தத் தொழிலை சிறந்த முறையில் செய்து வருமானம் ஈட்ட முடியும் என்று அவர்கள் தெரிவித்தனர். (க-213)




# மலிவு விலை உணவகம்!

காங்கேசன்துறை,டிசெ.12
குறைந்த விலையில் உணவுகளைக் கொள்வனவு செய்யக் கூடிய சிற்றுண்டிச்சாலை காங்கேசன்துறையில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது

வடமாகாண மூத்த பிரதிப்பொலிஸ்மா அதிபர் ரவி விஜேவர்த்தன சிற்றுண்டிச் சாலையைத் திறந்து வைத்தார்.

நிகழ்வில் யாழ் மாவட்ட பொலிஸ்மா அதிபர் மகேஸ் சேனாரத்தின, காங்கேசந்துறை மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சர் சேனாதீர மற்றும் பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர். இந்தச் சிற்றுண்டிச்சாலையில் குறைந்த விலையில் பொலிஸார் மற்றும் பொதுமக்கள் உணவுகளைக் கொள்வனவு செய்ய முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-26)

# மணல் அகழ்வுக்கு மன்னாரில் தடை

மன்னார்,டிசெ.12

மன்னார் தீவுக்குள் மணல் அகழ்வு செய்வதை முற்றாகத் தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அதற்கமைவாக கனிம வளம் மற்றும் சுற்றுச் சூழல் உயர் அதிகாரிகளுடன் கலந் துரையாடுவது என்று மன்னார் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டம், மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இதில் மணல் அகழ்வு தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானத் துக்கு இணைத்தலைவர் காதர் மஸ் தான் உட்பட வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந் தன் சாள்ஸ் நிர்மலநாதன், ரிஷாத் பதியுதீன் ஆகியோரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மன்னார், தலைமன்னார், பேசா லைப் பகுதிகளில் மணல் அகழ்வு இடம்பெறுவதுடன், அந்த இடங்க ளில் ஏற்பட்டுள்ள பள்ளங்களில் நீர் தேங்கி நிற்கிறது.

மழை நீரைக் கடல் உள்வாங்குவது தடைப்பட்டு, மன்னார் நீரினுள் மூழ் கும் அபாயம் உள்ளது. தொடர்ச்சி யாக மணல் அகழ்வு நடைபெறுமா னால் இன்னும் சில வருடங்களில் மன்னார் தீவு பெரும் அழிவைச் சந்திக்க நேரிடும். தோண்டப்பட் டுள்ள பள்ளங்களில் கால்நடைகள் கூடவிழுந்து இறக்கின்றன என்று பலர் கூட்டத்தில் சுட்டிக்காட்டினர். "மணல் அகழ்வால் மன்னாரின் வளங்கள் பாதிக்கப்படுகின்றமை ஒரு புறம் இருக்க, உயிரழிவுகளும் ஏற்படு கின்றன.

அவற்றைக் கருத்தில் கொண்டு மன் னாரில் மணல் அகழ்வை முற்றாக நிறுத்த வேண்டும்"- என்று நாடாளு மன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார். இதனையடுத்து மணல்அகழ்வைத் தடுக்கும்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (க-213)

# மன்னார் நகரசபை பட்ஜெட் வெற்றி



மன்னார்,டிசெ.12

மன்னார் நகர சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள் ளது. சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மதிப்பீட்டு வரைவு கடந்த மாதம் 21 ஆம் திகதி சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த நிலை யில் மன்னார் நகர சபையின் 22 ஆவது அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதில் வரவு செலவுத் திட்டத்தின் மதிப்பீடு தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டு வரைவு சபையில் அனைத்து உறுப்பினர்களின் ஆதரவோடும் வெற்றிகரமாக நிறை வேற்றப்பட்டது. (க-56)

# வவுனியா நகரில் மரக்கறிச் சந்தை

வவுனியா,டிசெ.12

வவுனியா நகரசபைக்குட்பட்ட பகுதியில் புதிய மரக்கறி சந்தைக் கட்டடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப் பட்டுள்ளது. நகர அபிவிருத்தி அதிகார சபையின் 2கோடியே 50இலட்சம் ரூபா நிதியில் நவீன முறையில் ஒரு மாடியைக் கொண்டதாக இந்தச் சந்தை அமைக் கப்பட்டுள்ளது.

சந்தையின் மேல் தளத்தில் ஆறு கடைகளும், கீழ்த ளத்தில் 25 பேர் வியாபாரம் மேற்கொள்ள கூடிய பகு திகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் முன்னர் வியாபாரம் மேற்கொண்ட வர்களுக்குக் கீழ் கடைகள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய கடைகள் திறந்த கேள்வி அறிவித்தல் மூலம் வியாபாரிகளுக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. திறப்பு விழாவில் நகரசபைத் தலைவர் இ.கௌதமன் மற்றும் உபநகரபிதா சு.குமாரசாமி,செய லாளர் இ.தயாபரன் மற்றும் சபையின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். (க-110)

# 'முசலியையும் கவனியுங்கள்'

மன்னார்,டிசெ.12

முசலிப் பிரதேசத்தின் அபிவிருத்தியில் கவனம் செலுத் தப்பட வேண்டும் என்று முசலிப் பிரதேச சபையின் தவிசாளர் அப்துல் சுபிஹான், மன்னார் மாவட்ட அபி விருத்திக் குழுக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

"மன்னார் மாவட்டத்தில் மிகவும் பின் தங்கிய, குறைந்த வருவாயைக் கொண்டுள்ள முசலிப் பிரதேசத்தில் அதி கமான குறைபாடுகள் உள்ளன. சிலாவத்துறை வீதி சுற்றுவட்டத்தில் வடிகான் அமைப்பு, முசலிப்பிரதேசத்தில் மக்கள் செறிவாக நடமாடும் பகுதியை அடையாளப் படுத்தி பொது மலசலக்கூடம் அமைத்தல், வறட்சிக் காலத்தில் ஏற்படும் குடிதண்ணீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் உள் ளிட்ட பல பிரச்சினைகள் உள்ளன.

முசலிப்பிரதேசத்தில் பல மதங்களைச் சார்ந்தவர்கள் இருந்தாலும், மிகவும் பின்தங்கிய பிரதேசத்துக்கு முன்னுரிமை வழங்கிக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும்" என்று தவிசாளர் இந்தக் கூட்டத்தில் உருக்கமாகக் கோரினார். (க-213)

# தேசிய ரீதியில் எட்டாம் இடம்

புதுக்குளம் கனிஷ்ட வித்தி. சாதனை

வவுனியா,டிசெ.12

வவுனியா புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயம் இந்த வருடம் இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் தேசிய ரீதியில் 8 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது என்று கல்வி அமைச்சின் அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாக வவுனியா வடக்கு கல்வி வலயம் பல்வேறு துறைகளிலும் சாதித்து வருகிறது.

புதுக்குளம் கனிஷ்ட வித்தியாலயம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் சிறந்த சித்தி யையும், முதல் மூன்று மாணவர்களில் ஒருவரை யும் பெற்றுள்ளது. இந்த நிலையில் 2019 ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் கணிப்பீட்டின் அடிப்ப டையில் புதுக்குளம் பாடசாலை தேசிய மட்டத்தில் 8 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

அதேவேளை வட மாகாணத்தில் உள்ள 12 வலயங் களில் வவுனியா வடக்கு வலயம் புலமைப்பரிசில் பரீட்சையில் 5 ஆம் இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-110)

# பொதுக்கூட்டம்



யாழ்ப்பாணம், டிசெ.12

அராலி கிழக்கு அம்பாள் சி.க.கூ. சங்கத் தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அம் பாள் முன்பள்ளி மண்டபத்தில் அண்மை யில் நடைபெற்றது.

இதன்போது புலமைப்பரிசில் பரீட்சை யில் சித்தி பெற்ற மாணவர்கள் மதிப்ப ளிப்பு, வருடாந்த செயற்பாட்டு அறிக்கை சமர்ப்பித்தல், வருடாந்த கணக்கறிக்கை சமர்ப்பித்தல், புதிதாக இணைந்த அங் கத்தவர்களை அங்கீகரித்தல், விருந்தினர் உரை, புதிய நிர்வாகத் தெரிவு என்பன இடம்பெற்றன என சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஐ)

# பாதீட்டை தோற்கடிப்பது முட்டாள்தனமானது

மன்னார்,டிசெ.12

அரசியல் தேவைகளுக்காக பிரதேச சபைகளின் வரவு செலவுத் திட் டங்களைத் தோற்கடிப்பது முட்டாள்தனமான முடிவு என்று நாடாளு மன்ற உறுப்பினர் சிவமோகன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, "பிரதேச சபை விடயங்கள், அந்தந்தப் பிரதேசங்களின் அபிவிருத்தியுடன் சம்பந்தப் பட்டவை. இங்கு அரசியல் சாராது அனைத்து உறுப்பினர்களும் ஒன் றிணைந்து பிரதேச அபிவிருத்திக்காகச் செயல்பட வேண்டும். உறுப் பினர்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக சபைகளின் வரவு செலவு திட்டங்களைத் தோற்கடிப்பது முட்டாள் தனமானது. எனவே பாதீடு களை அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக தோல்வியுறச் செய்வது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. இந்த விடயத்தில் அனைத்துப் பிரதேச சபை உறுப்பினர்களும் கவனம் எடுத்து பிரதேச அபிவிருத்தியைக் கருத்தாகக் கொண்டு ஒற்றுமையாகச் செயல்பட வேண்டும். மக்க ளின் வாழ்வியலைப் பாதிக்கும் வகையில் முட்டாள்தனமான முடிவு களை எடுப்பார்களானால், நிச்சயமாக அவர்கள் எதிர்கால அரசியலில் இருந்து அப்புறப்படுத்தப்படுவர்" என்றார். (க-213)

# ஒளிவிழா நிகழ்வு




மன்னார்,டி.செ.12

மன்னார் கரித்தாஸ் வாழ்வுதய நிறுவனத்தால் நடத்தப் பட்டுவரும் பாலர் பாடசாலை தொண்டர் ஆசிரியர்க ளுக்கான வருடாந்த ஒளிவிழா நிகழ்வு நேற்றுமுன்தி னம் இடம்பெற்றது.

கரித்தாஸ் வாழ்வுதய மண்டபத்தில் அதன் இயக்குநர் வண பிதா அன்ரன் அடிகளார் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கலந்துகொண்டார்.

கௌரவ விருந்தினராக மன்னார் மடு வலய பாலர் பாடசாலை உதவி கல்வி திணைக்கள அதிகாரி, மன் னார் மறைமாவட்ட குருமுதல்வர் வண பிதா அ.விக்டர். சோசை அடிகளாரும், வாழ்வுதய இயக்குநர் வண பிதா அன்ரன் அடிகளாரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்வில் பாலர் பாடசாலை தொண்டர் ஆசிரியர்களின் கோலாட்டம், நாடகம், நாட்டுக்கூத்து போன்ற பல்வேறு பட்ட கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ஐ-222)

# தீர்மானங்கள் எடுத்தும் திட்டங்கள் பல கிடப்பில்

யாழ்ப்பாணம்,டிசெ.12

வடக்கு மாகாண சபை இருந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட பல திட்டங்கள் தீர்மானத்துடன், கிடப்பில் போடப்பட்டுள்ளன. அதில் ஒரு திட்டம் வடக்கில் உள்ளூராட்சிச் சபை நிர்வாகத்துக்குட்பட்ட கேணிகளின் மறுசீரமைப்பு எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




வடக்கு மாகாணத்தில் 34 உள்ளூராட்சிச் சபைக்கு உட்பட்ட ஆயிரத்து 256 கேணிகள் மீள் சீரமைப்பு இன்றி அழிவடைந்து வருகின்றமை தொடர்பில் பொது அமைப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டது. அதனால் வடக்கு மாகாண சபையிலும் ஆராயப்பட்டது. பின்னர் தீர்மானமான நிலையில், அடுத்த கட்ட நகர்வு முன்னெடுக்கப்படவில்லை. அதனால் கேணிகளில் கழிவுநீர் தேங்கியுள்ளது.


தற்போது வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களிலும் சபைகள் உள்ளன. ஆனால் சபையில் உள்ள உறுப்பினர்கள் இது தொடர்பில் எவ்வித முன்னெடுப்புக்களும் எடுத்துரைப்பதாக இல்லை. வீதி, வீதி விளக்குத் தொடர்பாகவே தொடர்ந்து பேசி வருகின்றமையைக் காணமுடிகின்றது.

அதேவேளை வடக்கில் ஒரு சில மயானங்களுக்கு மயான சேமக் காலை அபிவிருத்தி சபைகள் உண்டு. ஏனைய மயானங்கள் கவனிப்பாரற்று உள்ளன. இறுதி வணக்கம் செலுத்தும் மயானங்கள் சுற்றுவேலியின்றி, பொது மண்டபம், கிணறுகள் இன்றி புதர்ப்பற்றைகளுக்குள் காணப்படுகின்றன. இவ்வாறு பல திட்டங்கள் கிடப்பில் உள்ளன.

எனவே அழிவடைந்து வரும் கேணிகளை, மயானங்களை பாதுகாக்க நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க-50)

## காற்றாலை அமைக்க
# இராட்சத உருளைகள்





கொடிகாமம்,டிசெ.12

காற்றாலை அமைப்பதற்கான அடித்தளக் கோபுரங்களுக்கான இராட்சத உருளைகள் மக்கள் குடியிருப்புப் பகுதிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

தனங்களப்பு மறவன்புலோ பகுதிகளில் காற்றாலை பொருத்தப்படவுள்ளது. கடந்த மூன்று வருட காலமாக மக்கள் தமக்கு இதனால் பெரும் பாதிப்புகள் ஏற்படும் என்று எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

ஜனாதிபதி செயலகம் மற்றும் மாவட்டச் செயலகம், பிரதேசசெயலகம், பிரதேசசபை இறுதியாக ஆளுநர்செயலகம் வரை தமது பிரச்சினைகளை முன்வைத்தனர். மக்களுக்குச் சரியான தீர்வு பெற்றுத் தருவதாக கூறியும், இதுவரைக்கும் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் காற்றாலை மின் உற்பத்தி அமைப்பதற்கான கோபுரங்கள் நேற்று முன்தினம் அங்கு இறக்கப்பட்டுள்ளன. தமது எதிர்ப்பையும் மீறி காற்றாலை அமைப்பதற்கான இராட்சத உருளைகள் கொண்டுவரப்பட்டுள்ளதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் விசனத்தில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-159)

## ஆலய மணி கையளிப்பு

நவாலி,டிசெ.12

மறைந்த சமூக ஆர்வலர் சதாசிவம் வீரவாகு ஞாபகார்த்தமாக சங்கரத்தை வைரவர் ஆலயத்துக்கு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆலய மணி ஒன்று வழங்கப்பட்டுள்ளது. (ஐ-50)

## விநாயகர் கதை இன்று ஆரம்பம்

சாவகச்சேரி,டிசெ.12

விநாயகர் கதை விரதத்தை முன்னிட்டு சாவகச்சேரி சரசாலை நுணுவில் சிதம்பரவிநாயகர் கோவிலில் இன்று சிறப்பு வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

காலை 9.30.மணிக்கு ஆரம்பமாகி ஸ்நபன அபிசேகமும் இலட்சார்ச்சனையும் இடம்பெறும். கோவில் பரம்பரை அர்ச்சகர் இ.கிருஷ்ணராமக் குருக்கள் தலைமையில் கிரியைகள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-9)

## உணவகக் கழிவால் 9 குடும்பங்கள் அவதி

யாழ்ப்பாணம்,டிசெ.12

கோண்டாவில் உள்ள பிரபல உணவகத்தின் கழிவுநீர் ஊடாகடெங்குத்தொற்று ஏற்பட்டு, அந்தச் சூழலில் வாழும் 9 குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே/119 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட கோண்டாவில் பஸ் டிப்போவுக்குச் சமீபமாக இயங்கும் பிரபல உணவகத்தின் கழிவுகள் அருகில் உள்ள வளவினுள் சுத்திகரிப்பு பொறிமுறையற்று, சுகாதாரத்துக்குப் பங்கமேற்படுத்தும் விதத்தில் அகற்றப்படுகின்றன.

இதனால் உணவகத்தின் பின்னால் உள்ள 9 குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர், முதியோர் உட்பட 46 பேருக்கு மேற்பட்டோர் நேரடியாக டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளமையுடன் ஏனைய தொற்று நோய்களுக்கு உட்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது என்று சுகாதாரப்பகுதி எச்சரித்துள்ளது.

இதேவேளை பொறிமுறையற்று சுத்திகரிப்பு முறையில் உணவகத்தின் பின்னால் திறந்த வெளியில் வெளியிடப்படும் கழிவு நீரால் தொடர்ச்சியாக துர்நாற்றம் வீசுகின்றது. பொறிமுறையற்ற கழிவுநீர் என்பதால் அந்தச் சூழலில் உள்ள நிலத்தடிநீர் மாசுபட்டதாக மாறியுள்ளது.

இது தொடர்பில் நல்லூர் பிரதேச செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்ற போதும் உரியவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (க-50)

## மேய்ச்சல் தரவைக்குள் வெள்ளம் அலைந்து திரியும் கால்நடைகள்

சாவகச்சேரி, டிசெ.12

வடக்கில் மேய்ச்சல் தரவைகளுக்குள் வெள்ளம் தேங்கியுள்ளதால், கால்நடைகள் உணவுக்காக வீதிகளில் அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டிருந்தது. இதனால் மக்கள் இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. தற்போது குடியிருப்புகளில் இருந்து வெள்ளம் வழிந்தோடி இயல்பு நிலை திரும்பியுள்ளது. ஆயினும் கால்நடைகளின் மேய்ச்சல் தரவைகளுள் இன்னமும் வெள்ளம் தேங்கி நிற்கிறது. இதனால் உணவு தேடி கால்நடைகள் வீதிகளில் அலைந்து திரிகின்றமையால் விபத்துக்கள் ஏற்படும் நிலை தோன்றியுள்ளது.

முல்லைத்தீவு, நெடுங்கேணி மற்றும் கனகராயன்குளம் ஆகிய பகுதிகளிலேயே இந்த நிலை அதிகமாக காணப்படுகின்றது. (ஐ-131)

## சாரதிகள் இருவர் கைது

கிளிநொச்சி, டிசெ. 12

அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் இரு உழவு இயந்திரங்களோடு அதன் சாரதிகள் கைது செய்யப்பட்டனர்.

இந்தச் சம்பவம் பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பளைப்பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். இருவருக்கும் பொலிஸ் பிணை வழங்கப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளதாக பளை பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ-9)

## நிர்வாகம் தெரிவு

வடமராட்சி,டிசெ.12

புலோலி சாரையடி நண்பர்கள் சனசமூக நிலையத்தின் அடுத்த வருடத்துக்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வி. அருள்நேசன் தலைமையில் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்ற போதே புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது.

புதிய நிர்வாகத்தில் போஷகராக க. பாலஸ்ரீஸ்கந்தராசா, தலைவராக வே. சிவகுமாரன், உபதலைவராக இ. பார்த்தீபன், செயலாளராக க. ஏரம்பநாதன், உப செயலாளராக அ. கௌதமன், பொருளாளராக பெ. ஸ்ரீகிருஷ்ணா ஆகியோரும் 9 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (க-173)

## தங்க நகையை பெற்றுக்கொள்ளவும்

தென்மராட்சி,டிசெ.12

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு நகர் விற்பனை நிலையத்தில் நேற்றுமுன்தினம் தங்கநகை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தங்கநகையை தவறவிட்டவர் உரிய ஆதாரங்கள் காட்டி சங்க தலைமையகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு பொது முகாமையாளர் சி. தேவகுமாரன் அறிவித்துள்ளார். (ஐ-9)

## தேசிய போட்டியில் சாதித்த முல்லைத்தீவு இளைஞர்கள்

*38 லட்சம் ரூபா பரிசையும் வென்றனர்*



முல்லைத்தீவு, டிசெ.12
யுத் வித்டெலன்ட் எனும் தேசியப் போட்டியில், இயற்கை உரம் தயாரித்தல் வேலைத்திட்டம் மற்றும் அது தொடர்பான "சுழற்சி" எனும் ஆவணப்படம் ஆகியன 3 ஆம் இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளன.

போட்டியில் பங்கு கொண்ட முல்லைத்தீவு இளைஞர்களுக்கு 38 லட்சம் ரூபா பெறுமதியான பரிசும் கிடைக்கப்பெற்றுள்ளது.

தேசிய் இளைஞர் சேவைகள் மன்றத்தின் கீழ் யுத் வித்டெலன்ட் எனும் தேசிய மட்டப் போட்டி அண்மையில் நடத்தப்பட்டிருந்தது. அந்தப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த கள்ளப்பாடு தெற்கு கிராம அலுவலர் பிரிவின் உதயம் இளைஞர் கழகத்தினரும் பங்கு கொண்டிருந்தனர். இயற்கை உரம் தயாரித்தல் வேலைத்திட்டம், மற்றும் அது தொடர்பான "சுழற்சி" எனும் ஆவணப்படத்தை அவர்கள் போட்டிக்கு அனுப்பியிருந்தனர். அந்தப் போட்டியிலேயே அவர்கள் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர். அண்மையில், முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் அதற்கான மதிப்பளிப்பு நிகழ்வுகள் நடைபெற்றன. ஆவணப்படத்துக்காக 2 விருதுகளும் கிடைக்கப்பெற்றன.

முல்லைத்தீவு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வேண்டுகோளுக்கமைய அந்த இளையோருக்கு தமிழ் விருட்சம் அமைப்பினூடாக கந்தப்பிள்ளை திலீபன் 10 ஆயிரம் ரூபா நிதியையும் அன்பளிப்புச் செய்தார். (ஐ-222)

# நாற்றமெடுக்கும் பிரதான வீதி

வவுனியா, டிசெ.12
வவுனியா நகரசபைக்குட்பட்ட பூந்தோட்டம் பொது மயானத்துக்கு முன்பான பிரதான வீதியின் (கல்வியியற்கல்லூரி வீதி) கரையில் கழிவுகள் கொட்டப்படுகின்றமையால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது.

மலக்கழிவுகள், உணவுக்கழிவுகள், தகரங்கள், வெற்று மதுப்போத்தல்கள் போன்றவை வீதியின் கரைகளில் அதிகளவில் கொட்டப்பட்டு வருகின்றன. அவற்றை நாய்களும், கால்நடைகளும் இழுத்து நடுவீதியில் விட்டுச் செல்கின்றன.

இந்த வீதி வவுனியா நகரிலிருந்து தேசிய கல்வியியற் கல்லூரி மற்றும் அதனை அண்டிய பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பயன்படுத்தும் பிரதான வீதியாகக் காணப்படுகிறது.



கழிவுகளால் நிரம்பிய வீதியால் பயணிப்பவர்கள் பல்வேறு அசௌகரியங்களைச் சந்தித்து வருகின்றனர். இதேவேளை நகரசபையின் கழிவகற்றும் இயந்திரங்கள் வாரத்துக்கு ஒருமுறை மட்டுமே சென்று அந்தக் கழிவுகளை அகற்றி வருகின்றன. எனவே உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

"கழிவுகளை அகற்றி அவ்விடத்தில் ஓர் அறிவித்தல் பலகை ஒன்றை வைப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. பொதுமக்களும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்" என்று நகரசபை உபநகரபிதா சு.குமாரசாமி தெரிவித்தார். (க-110)

## நவீன முறையில் மருத்துவ முகாம்

முல்லைத்தீவு, டிசெ.12
மருத்துவ கலாநிதி ரகுபதி ஞாபகார்த்த மருத்துவ முகாம் முல்லைத்தீவு குமுழமுனை பிரதேச மருத்துவமனையில் நேற்று இடம்பெற்றது. மருத்துவ கலாநிதி சிவமோகன் தலைமையில் இடம்பெற்ற மருத்துவ முகாமில், நவீனமயப்படுத்தப்பட்ட சிகிச்சை முறையில் கண், காது மற்றும் பொது மருத்துவப் பரிசோதனைகளும் இடம்பெற்றன. வன்னிக்குரோஸ் நிறுவனம் மருத்துவ முகாமை ஏற்பாடு செய்திருந்தது. (க-213)



## உயர்நிலை நகரமாக மாறவுள்ள கிளிநொச்சி

*கரைச்சி பிரதேச சபை தீர்மானம்*
*உலக வங்கி ரூ.130 கோடி வழங்குகிறது*



கிளிநொச்சி, டிசெ. 12
கிளிநொச்சி நகரத்தை நிலைபேறான இரண்டாம்தர உயர்நிலை நகரமாக அபிவிருத்தி செய்ய, கரைச்சிப் பிரதேச சபை சமர்ப்பித்த முன்மொழிவு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி உலக வங்கியின் நிதியுதவியுடன் சுமார் 130 கோடி ரூபாவில் உட்கட்டு மானப்பணிகள் அமைக்கப்படவுள்ளன என்று கரைச்சிப் பிரதேச சபைத் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.

இதை நேரடியாகக் கள ஆய்வு மேற்கொள்வதற்கு குறித்த திட்டத்தின் பணிப்பாளர் காமினி விஜயவர்த்தன தலைமையிலான குழுவினர் கரைச்சி பிரதேச சபையின் தவிசாளருடன் நேற்றுமுன்தினம் கலந்துரையாடினர் என்றும் அவர் தெரிவித்தார்.

20 கோடி ரூபா செலவில் நகர மண்டபமும், பொதுச் சந்தையில் 28 கோடி ரூபா செலவில் வர்த்தகக் கட்டதொகுதியும், கரடிப்போக்குச் சந்தியில் 6 கோடி ரூபா செலவில் கடைத்தொகுதியும் அச்சகமும், 28கோடி ரூபா செலவில் பசுமைப்பூங்காவில் சிறுவர்களுக்கான நீச்சல் தடாகமும், 35 கோடி ரூபா செலவில் நகர வீதிகளும், 9 கோடி ரூபா செலவில் வடிகாலமைப்புக்களும், 10 கோடி ரூபா செலவில் கழிவுமுகாமைத்துவ பொறிமுறைகளும், வாகனங்களும், 10 கோடி ரூபா செலவில் பொது நூலகமும், ஆனையிறவில் சகல வசதிகளுடன் கூடிய பொது மலசலகூடமும் அமையவுள்ளன.

3 ஆண்டுகளில் இந்தத் திட்டங்கள் செயற்படுத்தப்படும் என்று கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார். (து-222)

## ஹெரோயினுடன் சிக்கினார் இளைஞர்

யாழ்ப்பாணம், டிசெ.12
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 3 கிராம் ஹெரோயின் பைக்கற்றுக்களை வைத்திருந்த குற்றச்சாட்டில், 22 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிறப்புக் குற்றத்தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, இளைஞன் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

இளைஞன் அச்சுவேலிப் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ளார். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-26)

## ஊர்வலத்துடன் கலாசார விழா





கிளிநொச்சி, டிசெ.12
பச்சிலைப்பள்ளி பிரதேச கலாசார விழா நேற்று சிறப்புற இடம்பெற்றது.

பளை இரட்டைக்குணி கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்து கலாசார விழுமியங்களை உள்ளடக்கிய ஊர்திகளின் பவனியுடன், விருந்தினர்கள் விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு நாவலர் அரங்கில் நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச கீதம் வெளியிடப்பட்டது. தொடர்ந்து வில்லிசை உள்ளிட்ட கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர். பசுந்துளிர் நூலின் 7 ஆவது பாகம் வெளியிடப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பரமோதயம் ஜெயராணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கிளிநொச்சி மாவட்ட மேலதிக செயலர், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர், பிரதேச கலைஞர்கள் கலந்து கொண்டனர். (க-6)

# மாவட்ட பொலிஸ்மா அதிபர் நகுலேஸ்வரத்தில் வழிபாடு





புதிதாகக் கடமையேற்றுள்ள யாழ்ப்பாணம் மாவட்டப் பொலிஸ் மா அதிபர் மகேஸ் சேனாரத்ன, நேற்று கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்துக்குச் சென்று சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டார். (க-26)

# மரக்கன்று கையளிப்பு



வடமராட்சி,டிசெ.12

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயல உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கத்தால் 250 குடும்பங்களுக்கு பழமரக் கன்றுகள் கடந்த வாரம் வழங்கப்பட்டன.

மருதங்கேணி பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 16 கிராமங்களைச் சேர்ந்த 250 குடும்பங்களுக்கே வடமராட்சிக் கிழக்கு சுவிஸ் ஒன்றியத்தின் அனுசரணையில் இந்த பழமரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ஐ-70)



# பரிசளிப்பு நிகழ்வு

மானிப்பாய்,டிசெ.12

மானிப்பாய் ஆனந்தன் வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஆனந்தா இந்து இளைஞர் சங்கத்தால் நடத்தப்பட்ட சைவசமய போட்டிப் பரீட்சைக்கான பரிசளிப்புவிழா அண்மையில் இடம் பெற்றது.

மானிப்பாய் பாரதி சனசமூக நிலைய முன்றில் இளைஞர் சங்க தலைவர் சுந்தரலிங்கம் கோபிநாத் தலைமையில் விழா நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அந்தோனிபிள்ளை ஜெபநேசன் கலந்துகொண்டார்.

மாணவர்களின் கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றமையுடன் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (ஐ)

# பொதுக் கூட்டம்

கொடிகாமம்,டிசெ.12

இலங்கை ஐக்கிய நாடுகள் நட்புறவு அமையத்தின் நிலைபேண் அபிவிருத்தி இலக்குகளுக்கான சாவகச்சேரி பிரதேச இளைஞர் சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் இடம்பெற்றது.

சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந்துள்ள பழனி ஆண்டவர் பொது நோக்கு மண்டபத்தில் இளைஞர் சபைத் தலைவர் நக்கீரன் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் வெள்ளம் காரணமாக கழிவு நீர் உட்புகுந்த பொது கிணறுகளை சுத்திகரித்து வழங்கல், மனித உரிமை தினத்தை ஒட்டி மனித உரிமை தொடர்பான விழிப்புணர்வுகளை மேற்கொள்ளல், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு மற்றும் கொடி அணிதல், டெங்கு ஒழிப்பு நடவடிக்கை, பொலித்தின் பாவனையை கட்டுப்படுத்தும் செயற்திட்டங்களை முன்னெடுத்தல், போன்ற பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்துக்கு அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்கள், உறுப்பினர்கள், இளைஞர்சபை ஆலோசகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-159)



# ஐயப்பன் குருசாமி வீட்டுப்பூசை

வவுனியா,டிசெ.12

ஐயப்பன் குருசாமி வீட்டுப்பூசை நெடுங்கேனி மாராயிலுப்பை ஆலய பிரதம குரு ஜேசுத குருக்கள் வீட்டில் அண்மையில் இடம்பெற்றது.

ஐயப்பன் 41 நாள் விரதமிருக்கும் குருசாமிகளுக்கு உணவு வழங்கி, ஆசீர்வதிக்கும் நோக்கோடு இவ் வீட்டுப்பூசை இடம்பெற்றது.

ஐயப்பன் குருசாமி தம்பிராசா காசிநாதன் தலைமை ஐயப்பன், கறுப்பன் சாமி பூசைகள் இடம்பெற்று, குருசாமிகளுக்கு ஆசீரும் வழங்கப்பட்டது.

இந்தப் பூசையில் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும் சுமார் 250க்கும் மேற்பட்ட ஐயப்பன் குருசாமிகள் கலந்துகொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)







# கைதடியில் இடம்பெற்ற கல்வி மேம்பாட்டு விழா

யாழ்ப்பாணம்,டிசெ.12

கல்வி மேம்பாட்டு விழா யாழ்ப்பாணம், கைதடிப் பகுதியில் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டார்.

கைதடி மக்கள் நலன்பேணும் நட்புறவுக் கழகத்தின் தலைவர் க.சிறிதரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது. விழாவுக்கு முன்னதாக நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பணப்பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

முன்பள்ளி ஆசிரியர்கள் எட்டுப்பேருக்கு துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன.

அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

நிகழ்வில் உரையாற்றிய முதன்மை விருந்தினர் தெரிவித்ததாவது;

மாணவர்களின் கல்விக்காக ஓர் அமைப்பை உருவாக்கி பெருந்தொகை நிதியை அதற்காகச் செலவு செய்து ஒரு கட்டமைப்பு கொண்ட அமைப்பாக செயற்படும் கைதடி மக்கள் நலன் பேணும் நட்புறவுக் கழகம் மேலும் வளர உளமார வாழ்த்துகின்றேன். இன்று எமது பிரதேசங்களைப் பொறுத்தவரை இப்படியான நல்ல செயற்பாடுகளை முன்னெடுத்து நடத்த எவரும் முன் வருவதில்லை. ஒரு சில அமைப்புக்களே இந்தப் பணிகளைச் செய்து வருகின்றன. இத்தகைய செயலுக்கு புலம்பெயர் வாழ் உறவுகளின் உதவியே முதற்காரணமாகும். அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றிகளைக் கூற எல்லோரும் முன்வர வேண்டும் -என்றார். (ஐ-288)



# சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்



யாழ்ப்பாணம், டிசெ.12

யாழ்ப்பாணம், சுண்டுக்குழி மருதடி ஜே/77 கிராம அலுவலகர் பிரிவிலுள்ள முதியோர் சங்கத்தின் சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள் மருதடி கிராம அலுவலர் அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்றன.

சங்கத் தலைவர் க.கணபதி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பிரதேச செயலர் சாம்பசிவம் சுதர்சன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவை அலுவலகர் வ.சுரேஷ்குமார், சமூக சேவை அபிவிருத்தி அலுவலகர் திருமதி பா.சிவதர்சினி, முதியோர் அபிவிருத்தி உத்தியோகத்தர்அலுவலகர் மரிற்றா யூட் ஜெயக்குமார், பிரதேச மட்ட முதியோர் சங்கத் தலைவர் வி.சக்திவேல், ஓய்வுபெற்ற வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ரி. தர்மராஜா ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)

### வீதிச் சீரமைப்பு

# சரா எம்.பியால் ஆரம்பித்துவைப்பு



கொடிகாமம், டிசெ. 12

தாவளை இயற்றாலை கல்வளைப் பிள்ளையார் கோவில் வீதியைச் சீரமைக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அடிக்கல் நட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனின் ஏற்பாட்டில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 250 அடி நீளமான 9 அடி அகலமான வீதி 20 லட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இயற்றாலை விநாயகர் சனசமூக நிலையத் தலைவர் க.ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், உதயன் குழும நிர்வாக இயக்குநர் திருமதி யசோதை சரவணபவன், சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப், வட்டார உறுப்பினர் சி.இரத்தினசிங்கம் சாவகச்சேரிப் பிரதேச சபை உறுப்பினர்களான சி.பிரபாகரன், சு.கேதீஸ்வரன், தாவளை இயற்றாலை இளைஞர் அணித்தலைவர் இ.விஜிதரன், விளையாட்டுக் கழகத் தலைவர் வி.தர்சன், ஆசிரியர் செந்தூரன், கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியத் தலைவர் இ.கந்தசாமி, கிராம மக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (த-159)

# தண்ணீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் திறப்பு



வவுனியா,டிசெ.12

வவுனியா ஆசிகுளம், ஈஸ்வரிபுரம் ஆகிய பகுதிகளில் குடிதண்ணீர் சுத்திகரிக்கும் நிலையங்கள் அண்மையில் திறந்துவைக்கப்பட்டன.

இலங்கை றொட்டறிக் கழகம் மற்றும் லாம் லங்கா நிறுவனத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ஜே.பிரதீபன் தலைமையில் ஒரு கோடியே எழுபது லட்சம் ரூபா நிதி உதவியில் இந்தச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட வவுனியா மாவட்டச் செயலர் ஜ.எம். ஹனீபா சுத்திகரிப்பு நிலையங்களை மக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்து வைத்தார்.

மேலும் நிகழ்வில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி வில்வரட்ணம், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி பிறைசூடி, ஆசிகுளம் கிராம அலுவலர் ஜெனகன், சமுர்த்தி அலுவலகர், நிறுவனத் தலைவர்கள், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-222)

# கட்டடத் திறப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.12

யாழ்ப்பாணம் சென்.ஜேம்ஸ் தேவாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்டது.

அருட்பணி சாள்ஸ் ஜஸ்ரின் அடிகளார் சேவைக்காலத்தில் அமைக்கப்பட்ட இந்தக் கட்டடத்தின் நினைவுக்கல்லை யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் பேரருட் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் திரை நீக்கம் செய்து திறந்து வைத்தார்.

நிகழ்வில் யாழ்ப்பாண மாநகர முதல்வர் இம்மானுவல் ஆனல்ட், யாழ்ப்பாண மாநகர சபை பிரதி முதல்வர், மாநகர சபை உறுப்பினர்கள், அருட்சகோதரர்கள், மதத்தலைவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ)





# தையல் பயிற்சி நிறைவு நிகழ்வு

வடமராட்சி,டிசெ.12

அகரம் உதவும் கரங்கள் நலன்புரிச்சங்கத்தால் நடத்தப்பட்ட தையல்பயிற்சியின் நிறைவு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வு வடமராட்சி குடத்தனையிலுள்ள அகரம் வளாகத்தில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் கி.மனோரஞ்சன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக செயலர் க.கனகேஸ்வரன், வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் கு.பிரபாகரமூர்த்தி, பிரதேசசபை உறுப்பினர் சி. தியாகலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

தையல் பயிற்சியை நிறைவு செய்த பெண்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தையல் பயிற்சியை நிறைவு செய்தவர்களின் கண்காட்சியும் இடம்பெற்றது. கண்காட்சியின் ஒரு பகுதியாக தையல் உற்பத்திகளின் விற்பனையும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து, வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலராகப் புதிதாகப் பதவியேற்ற குமாரசாமி பிரபாகரமூர்த்தி மதிப்பளிக்கப்பட்டார்.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக செயலராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்ற கனகேஸ்வரனும் மதிப்பளிக்கப்பட்டார்.

தொடர்ந்து நிகழ்வில் வறுமையில் வாடும் ஐந்து குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. (ஐ-222)








# குட்டி சுட்டிகளின் கலைவிழா

கோண்டாவில்,டிசெ.12

கோண்டாவில் குட்டி சுட்டி முன்பள்ளியின் கலைவிழா நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கோண்டாவில் இராஜேஸ்வரி மண்டபத்தில் து. சுதன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் ஜெயா தம்பையா, கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மருத்துவர் ச.கணேஸ்குமார், இளைப்பாறிய அதிபர் சண். வாமதேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்பள்ளியில் கல்விகற்கும் 105 சிறார்களும்; 6 முன்பள்ளி ஆசிரியர்களும் மதிப்பளிக்கப்பட்டனர்.

தமிழ்ப் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் கலை நிகழ்வுகள் பல முன்பள்ளிச் சிறார்களால் ஆற்றுகை செய்யப்பட்டன.

கோண்டாவில் அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையத்தினதும், குமரன் விளையாட்டுக் கழகத்தினதும் ஆதரவில் இந்த முன்பள்ளி இயங்கி வருகிறது. (ஐ-7)



# மாற்றாற்றலுடையோருக்கான விளையாட்டுப்போட்டி



யாழ்ப்பாணம், டிசெ. 12

மாவட்டமட்ட மாற்றாற்றலுடையோர் தினவிழாவின் போது நடத்தப்பட்ட மாற்றாற்றல் உடையோர் விளையாட்டுப் போட்டியில் 6 பேர் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தால் கடந்த திங்கட்கிழமை நவீல்ட் பாடசாலையில் இந்தப் போட்டிகள் இடம்பெற்றன.

பலூன் உடைத்தல், வேகநடை, நூறு மீற்றர் ஓட்டம், போத்தலில் நீர் நிரப்புதல் போன்ற விளையாட்டுக்கள் இதன்போது இடம்பெற்றன.

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட போட்டியாளர்களில் வேக நடைப் போட்டியில் டொனால்ட் கமில்டன் மற்றும் செல்வி ஜேசுதாசன் ஜெனிற்றாவும், நூறு மீற்றர் ஓட்டப் போட்டியில் எலியாஸ் மரியதாஸ், நீர் நிரப்புதல் போட்டியில் திருமதி காசிமுத்து புவனேசம்மா மற்றும் செல்வி மகேந்திரன் தர்சிகாவும், பலூன் ஊதி உடைத்தல் போட்டியில் செல்வி ரஜனிகாந் கலாநிதியும் வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். (ஐ-222)

# இணையத் தாக்குதல்களை எதிர்கொள்வதும் அவசியம்

## பேராசிரியர் றொகான் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ.12

எதிர்காலத்தில் இணையத் தாக்குதல்களைக் கையாளும் வகையில் இலங்கையின் புலனாய்வு அமைப்புக்களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு சிங்கப்பூரின் நயாங் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தின் பாதுகாப்புக் கற்கைகள் பேராசிரியர் றொகான் குணரத்ன தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக நேற்றுமுன்தினம் சாட்சியம் வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

உலகெங்கும் உள்ள அரசுகள் இணையத் தாக்குதல் அச்சுறுத்தலை அங்கீகரித்து அவற்றைச் சமாளிப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தியுள்ளன. ஆனால் இலங்கையின் தயார்நிலை போதுமானதாக இல்லை. இலங்கைப் புலனாய்வு அமைப்புக்களும் தொடர்புடைய நிறுவனங்களும் இணையத்தாக்குதல்களைச் சமாளிக்கத் தயாராக இருக்க வேண்டும்.

புலனாய்வு அமைப்புக்களுக்கு இணையத் தளங்களிலும், சமூக ஊடகங்களிலும் தரவு சேகரிப்பதில் பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டும். இலங்கையின் புலனாய்வு அமைப்புக்கள் நவீனமயமாக்கப்பட வேண்டும். -என்றார். (எ)

# பாதுகாப்பு அமைச்சிடம் 31 திணைக்களங்கள்

கொழும்பு, டிசெ.12

குடிவரவு - குடியகல்வு திணைக்களம், ஆள்பதிவுத் திணைக்களம், தேசிய ஊடக மத்திய நிலையம் என்பன பாதுகாப்பு அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவால் வெளியிடப்பட்டுள்ள அமைச்சர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற அமைப்புகளுக்கான செயலகம், இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு, தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மைகள் மற்றும் துணை நிறுவனங்களும், இலங்கை கணினி அவசர பதில் நடவடிக்கைக்கான ஒன்றியம் உட்பட 31 திணைக்களங்களும், நிறுவனங்களும், அரச கூட்டுத்தாபனங்களும் பாதுகாப்பு அமைச்சின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம், ஆட்பதிவுத் திணைக்களம் என்பன கடந்த ஆட்சியில் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின்கீழ் இருந்தன.

அதேவேளை, பாதுகாப்பு அமைச்சராக இதுவரையில் எவரும் நியமிக்கப்படாத நிலையில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக சமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார். (எ)

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-20 காரைதீவு வீதியில் ஆதன இலக்கம் 480/40 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக்கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகிறது.

இவ்வாதனம் தொடர்பில் யாழ்ப்பாணம் நாவாந்துறை வடக்கைச்சேர்ந்த அல்பேட் செறின்ரன் 1ம் பகுதியாகவும் அதே முகவரியைச் சேர்ந்த அல்பேட் யூட் 2ம் பகுதியாகவும் சேர்ந்து சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமாகிய முடியப்பு றெமிடியஸ் அவர்களின் முகதாவில் 24.03.2016ம் திகதியிடப்பட்ட 1286ம் இலக்க பிரிவிடல் உறுதி ஒன்றினை நிறைவேற்றியுள்ளார்.

குறித்த 1286ம் இலக்க பிரிவிடல் உறுதியின் ஆதன அட்டவணையில் விஸ்தரிக்கப்பட்டிருக்கும் ஆதனமானது 1972ம் ஆண்டு காலப்பகுதியில் காலஞ்சென்ற தமது பெற்றோராகிய சூசை அல்பேட் பெண் எட்லீனம்மா என்பவர்களால் சின்னன் இராமு கைம்பெண் பூமணி என்பவரிடம் இருந்து கொள்வனவு செய்ததன் பொருட்டு நிறைவேற்றப்பட்ட தற்போது தமது கைவசமற்றிருக்கும் உறுதி மூலம் தமது பெற்றோரின் சொந்தமும் ஆட்சியுமாக தமது பெற்றோர் இறந்த பின் அவர்களது வாரிசுக்களாகிய தமது சொந்தமும் ஆட்சியுமானது என குறித்த 1286ம் இலக்க உறுதியில் உரித்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆதன அட்டவணை வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை சூரியவொளி நெற்பரப்பு (4) நான்கு இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.சந்தியப்பிள்ளை அவர்களால் 1978/02/27ந் திகதி 097ம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தில் துண்டுகள் 5,6 எனக்காட்டப்பட்டுள்ளது. இது மீண்டும் உத்தரவு பெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களால் 2016.03.02ம் திகதி 3082ம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தில் துண்டு 1,2,3 எனப்பிரிக்கப்பட்டுள்ளது. இதன்படி நெற்பரப்பு (3) மூன்று குளி (06.55) சைபர் ஆறு தசம் ஐந்து ஐந்து இதில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள நெற்பரப்பு 1 (ஒன்று) குளி 07.39 இதற்கு எல்லை .

கிழக்கு:-சாமிநாதன் குணசீலனின் ஆதனம்

வடக்கு:- ஒழுங்கை

மேற்கு:- குறித்த 3082ம் இலக்கப்படத்தில் துண்டு 3 எனக்காட்டப்பட்ட பாதை.

தெற்கு:- குறித்த 3082ம் இலக்கப்படத்தில் துண்டு இரண்டு எனக்காட்டப்பட்ட ஆதனம் தற்போது அல்பேட் செறின்ரனின் ஆதனம். இதடங்கலும் குறித்த 3082ம் இலக்கப்படத்தில் துண்டு 3 எனக்காட்டப்பட்ட பாதையை பாவிக்கும் உரித்தும் மேலே சொல்லப்பட்ட அல்பேட் யூட்டுக்கு பிரித்து நிந்தமாக விடப்படும் ஆதனம்.

தற்போது அல்பேட் யூட் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது அல்பேட் யூட் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**(இம்மனுவல் ஆனோல்ட்)**
**முதல்வர்**
**மாநகரசபை**

(IN 11929)(14.17)

## மரண அறிவித்தல்



### திருமதி சரஸ்வதி பொன்னம்பலம்

யாழ்ப்பாணம் நாவலர் வீதி, மடத்தார் பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி பொன்னம்பலம் நேற்றுமுன்தினம் (10.12.2019) செவ்வாய்க்கிழமை இரவு சாயிநாதர் பாதம் சென்றடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - கருணாகடாக்ஷி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - விசாலாட்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும், சுரேந்திரன், ஜெயலட்சுமி, கிருஷாந்தி ஆகியோரின் அன்புத் தாயும், சசிமீரா, சுசீந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும், சாயீசா, ஆர்த்திகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், காலஞ்சென்ற நாகேஸ்வரி மற்றும் தர்மேஸ்வரி, ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2019) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**314, ஈழத்து சீரடி சாயி மந்திர்,**
**நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.**

**தகவல்:**
**பா. ராகவன் (பெறாமகன்)**

**077 4815336, 077 722 2568**

(cs.29258) (13.17)

## மரண அறிவித்தல்

தோற்றம்
29 - 07 - 1929



மறைவு
11 - 12 - 2019

### திருமதி திருநேசமலர் வேலாயுதபிள்ளை

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் திருகோணமலை. இல.253. பலாலி வீதி கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருநேசமலர் வேலாயுதபிள்ளை நேற்று (11.12.2019) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதபிள்ளை இன் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - தங்கமுத்து தம்பதிகளின் ஏகபுத்திரியும் காலஞ்சென்றவர்களான கந்தையா (கும்பா கந்தையா) சின்னத்தங்கம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் பாசமிகு சகோதரியும் சறோஜினிதேவி (கனடா). திலகவதி. யசோதகுமார் (ஓய்வு நிலை தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தாயும் குலராஜசிங்கம் (கனடா). ஆனந்தகுமார். மிதிலாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் குந்தவி - சுரேஷ். அனந்தவி - ஞானேந்திரன். பாமதி - சதீஷ். ஆதவன் - பிரபாகினி. செந்தூரன். முகுந்தன் - ரிஷாந்தினி. மோகனகாந் - கலாமயி. சுதர்சனன் -துஷ்யந்தினி . கௌதமன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆத்மிகா. அஷ்வின். எழினா. ஈஷன். ஆதித்தியன். அகரன். ஹரிமேருஜன். தேஜாஸ்வின். அஷ்வினி. வர்ஷன். சஞ்சித். ஹவீஷ் ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.12.2019) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் கந்தர்மடத்தில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வேம்பன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 253, பலாலி வீதி,**
**கந்தர்மடம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS 29859)(14.17)

**077 843 1009/ 076 315 2946/ 077 4949713**

# பணியாளர் கடத்தல் திட்டமிட்ட நாடகமே

## மஹிந்த அமரவீர கூறுகிறார்

கொழும்பு, டிசெ.12

இலங்கையில் உள்ள சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி கடத்தப்பட்டார் என்று கூறப்படும் சம்பவம் முற்று முழுதாகத் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்ட நாடகம். அதற்கான ஆதாரங்கள் அரசுக்குக் கிடைத்துள்ளன. இவ்வாறு அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆளும் கட்சிக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இரவு அலரி மாளிகையில் நடைபெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோது மஹிந்த அமரவீர மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சுவிஸ் தூதரகம் ஏன் இதைச் செய்தது இந்த நாடகத்தின் பின்னணியில் உள்ள சூழ்ச்சிக்காரர்கள் யார் என்பதை கண்டறிய வேண்டியுள்ளது. சுவிஸ் தூதரகப் பெண் அதிகாரி கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் பல உண்மைகள் கண்டறியப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் முற்று முழுதாக திட்டமிடப்பட்டு நகர்த்தப்பட்ட நாடகமாகும். இது ஒரு நாடகம் என்பதற்கான சாட்சியங்கள் எமக்குத் கிடைத்துள்ளன. இந்தச் சூழ்ச்சியின் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பதை மட்டுமே இப்போது நாம் கண்டறிய வேண்டியுள்ளது.

சுவிஸ் தூதரகம் இதைச் செய்ய காரணம் என்ன?. இதன் பின்னணியில் யார் இவ்வாறு செயற்பட்டது. அவர்களின் உண்மையான நோக்கம் என்ன என்பதை கண்டறிய வேண்டும் என்பதை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் வலியுறுத்தியுள்ளார்.

அரசைப் பலவீனப்படுத்த செய்யப்பட்ட ஒரு விடயமே இது. அதற்கான சாட்சிகள் உள்ளன. குற்றப் புலனாய்வு பிரிவினர் இப்போதும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அவர்களுக்கு இடமளித்து நாம் வேறு எவரும் தலையிடாது பார்த்துக்கொண்டுள்ளோம். விரைவில் உண்மைகள் வெளிவரும். என்றார். (எ)

### அரசியல் கைதிகளை விடுவிக்க

# ஆணைக்குழு அமைப்பது கண்துடைப்பு நாடகமே

## கைதிகளை விடுதலை செய்யும் அமைப்பு தெரிவிக்கிறது




அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் ஆராய்வதற்கு ஆணைக்குழு அமைப்பது ஒரு கண் துடைப்புச் செயல். இது காலத்தை இழுத்தடிக்கின்ற செயலாகக் கருதுகின்றோம் என்று அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை சக்திவேல் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் கைதிகளை அரசியல் தீர்மானம் எடுத்து விடுதலை செய்ய வேண்டும் என்பது தான் எங்களின் கோரிக்கை.

ஆனால் அந்தக் கோரிக்கையை இதுவரைக்கும் தெற்கின் பெரும்பாலான சிங்கள சமூகம் ஏற்றுக்கொள்ளாத சூழ்நிலையே காணப்படுகின்றது. அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று ஞானசார தேரர் தற்போது கூறியுள்ளார். விடுதலை பற்றி ஆராய்வதற்கு ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்றும் கூறியுள்ளார். அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற சிந்தனை ஞானசார தேரருக்கு வந்தது வரவேற்கத்தக்க விடயம். அதனை ஆராய்வதற்கு ஆணைக் குழு நியமிக்கப்பட வேண்டும் என்றும் தேரர் தெரிவித்துள்ளார். இந்தச் சிந்தனை அனைத்து தெற்கு சமூகத்தினரிடமும் வரவேண்டும்.

இது தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினை, அரசியல் ரீதியாகவே நோக்க வேண்டும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கண் கொண்டு பார்க்கக் கூடாது.

எனினும், தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் நாங்கள் கூறுவது, ஆணைக்குழுகளை நியமிப்பது கண்துடைப்புச் செயல். கடந்த காலங்களில் எத்தனையோ ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை முன்வைத்த முன்மொழிவுகள் எந்த அரசிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுநிறைவேற்றப்படவில்லை. இதைக் காலத்தை இழுத்தடிக்கின்ற செயலாகவே கருதுகின்றோம். அரசியல் தீர்மானம் எடுத்து அனைத்து அரசியல் கைதிகளையும் ஜனாதிபதி விடுதலை செய்ய வேண்டும். பயங்கரவாதத்தடைச்சட்டத்தைவைத்துகொண்டு அரசியல் கைதிகளை விடுதலை செய்வது சாத்தியமற்ற செயல். - என்றார். (கு)

### கனடாவிலிருந்து வந்திருந்தவர் ‘பட்டா’ விபத்தில் உயிரிழந்தார்

கனடாவிலிருந்து வந்திருந்த குடும்பத் தலைவர், விபத்தில் காயமடைந்திருந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சின்னத்தம்பி சுந்தர லிங்கம் (வயது - 83) என்பவரே உயிரிழந்தார். கனடாவிலிருந்து மீசாலை வடக்கிலுள்ள தனது சகோதரனின் வீட்டுக்கு வந்திருந்த அவர், புத்தூர் சந்தியில் சைக்கிளில்சென்றுகொண்டிருந்தபோது ‘பட்டா’ ரக வாகனம் மோதி விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார்தெரிவித்திருந்தனர். மோட்டார்சைக்கிள்மோதியதில்அவர்காயமடைந்திருந்தார். சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணப் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும், சிகிச்சை பயனளிக்காதுஉயிரிழந்தார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அவருக்கு3பிள்ளைகள் உள்ளனர். திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேமகுமார் விசாரணை நடத்தினார். (கு-26)

### துரைரெட்ணத்தின் தாயாரின் மறைவுக்கு இரங்கல்

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உப தலைவரும் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான இரா.துரைரெட்ணத்தின் தாயாரின் சாவு பேரிழப்பு என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

அம்பாறை காரைதீவைப் பிறப்பிடமாகக்கொண்ட அழகம்மா இராசையாவின் மூத்த மகன் 1990 ஆம் ஆண்டு நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வேலைசெய்யும் போது வாகனத்தோடு கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் மிக நெருக்கடியான காலகட்டத்தில் அழகம்மாவும் அவருடைய குடும்பத்தினர் மற்றும் அந்தஊர் மக்கள் எமது கட்சிக்கும் எமது போராட்டங்களுக்கும் பேராதரவு தந்தனர். என்று தெரிவித்த ஆனந்தன் எம்.பி., ஆழ்ந்த இரங்கல் தெரிவித்தார். (கு-110)

### கொழும்புக்குள் பிரவேசிக்கும் வாகனங்களுக்கு கட்டணம் அறவீடு

கொழும்பு, டிசெ. 12

கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களுக்கு கட்டணங்களை அறவிடுவது தொடர்பில் அரசு கவனம் செலுத்தியுள்ளது. கொழும்புக்குள் பிரவேசிக்கும் அநாவசியமான வாகனங்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகப் பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது. வாகனங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரிப்பதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த முடியாத நிலமை காணப்படுகின்றது. அதிகளவிலான சூழல் பாதிப்பும் ஏற்படுகிறது என்று பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு சுட்டிக் காட்டி யுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களுக்கு கட்டணங்களை அறவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ.5)

### மனிதவள மேம்பாடு

# தரவரிசையில் இலங்கை முன்னேற்றம்

கொழும்பு, டிசெ. 12

ஐ.நா. மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டுத் தரவரிசையில், இலங்கை 71ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. ஐ.நா. மேம்பாட்டுத் திட்ட அமைப்பு ஆண்டுதோறும் நாடுகளில் ஆய்வு செய்து மனித வள மேம்பாட்டு தரவரிசை அட்டவணையை வெளியிடுகிறது. ஒரு நாட்டில் வாழும் மக்களின் வாழ்நாள், ஆரோக்கியமான வாழ்வு, அனைத்துத் தகவல்களும் எளிதாகக் கிடைப்பது போன்ற வசதிகள் உள்பட பல்வேறு முக்கிய அம்சங்களைக் கருத்தில் கொண்டு உலகளவில் நாடுகள் தரவரிசைப் படுத்தப்படுகின்றன.

இந்த ஆண்டுக்கான மனிதவள மேம்பாட்டு தரவரிசை அட்டவணையை ஐ.நா. வெளியிட்டுள்ளது. இலங்கை 71ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. அதேபோல், இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய இரு நாடுகளும், மனித வளர்ச்சியைக் கொண்ட நாடுகளின் வரிசையில் இணைந்துள்ளன. தெற்காசியாவில், மனிதர்களின் ஆயுள்காலம் மற்றும் பாடசாலைப் படிப்பின் ஆண்டுகளில் மிகப் பெரிய வளர்ச்சியை இலங்கை அடைந்துள்ளது. ஐ.நா. மனிதவள மேம்பாட்டு தரவரிசை அறிக்கையின்படி, வறுமை நிகழ்வுகள், நாட்டுக்கு நாடு பெரிதும் வேறுபடுகின்றன. பல்வேறு வகையான ஏழைகள் உலக அளவில் 1.3 பில்லியன் உள்ளனர். அதில், 661 மில்லியன் ஏழைகள் ஆசியா மற்றும் பசிபிக் நாடுகளில் உள்ளனர்.

மொத்த ஏழைகளின் எண்ணிக்கையில் 41 சதவீதத்துக்கும் அதிகமாகமானோர் தெற்காசியாவில் உள்ளனர். இந்தியாவில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்தபோதிலும், உலக ஏழைகளில், 28 சதவீதத்தை இந்தியா கொண்டுள்ளது. இந்தியாவின் ஏழ்மை குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுமி களைப் பாதிக்கின்றது. தொழில்நுட்பம், கல்வி மற்றும் காலநிலை நெருக்கடியை அடுத்த தலைமுறையினர் சந்திப்பார்கள் என்று அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ.5)



## இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு உதவிகள்

வவுனியா, டிசெ. 12
கிளிநொச்சியின் ஆனையிறவு, தண்டுவன் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.
கண்ணகை அம்மன் வித்தியாலயத்தில் தங்கியுள்ள 46 குடும்பங்களுக்கு, கண்டாவளை பெரியகுளத்தில் தங்கியுள்ள 26 குடும்பங்களுக்கும் பால்மா உணவுகள், பிஸ்கட், சிற்றுண்டிகள் என்பன அண்மையில் வழங்கப்பட்டன.
வுனியா தமிழ் விருட்சம் அமைப்பின் ஒழுங்கமைப்பில் நயினை சுபாஸ்கரன் ஊடாக பிரான்ஸில் வசிக்கும் புலம்பெயர் உறவுகளின் நிதி உதவியில் அவை வழங்கப்பட்டன. (து)



## நுளம்பு வலைகள் கையளிப்பு

இளவாலை,டிசெ.12
வலி.வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட குழந்தைகளைக் கொண்ட 50 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன.
இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் உயத்தும் கரங்கள் செயற்றிட்டத்தின் கீழ் இதற்கான நிதி உதவியை கனடாவை சேர்ந்த மருத்துவர் வரகுணன் வழங்கியிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-222)



## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கொடிகாமம்,டிசெ.12
டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு கெற்பேலி கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் இடம்பெற்றது.
கிராம அலுவலர் தனேஸ்வரன் தலைமையில் கெற்பேலி பொது நோக்கு மண்டபத்தில் இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றது.
நிகழ்வில் பொது சுகாதார பரிசோதகர் சூ.குணசாந்தன் வளவாளராகக் கலந்து கொண்டு கருத்துக்களை வழங்கினார். (ஐ- 159)

## மாணவர்கள் மதிப்பளிப்பு

கொடிகாமம்,டிசெ.12
சுகாதார மேம்பாட்டு முன்பள்ளியாக உருவான கெற்பேலி சிவசக்தி முன்பள்ளி மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சமுதாய மருத்துவர் எஸ்.சிவகணேசன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையின் மேலதிக சுகாதார மருத்துவ அதிகாரி எஸ்.சுகன்யா, மாவட்ட சுகநலக்கல்வி அலுவலகர் ஏ.ஜெயபாலன், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.
எழுதுமட்டுவாழ் கெற்பேலி பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த முன்பள்ளி மாணவர்களின் சுகாதார செயற்பாடுகள் சிறப்பாக அமைந்துள்ளன.
குப்பைகள் தரம் பிரித்து போடல், கை கழுவும் வசதி, பற்தூரிகையைக் கொண்டு பல் துலக்கல், சுகாதார தகவல் அடங்கிய ஓவியங்கள் சுவரில் வரைதல் போன்ற செயற்பாடுகள் சிறப்பாக அமைந்தமையை அடுத்து மாணவர்கள் மதிப்பளிக்கப்பட்டனர். (ஐ-159)



### கிளிநொச்சியில்
## மனித உரிமைகள் தினம் நடைபெற்றது

கிளிநொச்சி, டிசெ.12
சர்வதேச மனித உரிமைகள் தினம் கிளிநொச்சி கருணா நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. 'வெறுப்புப் பேச்சை எதிர்ப்போம்' எனும் தொனிப்பொருளில் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலர் பிரிவில் விழுதுகள் அமைப்பால் பயிற்றுவிக்கப்பட்ட இளைஞர் குழாத்தினரும் கிளிநொச்சி மாவட்ட அமரா பெண்கள் அமைப்பும் இணைந்து நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். விழுதுகள் அமைப்பின் அனுசரணையிலான இந்த நிகழ்வில், மனித உரிமைகள் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டன. (த-6)



## நூல் வெளியீடு

நவாலி,டிசெ.12
நவாலியூர் ச.அன்ரன் அருள் வண்ணன் எழுதிய "குருத்தின் கருத்து" என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு யாழ்ப்பாணம் பொதுநூலக கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றது.
முகுந்தன் சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.
குருத்தின் கருத்து நூல் ஆய்வுரையை அரச அதிகாரி கு.றஜீவன் வழங்கினார். ஏற்புரையை நூலாசிரியர் ச.அன்ரன் அருள்வண்ணன் வழங்கினார். (ஐ-50)





## வெள்ளப் பாதிப்பு தொடர்பில் கலந்தாய்வு

கிளிநொச்சி,டிசெ.12
கிளிநொச்சியில் பெய்து வருகின்ற கன மழையால் ஏற்பட்டுள்ள வெள்ளம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களிடையே அவசர கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவரது காரியாலயத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.
கிளிநொச்சியில், ஒவ்வொரு வட்டாரத்திலும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மக்களின் சுகாதாரம், குடிதண்ணீர் மற்றும் கழிவகற்றல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டன.
அத்துடன் பிரதேச சபைகளின் தவிசாளர்கள் செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.
நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனால் அதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.
வட்டாரங்களில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை வட்டார உறுப்பினர்களும், வட்டார அமைப்பாளர்களும் சபைகளின் தவிசாளர்களுக்கு உடனடியாக தெரியப்படுத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் இதன்போது அறிவுறுத்தினார்.
சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபைகளின் தவிசாளர்கள், சபைகளின் உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர் (ஐ-6)



## உதவி பொருள்கள் கையளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.12
வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பரந்தன் மேற்கு மக்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.
இலங்கை பல்சமைய கருத்தாடல் நிலைய சக வாழ்வு சங்கத்தால் அதன் இயக்குநர் யோ. ஜெஸ்ரின் தலைமையிலான குழுவால் உதவிப் பொருள்கள் அண்மையில் வழங்கப்பட்டன.
அத்துடன்வெள்ளத்தால்பாதிக்கப்பட்ட இடங்களானஉமையாள்புரம், 1/4 ஏக்கர் குடியிருப்பு, சிவபுரம் ஆகிய கிராமங்களையும் நேரில் சென்று பார்வையிட்டனர். (ஐ)



யாழ்ப்பாணம் உடுவில் மான்ஸ் மகாவித்தியாலயத்தின் ஒளிவிழாவும், ஆசிரியர் தின நிகழ்வும் அண்மையில் பாடசாலையில் அதிபர் திருமதி விஜயவாணி பிறின்ஸ் ஜெயதேவன் தலைமையில் இடம்பெற்றன.
இதன்போது இடம்பெற்ற மாணவர்களின் இசை நடன நிகழ்வை படத்தில் காணலாம். (ஐ-50)




## வெற்றிகரமான ஆண்டில் அடிக்கப்போகும் அதிர்ஷ்டம்




2020ஆம் புத்தாண்டு வெற்றிகரமான ஆண்டாக அமையப்போகிறது. இது மிக மிக நல்ல ஆண்டு. ராசியில் ராகு அமர்ந்திருக்கிறார். மிகப்பெரிய வெற்றியாக அமைய உள்ளது. புதன்கிழமை சதயம் நட்சத்திரத்தில் பிறக்கிறது. மிதுனம் ராசியையும் ராசியில் உள்ள ராகுவையும் குரு பகவான் பார்க்கிறார்.

வெளிநாட்டு வேலைக்குச் செல்லும் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஏழாம் வீட்டில் சனி, கேது, சூரியன், புதன், குரு என சஞ்சரிக்கின்றனர். குருபகவான் ராசியில் குரு கேது இணைவு கோடீஸ்வர யோகத்தை தரப்போகிறது. கெடுதல்கள் நீங்கும். வெளிநாட்டு வாய்ப்புகள் கூடி வரப்போகிறன. தந்தையின் உடல் நலம் அற்புதமாக இருக்கும்.

**கல்வி**

மிதுனம் ராசிக்கு ராசி நாதன் புதன் ஒரு வருஷம் முழுக்க சந்தோஷமாக பயணிக்கிறார். நல்ல பலன்களை அதிகம் கொடுப்பார். எட்டில் சனி இருந்தாலும் ஏழாம் வீட்டில் குரு இருப்பதால் சனி கெடுதல் செய்ய மாட்டார். குரு பார்வை இருப்பதால் சனியுடைய தடைகளையும் குரு நிவர்த்தி செய்வார். சவால்கள் நிறைந்த சுவாரஸ்யங்கள் நிறைந்த ஆண்டாக இருக்கும். மாணவர்களுக்கு வெற்றிகரமான ஆண்டு. வெளிநாட்டில் உயர்கல்வி படிக்கும் யோகம் தேடி வருகிறது. காரணம் குரு பார்வை மூளையை உற்சாகமாக வைத்திருக்கும்.


**திருமண யோகம்**

குரு ஏழாம் வீட்டில் இருப்பதால் வேலையில் அற்புதமான இடமாற்றம் அமையும். சிலருக்கு பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் ஏற்படும். சிலருக்கு வெளிநாட்டு வேலையும் கிடைக்கும். குரு பார்வையால் திருமண யோகம் கை கூடி வரப்போகிறது. நல்ல நட்பு அறிமுகம் கிடைக்கும். நிறைய பணம் வரும் காரணம் சனி பார்வை இரண்டாம் வீட்டில் விழுகிறது. குரு பார்வை ராசியின் மீது விழுகிறது. என்னதான் வருமானம் வந்தாலும் வரவுக்கு ஏற்ற செலவாகத்தான் அமையும். இந்த வருடம் பணத்தைச் சேமித்து வைக்க முடியாது.

**கணவன் மனைவி உறவு**

குடும்பத்தில் கணவன் - மனைவி உறவில் பிரச்சினை வந்தாலும் விட்டுக்கொடுத்து போங்கள். உடல் நலத்தில் அக்கறை காட்டுங்கள். குரு உங்கள் ராசியைப் பார்ப்பதால் உடல் நலத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும் உடனடியாக நீங்கும். அஷ்டமத்து சனியாக இருப்பதால் வாழ்க்கை துணையின் உடல் நலத்தில் அக்கறை காட்டுங்கள். பொருள் வரவு அதிகமாக இருக்கும். குழந்தைகளின் கல்வி நிலை சிறப்பாக இருக்கும். நல்ல வேலை கிடைக்கும். உங்களின் மதிப்பு, மரியாதை கூடும். வேலையில் உயர்வு கிடைக்கும். மூச்சு பிரச்சினைகள் வரலாம் மருத்துவ ஆலோசனை எடுத்துக் கொள்ளுங்கள். பயணங்களின்போது கவனமாக இருங்கள். பணம் கொடுக்கல் வாங்கலில் கவனமாக இருங்கள். காரணம் அஷ்டமத்து சனி பணத்தை யாருக்கு கொடுத்தாலும் திரும்ப வாங்க முடியாது. ஆரோக்கியத்தில் கவனமாக இருங்கள். அரசியல்வாதிகள் எச்சரிக்கையாக இருங்கள். இல்லாவிட்டால் உள்ளதும் போய்விட்டது என்று இருக்கும் நிலமை உருவாகும். சிவ ஆலயங்களுக்குச் சென்று சனிக்கிழமை தீபம் ஏற்றி தரிசனம் செய்தால் நல்லதே நடக்கும்.

# நெய்விளக்கு ஏற்றுதலும்... கிடைக்கும் பலன்களும்...



அம்மன் சன்னதியில் நெய் தீபம் ஏற்றுவதால் அவர்களுக்கு பலவிதமான நன்மைகள் கிடைக்கின்றன. கோரிக்கைகள் நிறைவேறுகின்றன.

இதனால் கோவிலுக்கு வரும் பெண் பக்தர்கள் அனைவரும் நெய்தீபம் ஏற்றி வழிபட்டு செல்கிறார்கள்.

எண்ணிக்கை வடிவில் நெய் தீபம் ஏற்றினால் அவர்களுக்கு கிடைக்கும் பலன்கள்:

5 - நெய் விளக்கு ஏற்றினால் சிறந்த கல்வி, ஞானம் பெறலாம்.
9 - நெய் விளக்கு ஏற்றினால் நவகிரக தோஷம் நீங்கும்.
12 - நெய் விளக்கு ஏற்றினால் வேலையில் தடை நீங்கும், வேலைவாய்ப்பு கிடைக்கும்.
18 - நெய் விளக்கு ஏற்றினால் காலசர்ப்ப தோஷம், செவ்வாய் தோஷம் நீங்கும்.
27 - நெய் விளக்கு ஏற்றினால் திருமண தடை நீங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும்.
36 - நெய் விளக்கு ஏற்றினால் சகல தோஷமும் நீங்கும்.
48 - நெய் விளக்கு ஏற்றினால் தொழில் அபிவிருத்தி மற்றும் சகல ஐஸ்வர்யமும் பெறலாம்.
108 - நெய் விளக்கு ஏற்றினால் அம்மன் கடாட்ஷம் பெறலாம்.

நெய் விளக்கு ஏற்றிய பின்னர் பக்தர்கள் அம்மனை வணங்க வேண்டும். அதனை தொடர்ந்து கோவில் பிரகாரத்தை 3 முறை வலம் வந்தால் அவர்கள் நினைத்த காரியம் அனைத்தும் நிறைவேறும்.

# மாங்கல்ய பலம் தரும் விரதம்



கார்த்திகை மாதம் வரும் சோமவார விரதம் பன்மடங்கு சிறப்புகளை உள்ளடக்கியது. இந்த விரதத்தை மேற்கொள்வதன் மூலமாக, பெண்களுக்கு மாங்கல்ய பலம் கூடும் என்பது நம்பிக்கை.

திங்கட்கிழமைகளில் சிவபெருமானை நினைத்து வழிபடும் விரதம் 'சோமவார விரதம்.' கார்த்திகை மாதம் வரும் சோமவார விரதம் பன்மடங்கு சிறப்புகளை உள்ளடக்கியது. என்றாலும் மற்ற மாதங்களிலும் இந்த விரதத்தை கடைப்பிடிக்கலாம்.

திங்கட்கிழமைகளில் சிவன் கோவிலுக்குச் சென்று, ஆலயத்தில் இருக்கும் சந்திரனை வழிபாடு செய்ய வேண்டும். அதோடு ஏழைகளுக்கு பச்சரிசியை தானமாக வழங்கலாம். இந்த விரதத்தை மேற்கொள்வதன் மூலமாக, பெண்களுக்கு மாங்கல்ய பலம் கூடும் என்பது நம்பிக்கை.

# நோபல் பரிசு பெற்ற சூகி இனப்படுகொலை வழக்கில்!

ஹேக், டிசெ.12

மியன்மாரில் ரோஹிங்கியா முஸ்லிம் மக்களுக்கு எதிரான இனப் படுகொலை தொடர்பாக விசாரிக்கும் சர்வதேச நீதிமன்றில் மியன் மாரின் மாநில ஆலோசகர் ஆங் சான் சூகி முன்னிலையாகியுள்ளார்.



நெதர்லாந்தின் ஹேக் நகரில் உள்ள இந்த நீதிமன்றில் முன்னிலையான ஆங் சான் சூகி நேற்றுமுன்தினம் தனது முதற்கட்ட வாதங்களை முன்வைத்துள்ளார். மியன்மாரில் ரோஹிங்கியா முஸ்லிம் மக்கள் இனப் படுகொலை செய்யப்பட்டனர் என்று, தென்னாபிரிக்க நாடான கேம்பியா சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

57 இஸ்லாமியக் கூட்டுறவு நாடுகளின் சார்பில் கேம்பியா இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் இனப் படுகொலைக் குற்றத்தைத் தடுப்பது, தண்டிப்பது தொடர்பான உடன்படிக்கையை மியன்மார் மீறியுள்ளது என்று குற்றஞ்சாட்டியுள்ள கேம்பியா, நூற்றுக்கணக்கான ரோஹிங்கிய முஸ்லிம் மக்கள் அயல் நாடான பங்களாதேஷுக்கு விரட்டப்பட்டனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. 2007ஆம் ஆண்டு மியன் மார் இராணுவம் நடத்திய தாக்குதல்களால் 7 இலட்சத்து 40 ஆயிரத்துக்கும் அதிகமான ரோஹிங்கிய முஸ்லிம்கள் பங்களாதேஷுக்குத் தப்பியோடினர். ஐக்கிய நாடுகள் சபையின் விசாரணையாளர்கள் இதனை இன அழிப்புச் செயல் என்று கூறுகின்றனர். மியன்மார் இனப்படுகொலை நடவடிக்கைகளைக் கைவிட்டு, குற்றம்புரிந்தவர்களைத் தண்டிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட ரோஹிங்கியர்களுக்கு இழப்பீடு அளிக்க வேண்டும் என்று உத்தரவிடுமாறு சர்வதேச நீதிமன்றத்திடம் கோரியுள்ளோம் என்று கேம்பியா நீதித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. அதேவேளை, போர்க்குற்றங்கள் குறித்து விசாரணை நடத்தும் சர்வதேச நீதிமன்றத்தின் தனிப் பிரிவு 2018ஆம் ஆண்டு முதல் மியன்மார் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளது. ஆனால் இதுவரை அந்த விசாரணையின் அறிக்கை எதுவும் தாக்கல்செய்யப்படவில்லை என்று சர்வதேச குற்றவியல் நீதிமன்ற சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மியன்மாரின் மாநில ஆலோசகர் ஆங் சான் சூகி அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவராவார். இவர் அதிகாரத்தில் இருந்த போதே ரோஹிங்கியா முஸ்லிம் மக்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. (எ)

# அடுத்தடுத்த சூடுகளால் பதற்றத்தில் நியூஜெர்ஸி

வொஷிங்டன், டிசெ.12

அமெரிக்காவின் நியூஜெர்ஸி மாகாணத்தில் இரு இடங்களில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர். துப்பாக்கிச் சூடு நடத்திய இருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப் பட்டுள்ளனர். சுப்பர் மார்க்கெட்டிலும், பொது இடம் ஒன்றிலும் இந்தத் துப்பாக்கிச் சூடுகள் நடந்துள்ளன. இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கும், பயங்கரவாதத்துக்கும் தொடர்புகள் இருப்பதற்கான சான்றுகள் உடனடியாகக் கிடைக்கவில்லை என்று அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் ஒரே பிரதேசத்தில் நடந்துள்ளன. செமின்ரி என்ற இடத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உயிரிழந்தார்.

அதே பகுதியில் சுப்பர் மார்க்கெட் ஒன்றில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று நியூஜெர்ஸி நகரப் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை அடுத்து அந்த நகரத்தில் உள்ள பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. அங்கு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அந்த நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், “இந்தச் சம்பவம் வேதனை அளிக்கின்றது. பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்காக இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம். உள்ளூர் நிர்வாகத்துக்குத் தேவையான உதவிகளை வழங்கத் தயாராக இருக்கின்றோம்” என்று தெரிவித்துள்ளார். (எ)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி பராசக்தி சிவநாதன்

(இளைப்பாறிய சுருக்கெழுத்தாளர். வடபிராந்திய போக்குவரத்துசபை)



மலர்வு 06.06.1938 உதிர்வு 10.12.2019

அன்புத் தாயாரின் இழப்பால் கலங்கி நிற்கும் **யாழ் போதனா வைத்தியசாலைப் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி C.S. ஜமுனாநந்தா** அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆன்மா அமைதியுற இறைவனை பிராா்த்திக்கின்றோம்.

**பணிப்பாளர்,**
**அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,**
**போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்.**

(cs.29864) (13.17)

# அமெ. விட்ட இடத்தில் காலூன்றுகிறது ரஷ்யா

டமாஸ்கஸ், டிசெ.12



உள்நாட்டுப் போர் நடைபெற்று வரும் சிரியாவில் இருந்து அமெரிக்கா தனது படைகளை விலக்கிக் கொண்டுள்ள நிலையில், ரஷ்யா தனது படைகளை அங்கு அனுப்பியுள்ளது.

தற்போது அனுப்பப்பட்டுள்ள ரஷ்யப்படைகள் சிரியாவின் வடகிழக்குப் பகுதிகளில் நிலை நிறுத்தப்படும் என்று தெரிவித்துள்ள ரஷ்யா பாதுகாப்புக்காகவும், மனிதாபிமான நடவடிக்கைகளுக்காகவும் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது.

துருக்கி எல்லைப் பகுதியில் உள்ள சிரிய குர்துப் போராளிகள் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளனர் என்று தெரிவித்து துருக்கி அவர்கள் மீது தாக்குதல் நடத்தத் தீர்மானித்திருந்தது. அதைத்தொடர்ந்து அந்தப் பகுதிகளில் நிலை கொண்டிருந்த அமெரிக்கப் படைகள் மீளப் பெறப்பட்டிருந்தன. அதன்பின்னர் துருக்கி, குர்துப் போராளிகள் மீது தாக்குதல்களை ஆரம்பித்திருந்தது. துருக்கியின் தாக்குதல்கள் காரணமாக சுமார் 4 லட்சம் மக்கள் சிரியாவின் வடக்குப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்துள்ளனர். பெரும் எண்ணிக்கையானோர் கொல்லப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டுத் தகவல்கள் கூறுகின்றன. இந்தத் தாக்குதல்கள் துருக்கிக்கு எதிராகக் கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியமையால் துருக்கி தனது தாக்குதல்களை மட்டுப்படுத்தியிருந்தது. எனினும் தற்போது குர்துப் போராளிகளுக்கு எதிரான தாக்குதல்களைத் துருக்கி மீண்டும் மேற்கொண்டு வருகின்றது. (எ)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி பொன்னுத்துரை இராணி

**தோற்றம்**
**20.09.1952**

**மறைவு**
**04.12.2017**

திதி: பிரதமை தேய்பிறை
(12.12.2019)

ஈராண்டு சென்றதம்மா ஓயவில்லை எம் துயரம்...
ஓர் நிமிடம் கூட மறக்கவில்லை நாங்களம்மா...
என்ன நினைத்துச் சென்றாயம்மா எம்மை விட்டு...
என்றும் உங்கள் நினைவுகளுடன் நாங்களம்மா...

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

**பொன்னுத்துரை குடும்பத்தினர்**
**இல.135/01, ஆலடி வீதி,**
**தோணிக்கல், வவுனியா.**

(cs.620) (13.17)

## மரண அறிவித்தல்

### கணேசரத்தினம் நவரத்தினம் (குணவதி)



மண்ணில் 17.11.1932 மனதில் 10.12.2019

பனிப்புலம் பண்டத்தரிப்பைச் சேர்ந்த திருமதி கணேசரத்தினம் நவரத்தினம் (குணவதி) அவர்கள் 10.12.2019 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா அன்னப்பிள்ளை தம்பதியரின் மூத்தமகளும், காலஞ்சென்ற விசுவலிங்கம் நல்லபிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற கணேசரத்தினத்தின் மனைவியும், காலஞ்சென்ற தங்கராசா மற்றும் மகேந்திரன் தவமணி, திருப்பதி சிவபாக்கியம் (ஜேர்மனி), காலஞ்சென்ற சதாசிவம் இராசலட்சுமி ஆகியோரின் சகோதரியும், சபாநாயகம் (உரிமையாளர் - வேணுபட்டுச்சோலை, தலைவர்- பண்டத்தரிப்பு வர்த்தகர்சங்கம், முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் - வலிகாமம் மேற்கு, தமிழ் அரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி கிளைக் குழுவின் பொருளாளர், செயலாளர் - பனிப்புலம், பண்ணாகம்,சித்தங்கேணி விவசாய சம்மேளனம் வலி. மேற்கு முதியோர் சமாசம், பொருளாளர் - பனிப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம்.) ஜெகதீஸ்வரி, புஸ்பராணி (ஜேர்மனி), செல்வராசா (ஜேர்மனி), இரவீந்திரன் (உரிமையாளர் - கணேசா பான்சி, பண்டத்தரிப்பு) நகுலராணி, ஈஸ்வரி (ஜேர்மனி), கோபாலகிருஸ்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் தாயாரும், தேவமலர் (ஓய்வுபெற்ற தாதி - யாழ். போதனா வைத்தியசாலை) காலஞ்சென்ற சதானந்தன் மற்றும் சிவானந்தன் (ஜேர்மனி), சிதம்பரம் (ஜேர்மனி), மல்லிகா (ஆசிரியர் - மஹாஜனக் கல்லூரி), காலஞ்சென்ற சிவநாயகம் மற்றும் சதானந்தன் (ஜேர்மனி), துசியந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2019) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் இடம்பெற்று, உடல் தகனக் கிரியைகளுக்காக சம்பில்துறை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 24176)(14,17)

**தகவல் : குடும்பத்தினர்.**

**077 246 5876**



## இன்றைய நாள்

**மேடம்:** திட்டமிட்ட பணி நிறைவேற கூடுதல் முயற்சி தேவைப்படும். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பண வரவை சிக்கனமாக செலவு செய்வீர்கள்.

**இடபம்:** உங்களின் கருத்து நிறைந்த பேச்சை பலரும் பாராட்டுவர். தொழில், வியாபாரத்தில் இருந்த சுணக்க நிலை சரியாகும். உபரி பண வருமானம் கிடைக்கும்.

**மிதுனம்:** பொது விவகாரங்களில் ஒதுங்கி இருப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்ய வேண்டும். அளவான பண வரவு கிடைக்கும்.

**கடகம்:** உலக நடப்பை அறிவதில் ஆர்வம் கொள்வீர்கள். தொழில், வியாபார தொடர்பு வியத்தகு அளவில் பலம் பெறும். தாராள பண வரவில் கொஞ்சம் சேமிப்பீர்கள்.

**சிம்மம்:** வெகு நாள் தவம் இனிதாக நிறைவேறும். தொழில், வியாபாரம் செழித்து வளர அனுகூல காரணி பலம் பெறும். பண பரிவர்த்தனை முன்னேற்றம் பெறும்.

**கன்னி:** செயல்களில் நிதானம் உரிய பலன் பெற்று தரும். தொழில், வியாபாரம் செழிக்க நண்பர் உதவுவார். அளவான பணவரவு கிடைக்கும். அதிக பயன் தராத பொருள் வாங்க வேண்டாம்.

**துலாம்:** உங்கள் பேச்சில் விரக்தியின் தன்மை வெளிப்படலாம். கௌரவத்தை பாதுகாப்பது அவசியமாகும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற அதிக உழைப்பு தேவைப்படும்.

**விருச்சிகம்:** எதிர்கால வாழ்வில் புதிய நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணி திட்டமிட்டபடி நிறைவேறும். கூடுதல் பண வரவில் அறப்பணி செய்வீர்கள்.

**தனுசு:** நண்பர், உறவினர் அன்பு ப்ாராட்டுவர். தொழில், வியாபாரம் வியப்பூட்டும் வகையில் செழிப்படையும். குடும்ப தேவையை தாராளமாக பூர்த்தி செய்வீர்கள்.

**மகரம்:** உறவினர்களிடம் பேச நினைத்த விஷயம் மாறிப் போகலாம். குறைந்த அளவில் பண வரவு கிடைக்கும். அதிக விலையுள்ள பொருள் கவனமுடன் பாதுகாக்கவும்.

**கும்பம்:** அடுத்தவர் விவகாரத்தில் கருத்து சொல்ல வேண்டாம். தொழிலில் அளவான உற்பத்தி, விற்பனை இருக்கும். பண வரவை விட செலவு கூடும்.

**மீனம்:** ஆன்மிக அனுபவங்களை எண்ணி மகிழ்வீர்கள். உங்களின் செயல் திறன் வளரும். புதிய யுக்தியால் தொழில், வியாபாரம் செழிக்கும். உபரி பண வரவு கிடைக்கும்.

# கேள்விகளால் கோபமாகி போனை பறித்த போரிஸ்!




லண்டன், டிசெ.12

செய்தியாளர் ஒருவருக்குப் பேட்டி அளித்துக் கொண்டிருந்த பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜோன்சன், செய்தியாளரின் அலைபேசியைப் பறித்துத் தனது சட்டைப் பையில் வைத்துக் கொண்ட சம்பவம் அனைவரது அவதானிப்புக்கும் உள்ளாகியுள்ளது.

பிரிட்டனில் இன்று நாடாளுமன்றத் தேர்தல் நடக்க இருக்கின்றது. இந்தத் தேர்தலில் தற்போதைய பிரதமர் பொரிஸ் ஜோன்சனின் பழமைவாதக் கட்சிக்கும், ஜெர்மி கார்பைன் தலைமையிலான தொழிலாளர் கட்சிக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. பிரதமர் போரிஸ் தேர்தலுக்கான இறுதிக் கட்டப் பரப்புரைகளில் கடந்த சில நாள்களாக ஈடுபட்டிருந்தார்.

ஒரு சந்தர்ப்பத்தில் அவர் செய்தியாளர் சந்திப்பு நடத்தியபோது அங்குள்ள ஊடகம் ஒன்றின் செய்தியாளர் ஜோ பைக் என்பவர், லண்டனில் உள்ள அரச மருத்துவமனை ஒன்றில் நிமோனியாவால் பாதிக்கப்பட்ட 4 வயதுச் சிறுவன் ஒருவன் தரையில் படுக்க வைக்கப்பட்டிருந்த படத்தைத் தனது அலைபேசியில் எடுத்துக் காட்டி, போரிஸிடம் கேள்விகளைத் தொடுத்து விமர்சித்தார். அதனால் கோபமடைந்த போரிஸ் செய்தியாளரின் அலைபேசியைப் பறித்துத் தனது சட்டைப் பையில் போட்டுக் கொண்டார்.

இந்தக் காட்சிகள் அடங்கிய வீடியோவை ஜோ பைக் தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இந்த வீடியோ சில மணி நேரங்களிலேயே "வைரல்" ஆகியுள்ளது. இந்தச் சம்பவத்தில் போரிஸின் செயலைப் பலரும் விமர்சித்து வருகின்றனர். தொழிலாளர் கட்சியின் தலைவர் ஜெர்மி கார்பைனும், போரிஸின் இந்தச் செயலுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார். தேர்தலுக்குத் தயாரான நிலையில் போரிஸ் ஜோன்ஸன் இவ்வாறான சர்ச்சையில் சிக்கி யுள்ளமை அந்த நாட்டு ஊடகங்களில் முதலிடம் பிடித்துள்ளது. (எ)

# மீண்டும் குமுறுகின்றது நியூஸிலாந்து எரிமலை

வெலிங்டன், டிசெ.12

நியூஸிலாந்தின் வொயிட் தீவில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பு நேற்று மீண்டும் அதிகரித்துள்ளது.

வடக்கு ஐஸ்லாந்திலிருந்து 40 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வொயிட் தீவில் உள்ள எரிமலை ஒன்று கடந்த திங்கட்கிழமை முதல் வெடிக்க ஆரம்பித்தது. அதில் சிக்கி 5 பேர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்துள்ளனர். 25 பேர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த மலைப் பகுதிக்குச் சென்ற சுற்றுலாப் பயணிகளே உயிரிழந்தனர். எரிமலை வெடிக்க ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் அந்தப் பகுதியில் 50 சுற்றுலாப் பயணிகள் இருந்தனர் என்று கூறும் அந்த நகர அதிகாரிகள், அவர்களில் 23 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளனர். 5 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ள நிலையில், ஏனையோர் காணாமல் போயுள்ளனர்.

எரிமலை வெடிப்புக்கள் நேற்று மீண்டும் அதிகரித்துள்ள நிலையில் மீட்புப் பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளது என்று மீட்புப் பணியாளர்கள் கூறுகின்றனர்.

எரிமலை வெடிப்புக்கள் மீண்டும் அதிகரித்துள்ளமை எரிமலைக்குள் தொடர்ந்து வாயு மற்றும் அழுத்தம் அதிக அளவில் உள்ளதையே காட்டுகின்றது. எரிமலை வெடிப்புக்கள் இன்னும் அதிகரிக்கலாம் என்று நிலநடுக்கம் மற்றும் எரிமலைகள் தொடர்பாக ஆராயும் அமைப்பு ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது. (எ)





# கோலா கரடிகளுக்கு எமனான காட்டுத் தீ

மெல்போர்ன், டிசெ.12

ஆஸ்திரேலியாவின் நியூசவுத்வேல்ஸ் மற்றும் குயின்ஸ்லாந்து மாகாணங்களில் கடந்த மாதம் ஏற்பட்ட காட்டுத் தீ இன்னமும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவில்லை.

ஒரே நேரத்தில் 100க்கும் மேற்பட்ட இடங்களில் காட்டுத் தீ ஏற்பட்டிருந்த நிலையில் தற்போதும் 50க்கு மேற்பட்ட இடங்களில் காட்டுத் தீ தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது. இந்தக் காட்டுத் தீயால் 4 பேர் இறந்துள்ளனர். 2 லட்சம் ஏக்கருக்கும் அதிகமான விவசாய நிலங்கள் கருகியுள்ளன. 500க்கும் அதிகமான வீடுகள் முற்றிலும் அழிவடைந்துள்ளன.

இந்தக் காட்டுத் தீயால் 2 ஆயிரம் கோலா கரடிகள் உயிரிழந்துள்ளன என்று தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன. காட்டுத் தீ தொடர்பாக அந்த நாட்டு நாடாளுமன்றத்தில் நடைபெற்றுவரும் விசாரணையில் சூழலியல் நிபுணர் ஒருவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

"நியூ சவுத்வேல்ஸ் மற்றும் குயின்லாந்தில் நீடித்துள்ள காட்டுத் தீயால் கோலா கரடிகளின் வாழ்விடங்கள் ஏறத்தாழ முற்றிலும் அழிந்து விட்டன" என்று அவர் கூறியுள்ளார். (எ)

## ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் மறியலில்

யாழ்ப்பாணம், டிசெ. 12

ஈபிடிபியின் தீவகம் வடக்குக்கான பொறுப்பாளரும் ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளருமான ஜெயகாந்தன் பொலிஸாரின் கடமைகளுக்கு மதுபோதையில் இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பதில் பொறுப்பதிகாரி தர்மகுணவர்த்தனவின் கடமைகளுக்கு குறித்த நபர் இடையூறு விளைவித்தார் என்றே குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதையடுத்தே அவர் நீதிமன்றால் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ம-104)

### ஆட்சிக்கு...

பிரிட்டன் நாடாளுமன்றத் தேர்தல் விரைவில் இடம்பெறவுள்ளது. இந்தத் தேர்தலுக்கான பரப்புரைகள் தற்போது அங்கு சூடுபிடித்துள்ளன. இத்தகைய பின்னணியில் மேற்குறித்த வாக்குறுதியை வழங்கியுள்ளார் ஹோர்பின்.

நான் அதிகாரத்துக்கு வந்தால், இலங்கையிலுள்ள தமிழ் மக்களுக்கு சுயாட்சியொன்றை பெற்றுத் தருவதற்காக நிச்சயம் செயற்படுவேன். வன்னி இராணுவ நடவடிக்கையை தமிழ் மக்களுக்கு எதிரான படுகொலையென பெயரிடுவேன் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பிரிட்டனில் உள்ள தமிழ் மக்களின் வாக்குகளை இலக்குவைத்தே ஹோர்பன் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார் என்று கருதப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிந்து செல்வது தொடர்பான கென்சர்வேடிவ் கட்சியின் நகர்வுகள் அடுத்தடுத்துப் படுதோல்வியில் முடிந்ததை அடுத்து அந்தக் கட்சிக்கு இயல்பாகவே மக்கள் மத்தியில் பின்னடைவு நிலை தோற்றம் பெற்றுள்ளது. இதனால் ஹோர்பினுக்கான வாய்ப்புக்கள் அதிகம் என்றே தற்போது கருதப்படுகின்றது. (ம)

### பாதுகாப்புச்...

பாதுகாப்பு அமைச்சின் செயலராகக் கடமைகளைப் பொறுப்பெற்ற பின்னர் முதன்முதலாக அவர் இன்று யாழ்ப்பாணம் வருகின்றார். இன்று காலை 8 மணிக்கு பலாலி வானூர்தி நிலையத்துக்கு வரும் அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளார். பலாலி இராணுவத் தளத்தில் அதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாப்புச் செயலரின் வருகையை முன்னிட்டு கடும் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ம-21,26-104)

### ரயில்...

போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

உயிரிழந்தவர் யார் என்று அடையாளம் காணப்படவில்லை என்று வைத்தியசாலைத் தரப்பு அறிவித்துள்ளது. சுமார் 50 வயது மதிக்கத்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் மஞ்சள் மற்றும் சிவப்பு நிறம் கலந்த சாரம் கட்டியிருந்தார் என்றும், கறுப்புத் தோலைக் கொண்டவர் என்றும் தெரிவித்துள்ள வைத்தியசாலைத் தரப்பினர், சடலத்தை அடையாளம் காணுமாறும் கேட்டுக்கொண்டுள்ளனர். (ம-21,26)

### எடுக்கப்பட்டது...

மாதிரிகளும் நேற்று எடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றின் உத்தரவில் சந்தேகநபர்கள் இருவரையும் போதனா வைத்தியசாலை சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் கோப்பாய் பொலிஸார் நேற்றுப் புதன்கிழமை முற்படுத்தினர். அதன்போது சந்தேகநபர்களின் குருதி மாதிரிகள் பெறப்பட்டன.

இருபாலையில் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உள்படுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் உள்ள சந்தேகநபர்கள் இருவரின் மீதே கோண்டாவிலில் தனிமையில் வசித்து வந்த வயோதிபப் பெண்ணைக் கொலை செய்த குற்றச்சாட்டையும் கோப்பாய் பொலிஸார் முன்வைத்தனர்.

அதுதொடர்பில் வயோதிபப் பெண் கொலை செய்யப்பட்ட இடத்தில் எடுக்கப்பட்ட குருதி மாதிரிகளுடன் சந்தேகநபர்களின் குருதி மாதிரியையும் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க கோப்பாய் பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் கடந்த மாதம் 25ஆம் திகதி விண்ணப்பம் செய்திருந்தனர்.

எனினும் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்குட்படுத்திய வழக்கில் சந்தேகநபர்கள் இருவரும் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்தப்பட்ட பின்னர்தான் அவர்களை சட்ட மருத்துசவ அதிகாரியின் முன் முற்படுத்த முடியும் என்பதால் இரண்டு வாரங்கள் இந்த நடவடிக்கை தள்ளிப் போடப்பட்டது.

இந்த நிலையில் சிறுமியைக் கடத்திச் சென்று வன்புணர்வுக்கு உள்படுத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் நேற்று நீதிமன்றில் வைத்து பாதிக்கப்பட்ட சிறுமி உள்பட்ட சாட்சிகள் இருவரும் அடையாளம் காட்டினர்.

அதனால் வயோதிபப் பெண்ணின் கொலைக் குற்றச்சாட்டு வழக்கில் சந்தேகநபர்கள் இருவரும் இன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சட்ட மருத்துவ அதிகாரி முன்னிலையில் முற்படுத்தப்பட்டு அவர்களது குருதி மாதிரிகள் சேகரிக்கப்பட்டன.

முன்னதாக, கோண்டாவில் நெட்டிலிப்பாய் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் தனிமையில் வசித்த வயோதிப பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். கடந்த ஒக்டோபர் 21ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பிள்ளைகளில் ஒருவர் வெளிநாட்டில் உள்ளதுடன் மற்றையவர் ஆசிரியர் என்றும் நீர்வேலியில் வசித்து வருகின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். வயோதிப பெண் சடலமாக மீட்கப்பட்ட இடத்தில் இருந்து கூரிய ஆயுதத்தையும் யாழ்ப்பாணம் தடவியல் பொலிஸார் மீட்டனர். இக்கொலை சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர்.

கொடூர குணமுடையவர்களே இந்தக் கொலையை செய்துள்ளனர் என்றும் வயோதிபப் பெண்ணை இழுத்து வந்து உடையை அகற்றி, வயிற்றுப் பகுதியில் நெருப்புத் தனல் உடைய கட்டையால் சூடு வைத்து பெரும் சித்திரவதை செய்துள்ளனர் என்றும் விசாரணைகளில் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-37)

### அரசின்...

அமைச்சின் செயலர் கமால் குணரட்ன தெரிவித்தார்.

இராணுவத் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

'இந்தச் சம்பவம் தொடர்பான தொழில்நுட்ப ரீதியான உண்மை சுவிஸ் தூதருக்கு நிரூபிக்கப்பட்டுள்ளது. எனினும், மேற்கத்தைய நாடுகளில் இலங்கைப் படையினருக்கு எதிரான தோற்றம் இருந்துகொண்டேயிருக்கின்றது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-22)

### சிறுப்பிட்டியில்...



கனவே உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர்.

அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-105,11,7,104)

### காவு...

ளது. சிகிச்சை பயனளிக்காமல் நேற்று அவர் உயிரிழந்தார்.

ராசகிருஸ்ணன் நிமோனியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்தார் என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். இறப்பு தொடர்பான விசாரணையை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-21,26)

### பாரதிக்கு...

திரன், யாழ். மாநகர முதல்வர் இம்மனுவல் ஆனல்ட், வடமாகாண அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், யாழ் மாவட்டச் செயலர் என்.வேதநாயகம் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-ரி)



ராசி அதிர்ஷ்டம்
திகதி 11.12.2019 | வெற்றி வாரம் 2704 | வர்ணம் பச்சை
துலாம்
வெற்றி இலக்கங்கள் 27 29 58 62
வியாழக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 4, 803, 730/=
12.12.2019 ம் திகதி வியாழக் கிழமை கபிலம் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடீஸ்வர லொத்தர்
H 10 19 28 44
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,850,700/-
சீட்டிழுப்பு வாரம்: 531
திகதி: 2019 டிசம்பர் 10
வர்ணம்: இளஞ்சிவப்பு
செவ்வாய்
மஞ்சள், இளஞ்சிவப்பு மற்றும் பச்சை நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

அத கோடிபதி
ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 818
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.12.11
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 72,462,275/-
வெற்றி இலக்கங்கள் 14 42 67 70
ஆங்கில எழுத்து A
அபிவிருத்தி லொத்தர் சபை

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3273
திகதி: 2019.12.11
ஊதா புதன்கிழமை
விசேட இலக்கம் 8097
வெற்றி இலக்கங்கள் 03 09 14 72
ஆங்கில எழுத்து J
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட் 31,933,280/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

உத்தியோகபூர்வ முடிவுகள்
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு வாரம் 304
சீட்டிழுப்பு திகதி 11.12.2019 நீலம்
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 06 07 53
விதி எண் 01
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 48, 188, 068/=
13.12.2019 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk



## தெற்காசிய விளையாட்டில்

# இலங்கை 40 தங்கப் பதக்கங்களுடன் மூன்றாமிடத்தைக் கைப்பற்றியது

13ஆவது தெற்காசியப் போட்டியில் இலங்கை 40 தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றி 3ஆம் இடத்தைப் பிடித்தது.
நேபாளம் காத்மண்டுவில் நடைபெற்ற 13ஆவது தெற்காசிய நாடுகளுக்கு இடையிலான போட்டிகளில் இந்தியா, இலங்கை, நேபாளம், மாலைதீவு,பக்ரன், பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய தெற்காசிய நாடுகள் பங்கு பற்றின.
இதில் இலங்கை 40 தங்கப் பதக்கங்கள், 83 வெள்ளிப் பதக்கங்கள், 128 வெண்கலப் பதக்கங்கள் உள்ளடங்கலாக 251 பதக்கங்களைக் கைப்பற்றி 3ஆம் இடத்தைப் பிடித்தது. மொத்தப் பதக்கங்களின் அடிப்படையில் இலங்கை அணி இரண்டாமிடத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு அத்திலெட்டிக் விளையாட்டுக்களில் இலங்கைக்கு 15 பதக்கங்கள் கிடைத்தன.
முதலாம் இடத்தில் இந்தியா 174 தங்கப் பதக்கங்களுடனும், இரண்டாமிடத்தில் நோபாளம் 51 தங்க்ப் பதக்கங்களுடனும், நான்காமிடத்தில் பாகிஸ்தான் 31 தங்கப் பதக்கங்களுடனும், ஐந்தாமிடத்தில் பங்களாதேஷ் 19 தங்கப் பதக்கங்களுடனும் காணப்படுகின்றன.
மொத்த பதக்கங்கள் அடிப்படையில் இந்தியா 312 பதக்கங்களுடனும், இலங்கை 251 பதக்கங்களுடனும், நேபாளம் 206 பதக்கங்களுடனும், பங்களாதேஷ் 138 பதக்கங்களுடனும், பாகிஸ்தான் 131 பதக்கங்களுடனும் காணப்படுகின்றன.

# கராத்தே போட்டியில் தனராஜுக்கு இரு தங்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.12
இலங்கை சோட்டோக்கான் கராத்தே சங்கம் நடத்திய சோட்டோ கப் கிண்ணத்துக்கான கராத்தேயில் ஆர்.தனராஜ் இரு தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றினர்.
இலங்கை சோட்டோக்கான் கராத்தே சங்கம் நடத்திய கராத்தே போட்டிகள் கடந்த 7ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றது.
இதில் 21 வயதுக்குட்பட்ட 60 கிலோ எடைப் பிரிவில் வரணி தற்காப்பு கலையகத்தை பிரதிநிதித்துவம் செய்த ஆர். தனராஜ் காட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் தங்கப் பதக்கங்களை சுவீகரித்தார். (422)





# பாடும்மீன் வெற்றி

யாழ்ப்பாணம், டிசெ.12
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் எவ்.ஏ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது.
புத்தளம் விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் நீர்கொழும்பு யுபிற்றஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதியது.
இதில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி சார்பில் கெயின்ஸ், கீதன் ஆகியோர் தலா இரண்டு கோல்களையும், சாந்தன், சேயன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பதிவு செய்தனர். (23)

# பூப்பந்தாட்ட தனிநபர் ஆட்டத்தில் கிண்ணம் வென்றார் திலக்சன்

யாழ்ப்பாணம், டிசெ.12
வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் வடக்கு, கிழக்கு மாகாண ரீதியாக நடத்திய திறந்த பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்ட தனிநபர் ஆட்டத்தில் திலக்சன் கிண்ணம் வென்றார்.




கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை உள்ளக விளையாட்டரங்கில் இடம்பெற்ற திறந்த பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்ட தனிநபர் ஆட்டத்தில் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி களமிறங்கிய திலக்சனை எதிர்த்து மன்னார் மாவட்டத்தைப் பிரதி நிதித்துவப்படுத்தி நிசாந்த பாலன் மோதினார். இதில் மன்னார் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடிய திலக்சன் 21: 16, 21: 19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றார். (23)

# போட்டி முடிவு

யாழ்ப்பாணம், டிசெ.12
அமரர் பா.மயூரதன் ஞாபகார்த்தமாக நடைபெறும் கே.ஸி.ஸி.ஸி கிண்ணத்துக்கான கூடைப் பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம் பெற்று வருகின்றது.
இதில் கடந்த திங்கட்கிழ்மை மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற ஆண்களுக்கான ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி 76:52 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (23)






# முதலாவது இன்னிங்ஸில் இலங்கை நிதான ஆரம்பம்

பாகிஸ்தானில் நேற்று ஆரம்பமான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸை சிறப்பாக ஆரம்பித்திருந்தது.

இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் போட்டித் தொடரில் விளையாடுகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமாகியது. பாகிஸ்தானில் 10 ஆண்டுகளின் பின்னர் டெஸ்ட் போட்டித் தொடர் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அணித் தலைவர் திமுத், ஓஷத பெர்னாண்டோ களமிறங்கினர் இருவரும் இணைந்து நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அணி 96 ஓட்டங்களை எட்டிய போதே முதலாவது இலக்கை வீழ்த்தினார் ஷா அப்ரிடி. இரண்டு எல்.பி.டபிள்யு ஆட்டமிழப்பு முறையில் இருந்து தப்பி, 3ஆவது எல்.பி.டபிள்யு முறையில் திமுத் 59 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்துக் களமிறங்கிய குசல் மென்ரிஸ் அதிக நேரம் தாக்கு பிடிக்க முடியாமல் 10 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். அடுத்து களமிறங்கிய மத்தியூஸ் ஓரளவு நம்பிக்கையளிக்க அணி ஓரளவு சிறப்பான ஓட்ட எண்ணிக்கையை எட்டியது. சந்திமல் 2 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து சொப்பியிருந்தார். பின்னர் களமிறங்கிய தனஞ்சய டி சில்வா மத்தியூஸுடன் இணைந்து அணியை பலப்படுத்தினார். இருவருக்குமிடையில் 62 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்ட போது மத்தியூஸ் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மாலையில் போதிய வெளிச்சமில்லாத காரணத்தால் போட்டி 69 பந்துப்பரிமாற்றங்களில் நிறுத்தப்பட்டது. அப்போது அணி 5 இலக்குகளை இழந்து 202 ஓட்டங்களைப் பெற்றது. தனஞ்சய டி சில்வா 38 ஓட்டங்களுடனும், டிக்வெல 11 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர். பந்து வீச்சில் நிஷாம் ஷா 2 இலக்குகளையும், சின்வாரி, ஷா அப்ரிடி, முகமட் அபாஸ் தலா ஒவ்வொரு இலக்கைக் கைப்பற்றினர்.

கடும் பனிமூட்டம் நிலவியதால் போட்டியின் பெரும்பகுதி ஆட்ட நேரம் மின்னொளியிலேயே விளையாடப்பட்டது.

## 10 ஆண்டுகளின் பின் பாக். டெஸ்ட் போட்டி

பாகிஸ்தானில் 10 ஆண்டுகளின் பின்னர் டெஸ்ட் போட்டி நேற்று ஆரம்பமாகியது. இலங்கை அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

2009ஆம் ஆண்டு இலங்கை அணி பாகிஸ்தானில் விளையாடிய போது லாகூரில் பயங்கரவாதிகள் தாக்குதலில் இலங்கை வீரர்கள் சிலர் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்தை தொடர்ந்து பாகிஸ்தானில் சர்வதேச போட்டிகள் நடைபெறவில்லை. அந்த அணி ஐக்கிய அரபு எமிரேட்சில் விளையாடி வந்தது.

இலங்கை, சிம்பாப்வே அணிகள் மட்டும் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு ஒருநாள் போட்டி மற்றும் ரி-20 போட்டிகளில் விளையாடின. ஆனால் டெஸ்ட் போட்டி நடைபெறாமல் இருந்தது.

பாகிஸ்தான் அணி ஐக்கிய அரபு எமிரேட்சில் டெஸ்டில் விளையாடி வந்தது. தற்போதுதான் பாகிஸ்தான் அணி 10 ஆண்டுகளுக்குப் பின்னர் சொந்த மண்ணில் விளையாடுகின்றது.

இந்த டெஸ்ட் போட்டிக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. எந்தவித அசம்பாவிதமும் நடைபெற்றுவிடாமல் இருக்க இராணுவ வீரர்கள் தீவிர கண்காணிப்புகளில் ஈடுபட்டு வருகின்றன.

## ஒருநாள் தொடரிலும் தவான் சந்தேகம்

காயம் முற்றிலும் குணமடையாததால் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ஒருநாள் தொடரிலும் ஷிகர் தவான் விளையாடுவது சந்தேகம் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய கிரிக்கெட் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான தவான் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான ரி-20 மற்றும் ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணியில் இடம் பிடித்திருந்தார்.

ரி-20 தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் சையத் முஷ்டாக் அலி ரி-20 லீக்கில் தவான் டெல்லி அணிக்காக விளையாடினார். அப்போது அவருக்கு காயம் ஏற்பட்டது.

இதனால் அவர் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிரான போட்டியில் ரி-20 அணியில் இருந்து நீக்கப்பட்டார்.

தற்போது அவரது காயம் முழுமையாக குணம் அடையாததால் ஒருநாள் தொடரில் இருந்தும் நீக்கப்படுவதற் கான வாய்ப்புக்கள் காணப்படுவதாக தெரிய வருகின்றன.

ரஷித் கான் அதிரடி நீக்கம்

## ஆப்கான் அணித் தலைவராக மீண்டும் அஸ்கர் ஆப்கன்




ஆப்கானிஸ்தான் அணியின் டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி-20 அணித் தலைவராக அஸ்கர் ஆப்கன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மே மாதம் நடைபெற்ற உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இடம் பிடித்த அணிகளில் ஒன்று ஆப்கானிஸ்தான். அந்தத் தொடரில் ஏதாவது ஒரு அணிக்கு அதிர்ச்சி கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 9 லீக் ஆட்டத்திலும் தோல்வியடைந்து ஒரு புள்ளி கூட பெறாமல் தொடரில் இருந்து பரிதாபமாக வெளியேறியது.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் ஆரம்பமாவதற்கு முன்னர் யாரும் எதிர்பார்க்காத வகையில் அஸ்கர் ஆப்கன் அணித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, குல்பதின் நைப் அணித் தலைவராக நியமிக்கப்பட்டார். பின்னர் சில சர்ச்சைகளால் அவரும் அணித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார்.

அவரை தொடர்ந்து டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி-20 அணித் தலைவராக ரஷித் கான் நியமிக்கப்பட்டார்.

சமீபத்தில் நடைபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான தொடரில் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தி ஆப்கானிஸ்தான் அணி ஒருநாள் மற்றும், டெஸ்ட் தொடரில் படுதோல்வி அடைந்தது.

இந்த நிலையிலேயே, ஆப்கானிஸ்தான் அணியின் டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி-20 அணித் தலைவராக அஸ்கர் ஆப்கன் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.




# யூரோ சம்பியன்ஸ் லீக்; மெஸ்ஸிக்கு ஓய்வு

யூரோ சம்பியன்ஸ் லீக் போட்டியில் இன்டர் மிலான் அணியை எதிர்த்து விளையாடும் போட்டியில் மெஸ்ஸிக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

யூரோ சம்பியன்ஸ் லீக் கால்பந்தில் பார்சிலோனா 'எவ்' பிரிவில் இடம் பிடித்துள்ளது. பார்சிலோனா ஏற்கனவே லீக் ஆட்டங்களில் சிறப்பாக விளையாடி அடுத்த சுற்றுக்கு முன்னேறி விட்டது.

இறுதி லீக் ஆட்டத்தில் பார்சிலோனா அணி, இன்டர் மிலான் அணியை எதிர்கொள்கிறது. இத்தாலியில் நடைபெறும் இந்தப் போட்டியில் மெஸ்ஸிக்கு ஓய்வு வழங்கியுள்ளது பார்சிலோனா. மேலும், ஜெரார்டு பிக்காய், செர்ஜி ரொபெர்ட்டோ ஆகியோருக்கும் ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது.

'எவ்' பிரிவில் இடம்பெற்ற பார்சிலோனா அணி 5 போட்டிகளில் விளையாடி 3 வெற்றி, 2 சமநிலையுடன் 11 புள்ளிகளுடன் முதல் இடத்தில் உள்ளது. இன்டர் மிலான், டாட்மண்ட் அணிகள் தலா 7 புள்ளிகள் பெற்றுள்ளன.

**வாடகைக்கு**

நல்லூரில் தனிஅறை, இணைந்த குளியலறை, சிறிய சமையலறை, ஹோல் உடன் வீட்டின் அனெக்ஸ் பெண்களிற்கு வாடகைக்கு.

தொடர்பு:- 071 614 3702

# கோக்லி காட்டாட்டம்
# தீவுகளை பந்தாடியது இந்திய அணி



கோக்லியின் அதிரடியாட்டம் கைகொடுக்க தீவுகளை வீழ்த்தி இந்திய அணி 67 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2:1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

மேற்கிந்தியத்தீவுகள் அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு மூன்று ரி-20 போட்டிகளில் விளையாடி வருகின்றது. இதில் இரண்டு போட்டிகள் முடிவடைந்த நிலையில் 1:1 என்ற கணக்கில் இரு அணிகளும் சமநிலையில் காணப்பட்டன. இந்த நிலையில் வெற்றி பெறும் அணி தொடரைக் கைப்பற்றும் என்ற நிலையில் நேற்று மூன்றாவது போட்டி மும்பை வான்கடேயில் நேற்று இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் இந்திய அணியைத் துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. களமிறங்கிய இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரோகித், கே.எல்.ராகுல் களமிறங்கினர். அவர்கள் இருவரும் அணிக்கு சிறப்பான அடித்தளத்தையிட்டனர். அணி 135 ஓட்டங்கள் பெற்ற போதே முதலாவது இலக்கு இழக்கப்பட்டது. ரோகித் சர்மா கடந்த இரண்டு போட்டிகளிலும் பெரிதாக ஓட்டங்களைப் பெறவில்லை. இந்தப் போட்டி அவரது சொந்த மைதானத்தில் இடம்பெற்றதால் அவர் மீது பெரும் எதிர்பார்ப்பு காணப்பட்டது. அவர் 34 பந்தில் 71 ஓட்டங்களைப் பெற்றார். பின்னர் களமிறங்கிய பந்த் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். அடுத்து வந்த கோக்லி அதிரடி காட்டினார். கோக்லியும் கே.எல். ராகுலும் இணைந்து மாறி மாறி வாண வேடிக்கை காட்டினர். தீவுகளின் பந்து வீச்சாளர்கள் கதிகலங்கும் அளவுக்கு பந்துகள் எல்லைக் கோட்டை தொட்ட வண்ணமிருந்தன. கே.எல். ராகுல் 91 ஓட்டங்களைப் பெற்று சதத்தை தவற விட்டு ஆட்டமிழந்தார். மறுமுனையில் கோக்லி 7 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 29 பந்தில் 70 ஓட்டங்களைக் குவித்தார். அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 240 ஓட்டங்களைக் குவித்தது.

பதிலுக்கு இமாலய இலக்கை நோக்கிக் களமிறங்கிய மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு ஆரம்பமே சமி அதிர்ச்சியைக் கொடுத்தார். அணி 12 ஓட்டங்களைப் பெற்ற போது கிங் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்த ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சிம்மொன்ஸும் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். சிம்மொன்ஸ் கடந்த போட்டியில் சிறப்பாக விளையாடி அணியின் வெற்றிக்கு காரணமாக இருந்தார். பூரன் வந்த வேகத்திலேயே ஓட்டமெதனையும் பெறாது நடையைக் கட்டினார். பின்னர் களமிறங்கிய பொல்லார்ட், ஹட்மெயர் இணை அணிக்கு ஓரளவு நம்பிக்கையளித்தது. பொல்லார்ட் வான்கடே மைதானத்தில் தனது திறமையை நிரூபித்திருந்தார். அவர் 6 ஆறு ஓட்டங்கள் 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 68 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். பின்வரிசை வீரர்கள் ஒற்றையிலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்களையே பெற்று 67 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பந்து வீச்சில் சாஹல், புவனேஸ்குமார், யாதவ், சமி ஆகியோர் தலா இரண்டு இலக்குகளைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக இந்திய அணி வீரர் கே.எல்.ராகுல் தெரிவானார். தொடராட்ட நாயகனாக இந்திய அணித் தலைவர் கோக்லி தெரிவு செய்யப்பட்டார்.

## மரண அறிவித்தல்

### திருமதி ஏஞ்சலின் கலாநிதி மகேந்திரக்குமார் (Kala Miss)

(இளைப்பாறிய ஆசிரியை, யாழ். உடுவில் மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியை, யாழ். மத்தியகல்லூரி)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஏஞ்சலின் கலாநிதி மகேந்திரக்குமார் (Kala Miss) கடந்த (10.12.2019) செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - செல்வரத்தினம் தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் தவமணி தம்பதிகளின் அன்பு மருமகளும் பெஞ்சமின் மகேந்திரக்குமார் (சனா -Retired Manager Jaipur foot Program)

அவர்களின் அன்பு மனைவியும், மெலனி மதுமிதா (Sydney) ஹெலன் லாவண்யா (Uduvil Girls` College) ஆகியோரின் அருமைத்தாயாரும் Dr. செல்வேந்திரன் (Australia), A.H ஞானராஜன் (St.John`s College) ஆகியோரின் அன்பு மாமியாரும், கேபஸ், எஸ்தர், எலைஜா ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும், மாலதி (London), வசந்தி (Colombo), சுகந்தி (Canada) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் (14.12.2019) சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு Church Lane உடுவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பண்டத்தரிப்பு சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 610 3581, 021 225 6048** **தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### தம்பையா சிவபரஞ்சோதி

(மண்டைதீவு - 06)

(ஓய்வு பெற்ற ஆசிரியர், யா/ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, சமாதான நீதிவான்)

மண்டைதீவு 6- ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.81, மணியகாரன் வீதி, கொக்குவில் கிழக்கினை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சிவபரஞ்சோதி நேற்றுமுன்தினம் (10.12.2019) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பு - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராசம்மா (விமலா - ஓய்வு பெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், பலராம் (ஆதவன் - லண்டன்), நிசாந்தி (லண்டன்), உமைசொரூபி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திலகராஜா, அச்சுதன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆதிவ் இனது அன்புப் பேரனும், அகிலத்திருநாயகி, அரங்கநாயகி ஆகியோரின் பாசமிகு தம்பியும், காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் குணரட்ணசிங்கம், சோதிவேற்பிள்ளை, காலஞ்சென்ற நல்லநாயகம் மற்றும் கமலாதேவி, குணநாயகம் நிர்மலாதேவி, இராமநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சாராதாம்பிகை, புஸ்பராணி இரவீந்திரநாத், செல்வராணி, சண்முகராசா, பரமநாயகி ஆகியோரின் அன்புச் சகலனும், ஜசிந்திராவின் அன்புச் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.12.2019) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல.81, மணியகாரன் வீதி, கொக்குவில் கிழக்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு தலைக்கீரி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**81, மணியகாரன் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்**

**தகவல்:**
**சி.பலராம் (மகன் - ஆதவன்)**

**075 267 3301, 076 284 8457** (cs.29258) (13.17)

**துரித தபால்கள் பொதிகள் சேவை**

எங்கும் இல்லாத மிகக் குறைந்த கட்டணத்தில் 11Kgக்கு மேற்பட்ட பொதிகளுக்கு

| | |
|---|---|
| UK | - 525/= |
| Germany | - 625/= |
| Australia | - 850/= |
| Swiss | - 850/= |

TCN EXPRESS
கொழும்பு, யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி.
Hotline - 077 755 4528

## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி நடேசபிள்ளை




யாழ் புங்குடுதீவு **3**ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, வவுனியா, பண்டாரிக்குளம் ஆகியவற்றினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி நடேசபிள்ளை கடந்த **(10.12.2019)** செவ்வாய்க்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் - சுந்தரம் தம்பதியினரின் கனிஷ்ட புதல்வியும் காலஞ்சென்றவர்களான சிவஞானபிள்ளை- நாகம்மா தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற நடேசபிள்ளை (கடை அப்பு) அவர்களின் ஆருயிர் துணைவியும் காலஞ்சென்றவர்களான நாகராசா, இராசம்மா, நாகரெத்தினம் மற்றும் உலகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானவேல் (விரிவுரையாளர், மகரகம தேசிய கல்வியியற் கல்லூரி), நாகநந்தினி(கனடா), மதனரூபா (ஆசிரியர், வ/நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்), சக்திவேல் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கனகதாரிணி (ஆசிரியை, கொ/நல்லாயன் கன்னியர் மடம், கொட்டாஞ்சேனை), ஞானகுருபரன் (மகாவலி ஸ்டோர்,கொழும்பு, (கனடா), கருணாநிதி (விவசாயத் திணைக்களம் - செட்டிகுளம்), சுபாஜினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்,மேத்ரா, அவிக்னா, தருணிக்கா, கயூரிக்கா, பூர்விக்கா, ஆர்யன், அர்வின் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை **(13.12.2019)** வெள்ளிக்கிழமை முற்பகல் **10**மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் நண்பகல் **12** மணியளவில் தட்சநாதன்குளம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**2C, வியாசகர் வீதி,**
**பண்டாரிக்குளம்,வவுனியா.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**0242225838, 0776059573, 0776109910, 0770889694**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.